தர்மசக்கரம்



சித்தார்த்தி ஹு ஆவணி மீ சக்கரம் 28 ஆரம் 8

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா.

Chandra Arts

ஸ்ரீ தாயுமான சுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமான சுவாமிகள் கோயில் திருப்பணிக்குத் தொகை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆஸ்ரம கட்டிடவேலை பூர்த்தியாகி உள்ளது. இனி கோயில் திருப்பணியைத் துவக்கவேண்டும். ஜூலை மாத நன்கொடைகளின் விவரம் வருமாறு :

1979 ஜூலை மாத நன்கொடை விவரம்

தேதி	விலாசம்		ரூபாய்
	ஜூன் மாதம் முடிய நன்கொடை		3 56 334
2–7–79	அருள்துணை மாதர் சங்கம்	மதுரை	400
	ஸ்ரீமத் சுவாமி பரமானந்தர், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆஸ்ரமம், ஜெகதலா, நீலகிரி		130
3–7–79	ஸ்ரீ K. M. நாகசங்கரன்	மயிலாப்பூர், சென்னை	101
	ஸ்ரீ K. நாராயணராவ்	செம்பனூர் கோயில், தஞ்சை	100
4–7–79	ஸ்ரீ V. N. குமாரசாமி முதலியார்	மானியத அள்ளி, தர்மபுரி	101
5–7–79	ஸ்ரீ S. பிச்சைமணி	காமராஜ் பஜார், போடிநாயக்கனூர்	101
8–7–79	ஸ்ரீமதி சௌந்திரம் கைலாசம்	புதுடில்லி	100
11–7–79	ஸ்ரீ S. பாலகிருஷ்ண ரெட்டி	காட்டன்பெட், பெங்களூர்	101
12–7–79	ஓர் பக்தை	செவ்வாய்பேட்டை, சேலம்	255
	ஸ்ரீமதி நாகரத்தினம்மாள்	,, ,,	101
	ஸ்ரீ விசிறி K. S. சுந்தர மஹாலிங்கம் & சம்பூரணி	குகை, சேலம்	101
	,, V. R. கோவிந்தராஜன் ராஜேஸ்வரி	,, ,,	101
13–7–79	,, N. ரத்தினவேலு	துர்க்கையம்மன் கோவில்தெரு, திருநெல்வேலி	105
	,, S. L. P. கோதண்டராமராஜா	குமாரசாமி நகர், ராஜபாளையம்	101
	,, R. சண்முகம்	ஆவன்சின்னம் பாளையம், பொள்ளாச்சி	100
17–7–79	,, கா. மு. நஞ்சப்பன்	பாப்பாரப்பட்டி, தர்மபுரி	101
19–7–79	ஓர் அன்பர்	ஹனுமந்தபுரம் தெரு, தென்காசி	101
23–7–79	அமரர் ஸ்ரீ K. C. S. காசிநாடார்	ராயபுரம், சென்னை	999
	ஸ்ரீ மு. து. ராமையாபிள்ளை	நல்லுக்குறிச்சி, அருப்புக்கோட்டை	201
	,, V. பாலசுப்பிரமணியம்	உத்யோகமண்டலம், கேரளா	101
	S. V. K. வெங்கிடாஜலம் செட்டியார், பெரியகடைவீதி, புதுக்கோட்டை		101
27–7–79	ஸ்ரீ ராமகிருஷ்ண பக்தர்கள்	அருவங்காடு, நீலகிரி	239
30–7–79	ஸ்ரீ S. காசி விஸ்வநாத செட்டியார்	குகை, சேலம்	101
31–7–79	ஸ்ரீ M. S. ஆறுமுகம் செட்டியார்	ராஜபாளையம்	109
	ஸ்ரீ M. S. A. சங்கரலிங்கம்	,,	104
	ஸ்ரீ S. K. ஸ்ரீரங்க செட்டியார்	இளம்பிள்ளை, சேலம்	101
	இந்து சமய வளர்ச்சிக் கழகம் & யோகாசன ஆலயம் வசூல்	விருதுநகர்	250
	ஸ்ரீமதி ராஜாமணி மாரிசெட்டி	மேற்கு சி. ஐ. டி. நகர், சென்னை	101
	ஸ்ரீ V. M. K. மாரிமுத்து நாடார்	வள்ளலார் தெரு, விருதுநகர்	100
	ஸ்ரீ A. நடராஜன்	உள்தெரு, ,,	100

[தொடர்ச்சி பொருளடக்கத்தின் பின்புறம்]

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 28	சித்தார்த்தி ஞூ ஆவணி மீ	ஆரம் 8

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்மசக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்துச் செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்துச் செலுத்த இயலுகிற வர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

இலவச சந்தா: தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அன்பர்களின் உதவியால் அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் இனமாகத் தொடர்ந்து அனுப்பப்பெற்று வருகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-00. வெளிநாடு வருட சந்தா ரூ. 20-00

ஸ்ரீ தாயுமான சுவாமி கோயில் திருப்பணி நன்கொடை விவரம்

[அட்டை 2ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீ M. M. அய்யாச்சாமி நாடார்	தெப்பம் தெற்கு பஜார், விருதுநகர்	100
ஸ்ரீ M. V. R. வடிவேல்	அழகர்சாமிநாயக்கர் தெரு, ,,	100
ஸ்ரீ T. M. M. ராஜாக்கனி நாடார்	பஜார் தெரு, ,,	100
ஸ்ரீ N. P. குப்புசாமி	வேலூர், சேலம்	100
சிவகாமி டெக்ஸ்டைல்ஸ்	,,	100
ராமலிங்க சௌடேஸ்வரி மாதர் சங்கம்	குகை, ,,	100
ஸ்ரீ P. வாசுதேவ ஆச்சாரி	குகை ,,	100
ஸ்ரீமதி R. இந்திரா ராமசாமி செட்டியார்	கடைவீதி, வத்தலக்குண்டு	100
ஸ்ரீ S. ஆறுமுகசாமி, ரவி பெயின்ட்ஸ்,	டாடகுளவேரிதெரு, விஜயவாடா	100
ஓர் பக்தை	விருதுநகர்	500
ஸ்ரீமதி வைதேகி கனகராஜ்	U. S. A	101
ஸ்ரீ P. K. C. கந்தசாமி செட்டியார்	இளம்பிள்ளை, சேலம்	101
ஸ்ரீ N. P. தங்கவேல்	நரசீபுரம், கோவை	100
ஸ்ரீ K. S. சிவசுப்பிரமணிய கவுண்டர்	அவிநாசி	100
ரூ. 100க்குக்கீழ் வந்த நன்கொடை மொத்தம்		1 511
	ஆக மொத்தம் ரூ.	3 64 454

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—கம்பத்தில் 19—8—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ முத்தையாபிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி: மதிய உணவிற்கு ரூ. 1-00 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை ஜில்லா—தேனியில் 22—8—79 புதன்கிழமை

இடம்: கணேச கந்தப்பெருமாள் ஆலயம், தியாகராஜ நகர்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி: மதிய உணவிற்கு ரூ. 1-00 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 26—8—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நிவ்யானந்தர்

[அட்டை நான்காம் பக்கம் பார்க்க]

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 28 | சித்தார்த்தி ௵ ஆவணி ௴ | ஆரம் 8

பிரார்த்தனை

त्वमादिदेवः पुरुषः पुराणस्त्वमस्य विश्वस्य परं निधानम् ।
वेत्तासि वेद्यं च परं च धाम त्वया ततं विश्वमनन्तरूप ॥

— भगवद्गीता

த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்த்வமஸ்ய
விச்வஸ்ய பரம் நிதானம் ।
வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம
த்வயா ததம் விச்வமனந்த ரூப ॥

— பகவத்கீதை

எண்ணில்லா வடிவங்களையுடைய முதற்பொருளே! தொன்மைப்பொருளும் இவ்வுலகுக்கு மேலான இருப்பிடமும் தாமே யாவீர். அறிபவரும், அறியப்படுபொருளும், அருட்பெருநிலமும் ஆவீர். உம்மால் உலகம் யாவும் நிறைந்துள்ளது.

பார்த்தஇடம் எல்லாம் பரவெளியாய்த் தோன்றஒரு
வார்த்தை சொல்லவந்த மனுவே பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

தளரா நெஞ்சம் பெருவாழ்வுக்குற்ற துணையாகிறது.

மனம் மாறுதற்கேற்ப மனிதனும் மாறுபாடடைகிருன்.

நண்பன் யார் என்பதை நெருக்கடி விளம்பரப்படுத்துகிறது.

தன் மனதை வென்றவனை மற்றவர்கள் மேன்மைப்படுத்துகின்றனர்.

அடைபட்டுக் கிடக்கும் உள்ளத்திற்குத் திறவுகோலாயிருப்பது அன்பு.

பிரதிகூலமான சூழ்நிலேயை அனுகூலமானதாக மாற்றியமைப்பது ஆண்மை.

பெரும் பேச்சும், பேச்சின்மையும் ஆகிய இரண்டும் பொல்லாதவைகளாம்.

உடலின் மெலிவை மெலிவெனலாகாது. உள்ளத்தின் மெலிவே மெலிவாகிறது.

கடவுளின் நாமம் உள்ளத்தில் உரு ஏறும் அளவு மனிதனிடத்தில் திரு ஏறுகிறது.

தூய்மையும், தொண்டும் வாய்க்கப்பெற்றவன் துவிஜன் அல்லது இரு பிறப்பாளன் ஆகிருன்.

வீரன் ஒருவன் யாருக்கும் தீங்கு செய்யாமையினல் அவன் அஹிம்சை வடிவினன் ஆகிருன்.

தாங்குவது, தாக்குவது; போற்றுவது, தூற்றுவது ஆகியவைகளில் சான்ருேன் கட்டுப்படுவதில்லே.

சுயநலத்தை ஒழித்தவன் சான்ருேன் ஆகிருன். சுயநலத்தை அறவே ஒழித்தவன் இறைவன் ஆகிருன்.

புகழுக்கும், பொருளுக்கும் மனிதன் படைத்துள்ள பேராசை அவனுடைய பண்பைப் பாழ்படுத்துகிறது.

முகத்துக்கு அழகு தருவது மேல்தோல் அன்று. உள்ளே ஒளிரும் உண்மையும் தூய்மையும் அதை அழகுபடுத்துகின்றன.

உலேயில் அடைபட்டிருக்கும் அக்னி ஆற்றலாக மாறுகிறது. அங்ஙனம் உள்ளத்தினுள் அடக்கப்படும் சினம் சிவசொரூபமாகிறது.

உடல் உழைப்பை ஒதுக்கிவிட்டு யந்திரத்தைப் பயன்படுத்துவதால் தேவாலயமாக இருக்கவேண்டிய உடல் ஒன்றுக்கும் உதவாததாகப் போகிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

குடும்பஸ்தனயிருந்த மகிமசரணைப் பார்த்து இப்பொழுது பரமஹம்சர் உரையாடினர்.

பரமஹம்சதேவர் : "உலகத்தை அறவே துறந்துவிட வேண்டிய அவசியம் யாது? மனப் பற்று நீங்கினுல் போதுமானது. ஆனுல் சாதனம் செய்வதினின்று யாரும் பின்வாங்க லாகாது. குடும்பஸ்தனயிருந்தாலும் ஐம்பொறி களை எதிர்த்துப் போர்புரிதல் அவசியம்.

"கோட்டைக்குள்ளிருந்து கொண்டு எதிரியை எதிர்த்துப் போர்புரிவதில் வசதி மிக உண்டு. கோட்டைக்குள்ளிருப்பவனுக்குத் தக்க பாது காப்பு அமைந்திருக்கிறது. இவ்வுலகம் போக பூமி. இதனுள் வந்திருக்கிறவர்கள் சிறிது காலம் போகத்தை அனுபவிக்கலாம். போகத் தின் பாங்கு எத்தகையது என்பதை அனுபவ பூர்வமாகக் கண்டறிந்து கொண்டான பிறகு போகப் பொருள்களை ஒன்றன்பின் ஒன்ருக விட்டு ஒழித்தல் வேண்டும். ஒரு தடவை இடுப் பில் தங்க அரைநாண் போட்டுக் கொள்ள வேண்டுமென்னும் ஆசை எனக்கு உண்டா யிற்று. நான் விரும்பியபடியே தங்க அரைநாண் ஒன்று எனக்கு அகப்பட்டது. ஆனுல் அதை அணிந்து கொண்ட அக்கணமே அதை அப் புறப்படுத்த வேண்டுமென்னும் மனப்பான்மை எனக்கு வந்தது.

"ஆத்ம சாதகர்கள் பொதுவாக வெங்காயம் அருந்துவதில்லை. அதை அருந்தும் வாய்ப் பொன்று ஒரு தடவை எனக்கு நேர்ந்தது. அருந்திய பொழுது இங்ஙனம் நான் விசாரம் பண்ணினேன், 'ஓ மனமே! இது வெங்காயம்.' வாயில் வெவ்வேறு இடங்களில் அதை நகர்த் தினேன். பிறகு அதை நான் துப்பி விட்டேன்."

பாடகர் ஒருவர் வருகையைத் தக்ஷிணேசுவர ஆலயத்திலிருந்தவர்கள் எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். அந்தப் பாடகரும் அவரைச் சேர்ந்த கூட்டத்தாரும் பக்திப் பாடல்கள் பாடு தற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. "பாடகர் எங்கே?" என்று பரமஹம்சதேவர் இடை யிடையே விசாரித்துக் கொண்டிருந்தார்.

மகிமசரண் : "இப்பொழுது இருக்கிறபடி நாங்கள் நலனுற்று இருக்கிறேம்."

பரமஹம்சதேவர்: "ஐயனே அது போதாது. ஆண்டு முழுதிலும் இந்த நலன் நிலைத்திருப் பது முற்றிலும் அவசியமாகிறது."

வெளியே திண்ணையில் அமர்ந்து கொண்டி ருந்த பக்தர் ஒருவர் பகர்ந்ததாவது, "பாடகர் வந்து விட்டார்." அதைக் கேட்ட பரமஹம்சர் பெருமகிழ்வு அடைவாராயினர். "ஆ! அவர் வந்து விட்டாரா?" என்று அவர் இயம்பினர்.

பரமஹம்சதேவருடைய அறைக்கு வடகிழக் குப் பக்கத்திலிருந்த நீண்ட திண்ணையில் பாய் கள் விரிக்கப்பட்டன. பரமஹம்சதேவர் இயம் பியதாவது: "அப்பாய்களின் மீது சிறிது கங்கா ஜலம் தெளியுங்கள். அவைகளின் மீது உலகப் பற்றுடையவர்கள் பலர் அமர்ந்திருந்தனர்." பாலீ என்னும் ஊரிலிருந்து பயரி பாபுவுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்பாலர் சிலர் தக்ஷிணேசுவர ஆலயத்திற்குத் தரிசனத்திற் காக வந்திருந்தனர். அங்ஙனம் வந்திருந்த தாய் மார்களும் கீர்த்தனங்களைக் கேட்க விரும்பி னர். பக்தர் ஒருவர் பரமஹம்சதேவரிடம் இயம்பியதாவது: "இத்தாய்மார்கள் அறைக் குள்ளே அமர்ந்துகொண்டு பாடல்களைக் கேட்க விரும்புகின்றனர். அதற்கு அனுமதி கிடைக் குமா என்று அவர்கள் கேட்கின்றனர்." இதற் கிடையில் கீர்த்தனங்களும் துவங்கிவிட்டன. பரமஹம்சதேவர் கொடுத்த விடையாவது, "இல்லை, இல்லை. இங்கே அறையில் அமர்தற்கு இடம் எங்கே?"

நாராயணன் என்னும் சிறுவன் வந்து சேர்ந் தான். பரமஹம்சதேவரை அவன் வணங்கினன். பரமஹம்சதேவர் அன்புடன் அவனுக்கு இயம் பியதாவது: "நீ ஏன் இங்கு வந்துள்ளாய்? உன்னுடைய உற்ருர் உறவினர் வரம்புகடந்து உன்னை உபத்திரவப்படுத்தியிருக்கிருர்கள்!" வந்திருந்தவனுக்கு அருந்துதற்கு ஏதாவது தரும்படி பாபுராமிடம் பரமஹம்சதேவர் சைகை யின் மூலமாகத் தெரிவித்தார். பரமஹம்சதேவ ருடைய அறைக்குள்ளே நாராயணன் நுழைந் தான். சிறிது நேரத்திற்குள் பரமஹம்சதேவரும்

நாராயணனுக்குத் தம் கைப்பட ஏதாவது வழங்க அறைக்குள் நுழைந்தார். அச்செயலை நிறைவேற்றியான பிறகு அவர் திண்ணைக்குத் திரும்பிப்போய்விட்டார்.

பக்தர்கள் பலர் ஆங்குக் குழுமியிருந்தனர். விஜயர், மகிமசரண், மகேந்திரநாதர், இளைய கோபால் ஆகியவர்கள் அக்கூட்டத்தில் இருந்தனர். அறைக்குள்ளிருந்து நாராயணனும் திண்ணைக்குத் திரும்பிவந்து பரமஹம்சதேவருக்கு அருகில் அமர்ந்துகொண்டான்.

பிற்பகல் சுமார் மூன்றுமணிக்கு ஆதார் ஆங்கு வந்துசேர்ந்தார். அவரைப் பார்த்த பரமஹம்சருக்கு மகிழ்வு மிக உண்டாயிற்று. வந்தவர் பரமஹம்சதேவரை வணங்கிவிட்டுத் தரையிலமர்ந்துகொண்டார். தமக்கு அருகில் வரும்படி பரமஹம்சர் அவருக்குச் சைகைகாட்டினார். கீர்த்தனங்கள் பாடுவது முடிவுற்றது. குழுமியிருந்த பக்தர்களும் கலையலாயினர். ஒரு சிலர் பூங்காவினுள் உலாவிக்கொண்டிருந்தனர். மற்றும் சிலர் தரிசனத்திற்காகக்கோயில்களுக்குச் சென்றனர்.

மாலை ஆராதனைக்குப் பிறகு கீர்த்தனங்கள் பாடுவதைப் பரமஹம்சதேவருடைய அறைக்குள்ளேயே வைத்துக்கொண்டனர். அறைக்குள்ளே மற்றும் ஒரு தீபத்தை ஏற்றிவைக்கும் படி பரமஹம்சதேவர் பக்தர் ஒருவரிடம் வேண்டினார். இரண்டு தீபங்கள் அறையினுள் நன்கு பிரகாசித்துக்கொண்டிருந்தன.

விஜயரிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: "தாம் ஏன் ஆங்கு எட்ட அமர்ந்திருக்கின்றீர் ? சற்று அருகில் இங்கே வாருங்கள்." இப்பொழுது பாடிய கீர்த்தனங்கள் பிற்பகலில் பாடியவைகளைவிட அதிகமாகப் பக்தி ததும்பிக்கொண்டிருந்தன. ஆனந்த பரவசம் அடைந்தவராகப் பரமஹம்சதேவர் தாண்டவம் புரிந்தார். பக்தர்களும் அவரைச் சுற்றிக்கொண்டு நடனம் புரிந்தார்கள். நடனம் புரிகின்றபொழுது விஜயருடைய உடை நழுவியது. அதைப்பற்றிய உணர்ச்சி அவருக்கு உண்டாகவில்லை.

கீர்த்தனங்கள் பாடுவது முடிவுற்றன. எங்கேயோ நழுவிக்கீழே விழ்ந்துவிட்ட தம் திறவுகோலை விஜயர் தேடிக்கொண்டிருந்தார். புன்சிரிப்புடன் பரமஹம்சதேவர் அவரிடம் பகர்ந்ததாவது: "அதைப் பற்றிய கவலை உமக்கு மீண்டும் எதற்காக? பெட்டி, சாவி ஆகியவைகளைப் பற்றிய கருத்துக்களையெல்லாம் ஒதுக்கி வைப்பது நல்லது."

கிஷோரி என்னும் பக்தர் பரமஹம்சதேவரை வணங்கிவிட்டு விடைபெறும் தறுவாயிலிருந்தார். அவருடைய நெஞ்சை அன்புடன் தொட்டுப் பரமஹம்சதேவர் அவரை ஆசீர்வதித்தார். புறப்பட்டுப் போவதற்கும் அவர் அனுமதி கொடுத்தார். அவருடைய இன்சொல்லில் அன்பு ததும்பிக்கொண்டிருந்தது. மகேந்திரரும் கோபாலும் பரமஹம்சதேவரை வணங்கினர். அவர்களும் விடைபெறும் தறுவாயிலிருந்தனர். அன்பு ததும்பிய அதே இன்சொற்கள் அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

"நீங்கள் நாளை காலையில் புறப்பட்டுப் போனால் போதாதா ? இரவில் ஒருவேளை உங்களுக்குச் சளிப்பிடித்துக்கொள்ளக்கூடும்." மகேந்திரரும் கோபாலும் பரமஹம்சதேவரோடு அன்று இரவு தக்ஷிணேசுவரத்தில் தங்கியிருக்கத் தீர்மானித்தார்கள். ஆதலால் சில அன்பர்களோடு அவர்கள் தரையின் மீது அமர்ந்தனர்.

அன்று நாள் முழுதும் பரமஹம்சதேவருக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளுவதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. நாள் முழுதும் பக்தர்கள் தொடர்ந்து அவரைச் சூழ்ந்துகொண்டே இருந்தனர். இப்பொழுது சிறிது நேரம் அவர் அறையினின்று வெளியே சென்று திரும்பிய பொழுது ராம்லாலிடமிருந்து பாடல் ஒன்றை மகேந்திரர் எழுதி வாங்குவதைப் பார்த்தார்.

பரமஹம்சதேவர்: "நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் ?"

பாடலொன்றைத்தாம் எழுதிக்கொண்டிருந்ததாக மகேந்திரர் தெரிவித்தார். அந்தப் பாடலின் தலைப்பையும் அவர் குறிப்பிட்டுச் சொன்னார். அப்பொழுது, அப்பாடல் மிக நீண்டதாயிற்றே என்று பரமஹம்சதேவர் அறிவித்தார். மகேந்திரர் இரண்டொரு வரிகளை எழுதிவிட்டு எழுத்துவேலையை நிறுத்தினர். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு பரமஹம்சதேவர் இரவு உணவு அருந்த ஆரம்பித்தார். இரண்டொரு பூரிகளும், ரவைபாயசமும் அவருக்கு உணவு ஆயின. அவருக்கு அருகில் குத்துவிளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. மகேந்திரர் அவருக்கு அருகில் அமர்ந்தார். அறையிலே பட்சணங்கள்

எவையேனும் இருந்தனவா என்று பரமஹம்ச தேவர் விசாரித்தார். மகேந்திரர் கொண்டு வந்திருந்த சந்தேசம் என்னும் பால் பட்சணம் அலமாரியில் இருந்தது. அதில் தமக்கு ஒன்று எடுத்து வழங்கும்படி பரமஹம்சதேவர் தெரி வித்தார். மகேந்திரர் அலமாரிக்குள் தேடிப் பார்த்தார். ஆனல் பட்சணங்களெல்லாம் காணமல் போயின. மகேந்திரருக்குத் திகைப்பு மிக உண்டாயிற்று. அப்பட்சணங்களையெல் லாம் வந்திருந்த பக்தர்களுக்கு வேறு யாரோ ஒருவர் எடுத்து வழங்கி விட்டார்.

இரவு போஜனம் முடிந்தபிறகு பரமஹம்ச தேவர் சிறிய கட்டிலின் மீது அமர்ந்திருந்தார். அவருக்கு அருகில் தரையில் மகேந்திரர் அமர்ந் தார். நாராயணனைக் குறித்துப் பேச்சுக் கிளம் பியது. அப்பேச்சுக்கிடையில் பரமஹம்ச தேவருக்குச் சிறிது மன நெகிழ்ச்சி நேர்வ தாயிற்று. பரமஹம்சதேவர் "இன்று நான் நாராயணனைப் பார்த்தேன்."

மகேந்திரர்: "ஆம் ஐயனே, அவனுடைய கண்கள் நனைந்திருந்தன. அவனுடைய முகத் தைப் பார்த்தபொழுது எனக்கு அழுகை வந்து விட்டது."

பரமஹம்சதேவர்: "நாராயணனைப் பார்க் கிறபொழுதெல்லாம் தாயின் அன்பு என் உள் ளத்தில் உருவெடுக்கிறது. அவன் இங்கே வருவதை முன்னிட்டு அவனுடைய சொந்தக் காரர்கள் அவனை அடித்து உபத்திரவப்படுத்து கின்றனர். அவனைக் காப்பாற்றுவதற்கு யாருமேயில்லை."

மகேந்திரர்: "அன்றொருநாள் அவனுடைய புஸ்தகங்களையெல்லாம் ஹரிபாதர் வீட்டில் வைத்துவிட்டுத் தங்களைத் தரிசிக்க அவன் ஓடி வந்துவிட்டான்."

பரமஹம்சதேவர்: "அவன் அப்படிச் செய் திருக்கலாகாது."

பிறகு பரமஹம்சர் சிறிது மௌனமுற்று இருந்து விட்டுப் பேச்சைத் தொடங்கினர்.

பரமஹம்சதேவர்: "அவனிடத்துப் பண் பாடு மிக இருக்கிறது. கீர்த்தனங்களைக் கேட் டுக் கொண்டிருந்ததற்கிடையில் அவனைப் பார்த்ததும் என் கவனம் அவனிடத்துப் போய் விட்டது. அதுவே அவனுடைய பண்புக்கு அறிகுறியாயிருந்தது. பக்திப் பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்ததை நிறுத்தி வைத்து விட்டு நாராயணனைப் பார்க்க நான் அறைக் குள்ளே சென்றேன். அத்தகைய நிகழ்ச்சி முன்பு நிகழ்ந்தது கிடையாது."

பரமஹம்சதேவர் மீண்டும் சிந்தனையில் மூழ்கியிருந்தபின் திருவாய் மலர்ந்தருளினர்.

பரமஹம்சதேவர்: "பரவச நிலையிலிருந்து கொண்டு அவனுடைய மனப்பாங்கு எப்படி இருந்தது என்று கேட்டேன். தான் அமைதி யுற்றிருந்ததாக அவன் இயம்பினன். (நரேந் திரரைப் பார்த்து) பெற்றோர்கள் தங்கள் செல்வனைப் பேணுவது போன்று இடை யிடையே அந்த இளைஞனுக்கு நீ உணவு படைப்பாயாக!"

பரமஹம்சதேவர் பிறகு தேஜ்சந்திரனைப் பற்றிப் பேசலானர்.

பரமஹம்சதேவர்: (மகேந்திரரிடம்) "தேஜ் சந்திரனை அடுத்து நீ சந்திக்கிறபொழுது அவன் என்னைப்பற்றி என்ன கருதுகிறன் என்று கேட்டுப்பார். என்னை ஒரு ஞானியாகக் கருதுகின்றனா? அல்லது வேறு என்னதான் அபிப்ராயம் அவன் படைத்திருக்கிறன்? பொதுவாக அவன் வாய் திறந்து எதுவும் பேசுவது கிடையாது. (கோபாலைப் பார்த்து) தேஜ்சந்திரனைச் சந்தித்து அவன் ஒவ்வொரு சனிக்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் வர வேண்டுமென்று தெரிவிப்பாயாக. மகேந்திர ரைப் பார்த்து நான் உன்னுடைய பாடசாலை யில் வந்து இருந்துகொண்டு அவனைப் பார்க்கலாமா?"

மகேந்திரர் தமக்குள்ளேயே யூகிக்கலானர். பரமஹம்சதேவர் தம்முடைய பாடசாலையில் வந்து இருந்துகொண்டு நாராயணனைச்சந்திக்க விரும்புகின்றார். ஆதலால் அவர் தம் குரு தேவரிடம் இங்ஙனம் பகர்ந்தார்: "எங்கள் பாடசாலை தங்களுக்குப் பொருத்தமான இட மாகாது. எங்கள் வீடு பாடசாலைக்குப் பக்கத் திலிருக்கிறது. ஆங்கிருந்துகொண்டு தாங்கள் அவனைக் காணலாம்."

பரமஹம்சதேவர்: "அதுமட்டுமன்று. உன் பாடசாலையில் கல்வி பயின்று வருகிற மாணக் கர்களுக்குள் தெய்விக மனப்பான்மை படைத் தவர்கள் ஒரு சிலராவது இருக்கிறர்களா என்று பார்க்க விரும்புகிறேன்."

மலைவளர் காதலி

(தாயுமானவர் இயற்றியது)

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகிஎழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சஹஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்திஎன்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்ச ரிக்கவசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடிஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவைஅரசே
வரைராசனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண்உமையே.

உயிரும் உடலும் ஒன்று. சிவனும் சக்தியும் இணைபிரியாதவர்கள். அர்த்தநாரீஸ்வரன் என்று சிவனார் போற்றப்படுகிறார். மாது ஒரு பாகம் ஆனவன் என்பது அதன் பொருள். ஆரணி சடைக்கடவுள் என இறைவன் இயம்பப்பெறுகிறார். ஆத்திமாலையை ஜடா பாரத்திலே அணிந்திருக்கும் பெரியபொருள் என்பது இதன் விளக்கம். அன்னவரோடு இணைபிரியாதிருப்பவள் ஆரணி என இயம்பப் பெறுகிறாள். ஒரே சொல்லாகிய ஆரணி கடவுளுக்கு வருகின்ற பொழுது ஆர் அணி எனப் பிரிக்கப்படுகிறது. அதே சொல் பிரிவு படாத நிலையில் அம்பிகைக்கு விளக்கமாகிறது. வேத நாயகி என்பது இதன் பொருள். ஆர் அணி கடவுளும் ஆரணியாகிய அம்பிகையும் பக்தர்களால் போற்றுதற்குரிய மூர்த்திகளாக அமைந்திருக்கின்றனர். இக்கோட்பாட்டை எனப் புகழ என்னும் சொல் தொடர் விளக்குகிறது. அண்டநாயகியாகிய அம்பிகை அனந்தங்கோடி அண்டங்களையும் புல் முதல் பிரம்மா பரியந்தம் உள்ள அனந்தங்கோடி ஜீவாத்மாக்களையும் சர்வகாலமும் தோற்றுவித்துக்கொண்டே இருக்கிறாள். ஜகத் ஜனனியாகிய அவள் காலமெல்லாம் சேதன அசேதனங்களைப் பெற்றெடுத்துக் கொண்டேயிருப்பதனால் சலிப்படைவதில்லை. அகண்டாகாரத்தில் ஓடும் காலம் அவளிடத்து எந்த விதமான விகாரத்தையோ, தேய்வையோ, அழிவையோ உண்டு பண்ணுவதில்லை. அம்பிகையினிடத்துள்ள இந்த மகிமை அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையும் கன்னி யென மறைபேசும் என்னும் பாட்டமைப்புப் பொருளுக் கேற்ற பத அமைப்புடன் பொலிகிறது. காலமெல்லாம் அவள் அனைத்துக்கும் அன்னையாகவும் அதே வேளையில் கன்னியாகவும் திகழ்ந்து கொண்டிருப்பதற்குப் பிரபஞ்சத்தின் அமைப்பே சான்று ஆகிறது. மறைஎன்பது வேதம். அதுபிரபஞ்சத்துக்கும்பொருந்துகிறது, தீர்க்கதரிசிகள் எழுதிய நான்கு வேதங்களுக்கும் பொருந்துகிறது. தங்கத்தினாலாகிய நகைகளனைத்தும் தங்கமயமாகத் திகழுகின்றன. ஆனந்த சொரூபிணியாகிய அம்பிகையினிடத்திருந்து உயிர்கள் அனைத்தும் வந்திருப்பதால் இந்த உயிர்கள் யாவும் யாண்டும் ஆனந்தத்திலேயே திளைத்திருக்கின்றன. பறவைகளுள் அழகில் உச்சநிலையை எட்டியிருப்பது மயில். திரிபுர சுந்தரியாகிய அம்பிகையை மயிலே என விளிப்பது முற்றிலும் பொருந்தும். ஆனந்த ரூபமயிலே என்று அம்பிகையை அண்ணல் அழைப்பது அவருடைய அனுபூதிக்கும் எடுத்துக்காட்டு ஆகிறது. எட்ட இருந்து பார்க்கிற பொழுது ஆண்பாலர் வேறு பெண்பாலர் வேறு என்பதை மார்பிலுள்ள ஸ்தனபாரங்கள் விளக்கிக்காட்டுகின்றன. பழங்காலத்து ஐதிகப்படி பெண்பாலர் தங்களுடைய கொங்கைகளுக்குக் கச்சை கட்டிக் கொண்டிருந்தனர். பொதுப்பட பெண்பாலர்களிடத்துக் குறைநிலையொன்று உண்டு. அதாவது ஒரு பெண்பாலை மற்றொரு பெண்பால் சிலாகித்துப் பேசமாட்டாள். மற்றவளிடத்து இருக்கும் குறைநிலையே ஒருத்தி கண்ணில்படும். அந்த விதிக்கு விலக்காக மாதர்கள் அனைவரும் அன்னை பராசக்தியைக் கண்டு மகிழ்ந்து கொண்டும் அவளைப் பற்றிக்கூறி மகிழ்ந்துகொண்டும் இருக்கின்றனர். இவ்வுண்மையை அண்ணல் வார் அணியும் இருகொங்கை மாதர்மகிழ் என்னும் அடித் தொடரில் அற்புதமாக விளக்குகின்றார். கற்

பணியின் விளைவாகச் சிவனுருக்கு மனைவிமார் இருவர் என இயம்புவர். இருவருள் ஒருத்தி இறைவனுடைய செம்பாதியாக வடிவெடுத்து இருக்கின்றாள். அவள் உமை. மற்றொருத்தி ஜடா பாரத்திலிருந்துகொண்டு அருளைப் பொழிந்து கொண்டிருக்கின்றாள். அவள் கங்காதேவி. கங்காதேவியும், உமாதேவியும் சகதர்மிணிகள் ஆகின்றனர். சகதர்மிணிகளைச் சக்களத்திகள் என்று சொல்லுவது மரபு. சக்களத்திகள் உலக நடைமுறையில் சண்டைக்குப் பேர் பெற்றவர்கள். ஆனால் சிவனுர் குடும்பம் உலகப் போக்குக்கு விலக்காக அமைந்திருக்கின்றது. கங்காதேவி சர்வகாலமும் உமாதேவியைப் புகழ்ந்து போற்றிக்கொண்டே இருக்கின்றாள். அத்தகைய உமாதேவி தெய்விகப் பொலிவு பெற்ற ராமேஸ்வரக்ஷேத்திரத்தில் சான்னித்தியமாயிருக்கின்றாள். இக்கோட்பாட்டைக் கங்கை புகழ் வளமருவு தேவை அரசே என அடிகளார் போற்றுகிறார். ஹிமவானாகிய வரைராஜனுடைய இரண்டு கண்மணிகளுக்கு நிகர் அவருக்குப் புதல்வியாகத் தோன்றிய உமாதேவி. இக்கோட்பாட்டை வரைராஜனுக்கிரு கண்மணியாய் உதித்த மலைவளர் காதலிப்பெண் உமையே என அம்பிகை அழைக்கப்பெறுகின்றாள். மலைவளர் காதலி என்னும் சொற்றொடர் மலையரசனாகிய ஹிமவான் பெற்றெடுத்து அன்புடன் வளர்த்து வரும் செல்வி எனப் பொருள்படுகிறது.

தாயே, நீ முழுமுதற்பொருள். உனக்குப் புறம்பாக ஒன்றுமில்லை. சராசரங்கள் யாவும், சேதன அசேதனங்கள் யாவும் உன்னிடத்து அடங்கப்பெற்றவைகளாக இருக்கின்றன. ஆதலால் நீ பூரணி என்று பொருத்தமான பதத்தைக் கொண்டு போற்றப்படுபவள் ஆகின்றாய். நீ காலத்தையெல்லாம் கடந்தவள். ஆதலால் உனக்குத் தோற்றம் என்பது கிடையாது. தோற்றத்துக்கு வந்தவைகளுள் பழம் பொருள்கள் பல இருக்கின்றன. அப்பழம் பொருள்களுக்கெல்லாம் முன்னைப் பழம் பொருளாக நீ பொலிகின்றாய். ஆதலால் உன்னைப் புராதனி எனப் போற்றுவது பொருந்தும். நீ சிவனுருடைய சொரூபத்தில் செம்பாதி இடம் பெற்றவளாக இருக்கின்றாய். உன்னை முன்னிட்டே சிவனுருக்கு அர்த்தநாரீசுவரன் என்னும் பெயர் வந்துள்ளது. மாது ஒரு பாகம் ஆனவன் என்பது அதன் பொருள். சிவமும், சக்தியும் சொரூபத்தில் ஒன்று. செயலற்ற பகுதி சிவம் என்றும் செயல் உற்ற பகுதி சக்தி என்றும் அழைக்கப் பெறுகிறீர்கள். உங்களுடைய பேரிணக்கத்தால் பிரபஞ்சம் என்னும் திரிலோக குடும்பம் இனிது நடைபெற்று வருகிறது. உன் கணவன் சிவனுர் காலகாலன்என அழைக்கப்படுகிறார். அதாவது காலத்தையும் எடுத்து விழுங்கும் மரணமிலாப் பெரும் பொருளாக அவர் அமைந்துள்ளார். பெண்பால் ஒருத்தி கணவனோடு சேர்ந்து வாழுகிறபொழுது சத்வா என்றும், சுமங்கலி என்றும் அழைக்கப் பெறுகின்றாள். கணவனை இழந்த மாது ஒருத்தி விதவா என்றும் அமங்கலை என்றும் கூறப்பெறுகிறாள். நீயும் உன் தலைவனும் நித்தியப் பொருள்கள். ஆதலால் நீ சர்வகாலமும் சுமங்கலையாகவே சீருடன் இருந்து வருகிறாய். கணவனுடைய ஆதிக்கத்தில் அடங்கியிருப்பது பெண்பால் ஒருத்திக்குப் பெருமையாகிறது. பெண்டிற்கழகு எதிர் பேசாதிருத்தல் என்பது கோட்பாடு. சரீரத்தில் இருவர் எனினும் கருத்தில் கணவனும் மனைவியும் ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். தனி ஆதிக்கமோ, அபிப்பிராயமோ மனைவி யொருத்திக்கு இருக்கலாகாது. இது உலக நடைமுறை. ஆனால் நீயும் உன் தலைவனும் சரீரத்திலும் ஒன்று; சிந்தையிலும் ஒன்று. நிர்வாகம் முழுவதையும் வல்லமை வாய்ந்த உன்னிடத்தே உன் தலைவன் ஒப்படைத்திருக்கிறார். அவர் சாட்சி மாத்திரமாக வீற்றிருக்கிறார். இச்சா சுதந்திரம் முழுவதும் உனக்கே சொந்தம். ஆதலால் நீ பரதந்த்ரி அல்லள், சுவதந்த்ரியாகவீற்றிருக்கின்றாய். உலக நடைமுறையில் அகத்திலுள்ள அலுவல்களை மனைவி கவனிக்கின்றாள். புறத்திலுள்ள அலுவல்களைக் கணவன் கவனிக்கின்றான். ஆனால் தாயே, கௌரீ சங்கரனாகிய உங்கள் இருவருடைய போக்கு அலாதியானது. திரிபுர சம்ஹாரம் செய்தது சிவனுருடைய அற்புதச் செயல் என்பது ஐதிகம். மூன்று அரக்கர்களுடைய ஆதிக்கம் விண்ணவர்களுக்கும், மண்ணவர்களுக்கும் உபத்திரவமாக இருந்தது. சிவனுரிடம் அவர்கள் முறையிட்டார்கள். தக்க ஏற்பாட்டுடன் சென்று

சிவனர் திரிபுர சம்ஹாரம் செய்தார். ஆதலால் அவருக்குப் புராந்தகன் என்னும் பெயர்வந்துள் ளது. அதே பெயர் புராந்தகி என்று தாயே உனக்கும் வந்துள்ளது. ஏனென்றால் கிருத்தி யங்களனைத்துக்கும் நாயகியாக இருப்பவள் நீ. சிவனுடைய சன்னிதான விசேஷத்தால் செயல்களனைத்தையும் நீயே செய்து சாதிக் கின்ருய். திரிபுர சம்ஹாரமும் உன் சக்தியைக் கொண்டு நிகழ்ந்தது. ஆதலால் உன்னைப் புராந்தகி எனப் போற்றுவது முற்றிலும் பொருந்தும். கண்மேல் ஒரு கண்ணுடையான் சிவனர். ஜீவகோடிகள் படைத்துள்ள ஊனக் கண்களிரண்டும் உலகைக் காண்பதற்கு உதவு கின்றன. நெற்றியிலிருக்கும் ஞானக்கண்ணே பிரபஞ்சாதீதத்திலிருக்கும் பரத்தைத் தரிசிக்க உதவுகிறது. இங்ஙனம் சிவனர் முக்கண்ணனு யிருப்பதால் அவருக்குத் த்ரயம்பகன் என்ற பெயர் வந்தது. அத்தகைய மகிமையால் சிவனு ருக்குச் சக்தியாகிய நீ எந்த விதத்திலும் பின் தங்கியவள் அல்லள். ஆதலால் உன் தலைவன் திரியம்பகனுயிருப்பது போன்று அவரோடு சம அந்தஸ்து பெறுகிற நீ த்ரயம் பகி எனப் போற்றப் பெறுகின்ருய். விபூதிக ளனைத்தும் பரவஸ்துவுக்கே உரியவைகளா கின்றன. அந்தப் பரவஸ்துவே பிரபஞ்சமாக இலங்கிக்கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்திலோ எங்குத் திரும்பிப்பார்த்தாலும் அது எழில் வடிவெடுத்திருக்கிறது. அவையாவும் படைத் துள்ள சகுணபிரம்மம் புங்கவன் எனப் போற் றப்படுகின்ருன். புங்கவன் என்னும் ஆண் பாலுக்கு நிகராயிருக்கும் பெண்பாலுக்குப் புங்கவி என்னும் பெயர் வந்துள்ளது. எழில் புங்கவி என்று உன்னைப் போற்றுவது பொருள் சேர்ந்த புகழாகிறது. சிவம் என் னும் சொல்லுக்குப் பொருள் மங்களம். எது நலனே வடிவெடுத்திருக்கிறதோ அது சிவம். எவன் நலனே செய்கின்ருனே அவன் சங்கரன். அன்னவன் செயல்களனைத்தையும் தாயே, நீயே செய்து வருவதால் உன்னை விளங்கு சிவசங்கரி எனப் போற்றுகிறோம்.

மானுட சரீரத்தில் அமைந்துள்ள ஏழாவது ஞானபூமி உச்சந்தலையிலிருக்கிறது. அது சஹஸ்ராரம் என்னும் பெயர் பெறுகிறது. ஆயிரம் இதழ்களை உடைய தாமரைப் பூ என்பது அதன்பொருள்.உண்மையில்எண்ணிக் கையில் அடங்காத அகண்டாகாரத்துக்கு இது சிறப்புப் பெயராக விளங்கி வருகிறது. மூலா தாரத்தில் கிளம்பி மேல்நோக்கி வருகிற குண்டலினி சக்தி சஹஸ்ராரத்தை எட்டுகிற பொழுது ஜீவவியக்தி பரவஸ்துவில் லயமா கிறது. ஏழாவது ஞானபூமியிலுள்ள பெரிய பொருளுக்கு நாரணி என்னும் பெயரை அண் ணல் வழங்குகின்ருர். நாராயணன் என்னும் ஆண்பால் மூர்த்தி நாராயணீ என்னும் பெண் பால் மூர்த்தியாக அம்பிகை அழைக்கப் பெறு கிருள். அவள் நாராயணனுடைய சகோதரி. இத்தகைய உலக இணக்கம் பொருள் ஒன்று அதற்குப் பெயர்கள் பல என்னும் சமரசத்தை நிலைநாட்டுதற்கு அமைந்துள்ளது. பண்பா டடைந்துள்ள ஜீவாத்மா பரத்தில் லயமாகிற அப்பெரிய நிலையைச் சஹஸ்ரதள புஷ்பமிசை வீற்றிருக்கும் நாரணீ என அம்பிகை ஸ்தா னத்துக்கு முதன்மை கொடுத்து இயம்பப்படு கிறது. மனம் செயல்புரிகிற இடமெல்லாம் பிரகிருதிமயமாயிருக்கிறது. மனது தூயதாகத் திருந்தி அமைய அமைய பிரகிருதி தத்துவம் மகிமைகளோடு கூடிய புருஷதத்துவமாகக் காட்சி கொடுக்கிறது. மனம் ஒடுங்கியவிடத்துச் சொல்லில் அடங்காத பரவஸ்துவே எஞ்சி நிற் கிறது. அக்கோட்பாட்டை மனுதீத நாயகி (மன அதீத)—மனத்தைக் கடந்துள்ள இறைவி என அண்ணல் இயம்புகிருர். அந்த வஸ்து முக்குணங்களுக்கு அப்பாற்பட்டது. ஓசை ,ஒலி ஒன்றும் அதை எட்டமாட்டாது. இக்கோட் பாட்டைக் குணதீத (குண + அதீத) நாதாந்த (நாதம் + அந்தம்)சக்தி என அம்பிகை போற்றப் படுகிருள். அம்பிகையின் சொரூபத்தில் லய மானவர்களுடைய நாமத்தை உச்சரிப்பதும் அம்பிகையினுடைய நாமத்தை உச்சரிப்பதற்கு நிகராகிறது. இதற்குத் தக்க சான்ருக அமைந் திருப்பவர் ராமகிருஷ்ண பரமஹம்சர். அம் பிகை உபாசனை பண்ணி அம்பிகை சொருபத் தில் லயமானவர் அவர். ஆதலால் ஜபத்துக்கு அவருடைய நாமமும் அம்பிகையினுடைய நாம மும் ஒன்றேயாம். இக்கோட்பாட்டை என்று உன் நாமமே உச்சரித்திடும் அடியர் நாமமே நான் உச்சரிக்க வசமோ எனத் தாயுமானவர் இயம்புகிருர்.

அருள் நெறி

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யரான சுவாமி அபேதானந்தரின் போதனை)

துறவறத்தார் இல்லறத்தார் ஆகிய யாவர்க்கும் அருள்நெறி சொந்தம். குடும்பிகளுக்கு உலக ஈர்ப்பு அதிகம். மனைவி, மக்களோடு வாழ்ந்திருப்பவன் அவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கின்றான். அவர்களைக் காப்பாற்றுவதற்காக அவன் உழைத்தாகவேண்டும். அவர்களைப் பற்றிய எண்ணம் இருக்கும் பொழுது அவனுக்குச் சாந்தியும் பேரின்பமும் எப்படிக் கிட்டும்? கடவுள் சிந்தனையால் மனதிற்குண்டாகும் இன்பத்தையும் சாந்தியையும் உலகச் சிந்தனையால் ஒருவன் பெறமுடியுமா? உனக்கு மனைவியும் மக்களும் இல்லாதிருப்பது உனக்குக் கிடைத்துள்ள நல்வாய்ப்பாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கடவுளுக்காக நீ பாடுபடலாம்.

உனக்கு அமைந்துள்ள கடமையைக் கடவுள் வழிபாடாகச் செய்வதற்குத் தெரிந்துகொள். இறைவனுக்காகப் பணிவிடை பண்ணுகின்றேன் என்று யாண்டும் சிந்தித்துவா. கர்மத்தின் பயன்களெல்லாம் அவருக்கே உரியவை என்பதையும் ஞாபகத்தில்வைத்துக்கொள். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய், நானே இதற்கு நாயகம்!' என்ற கோட்பாட்டில் முழுநம்பிக்கை உடையவனாய் உன் வாழ்வை அமைத்துக் கொள். மனதுக்குச் சாந்தி எப்பொழுது கிடைக்கும் தெரியுமா? சுயநலம் ஓங்குகின்ற அளவு மனதுக்குச் சாந்தி இல்லை. இறைவன் இச்சைப்படி யாவும் நிகழ்கின்றன என்பதில் நம்பிக்கையுடையவனாக இறைவனிடம் நீ சரணகதி அடைந்து விடு. அப்பொழுது உனக்கு உண்மையான சாந்தி கிட்டும்.

கர்ம பலனில் நீ பற்று வைப்பாயானால் உலகத்தில் கட்டுண்டு போவது நிச்சயம். அப்படிக் கட்டுண்டு போவதிலிருந்து நீ விலகியிருக்க முடியாது. புறவுலகிலுள்ள எதிரிகளிடமிருந்து நீ சுலபத்தில் தப்பித்துக் கொள்ளலாம். அவர்களை வெல்லுவதும் உனக்குச் சுலபம். ஆனால் காமம், கோபம் முதலான அக எதிரிகளிடமிருந்து நீ சுலபத்தில் தப்பித்துக்கொள்ள முடியாது. காமம், கோபம் முதலான புல்லியல்புகளை வெல்லுவதும் கஷ்டம். குடியானவன் பயிர்வகைகளையும், ஆடு மாடுகளையும் காப்பாற்றுகின்றான். உலக மக்கள் குடும்பத்தார்களையும், சுற்றத்தார்களையும் காப்பாற்றி வருவதாகக் கூறுகிறார்கள். ஆனால் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதைப் பெரும்பாலோர் மறந்து விடுகின்றனர். உன்னை நீ காப்பாற்றிக் கொள்வதற்குத் தெரிந்துகொள். முதலில் நீ யாருடன் பழகுகின்றாயோ அவருடைய இயல்பெல்லாம் உனக்கும் வந்துவிடும் என்பதை அறிந்துகொள். உலகத்தில் உழன்று கிடக்கும் மனதையுடையவர்கள் மத்தியில் நீ வாழ்ந்து வருவாயானால் அவ்வுலகத்தாருடைய கருத்துக்கள் உன் உள்ளத்திலும் புகுந்துவிடும். உலக ஆசைக்கு உன் உள்ளத்தில் இடம் இருந்து விட்டால் அவர்கள் வழியில் நீயும் சென்று விடுவாய். ஆகையால் எப்பொழுதும் கடவுள் நாட்டம் உடையவர்களுடைய மத்தியில் வாழ்ந்திருந்து பழகு. சத்சங்கத்திற்கு நிகரானது வேறொன்றும் இல்லை.

விஷய சுகங்களில் மனதை ஈடுபடுத்தாதே. விஷய சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை உன் உள்ளத்தில் எழும்பொழுது அவ்வாசையை விவேகத்தைக்கொண்டு விரட்டி ஓட்டு. ஆசைக்குரிய பொருளை நித்தியப் பொருளோடு நீ ஒப்பிட்டுப்பார். ஆசைக்குரிய பொருள் அநித்தியமானது என்பதும் அதன் மீது பற்று வைப்பது பொருந்தாது என்பதும் உன் உள்ளத்துக்கு விளங்கும். அப்பொழுது அப்பொருளில் உள்ள ஆசையை நீ துறந்துவிட முடியும். இதைத்தான் நிவிருத்தி மார்க்கம் என்று சொல்லுவார்கள். ஆசையை ஒழிப்பதற்கு மற்றொரு உபாயமும் உண்டு. காமம், கோபம் முதலானவற்றைக் கடவுள்மீது திருப்புதல்வேண்டும். பால் உணர்ச்சி காமத்துக்கு அடிப்படையாக இருக்கிறது. ஆண் ஒருவன் ஆண்மகன் என்ற உணர்ச்சியோடு, பெண் வடிவத்தில் அழகைக் காணும்பொழுது காம உணர்ச்சி உண்டாகிறது. அஃதே போன்று பெண்ணொருத்தி தான் பெண் என்ற எண்ணத்துடன் இருந்துகொண்டு ஆண் வடிவத்திலுள்ள அழகைக் காண்கின்றபொழுது

அவனுடைய உள்ளத்தில் காம உணர்ச்சி உண்டாகிறது. ஆண் ஒருவன் பெண் வடிவத்தைக் காணும்பொழுது அதை அன்னை பராசக்தியின் தோற்றமாகப் பாவிக்கவேண்டும். பெண்ணொருத்தி ஆண் வடிவத்தைக் காணும்பொழுது அதை ஈஸ்வர சொரூபமாகப் பாவிக்கவேண்டும். இத்தகைய பாவனையை மனதில் வரவழைத்து உலகத்தவர்களோடு இணக்கம் வைத்துப் பழகினால் காம உணர்ச்சி தெய்வீக உணர்ச்சியாக மாற்றப்பட்டுவிடும். அப்பொழுது காம உணர்ச்சியால் உனக்கு இடைஞ்சல் இல்லை. கோபத்தையும் கடவுள்மீது திருப்பு அல்லது உன் மீது கோபத்தைத் திருப்பு கடவுளிடம் "இறைவா, உன் காட்சியை இன்னும் ஏன் காட்டவில்லை?" என்று இறைவன்மீது கோபித்துக் கொள். ஆசை நிறைவேறாதபொழுதுதான் அது கோபமாக வடிவெடுக்கிறது. ஆசையை நிறைவேற்றுவதற்குரியவல்லமை உன்னிடத்தில் இல்லாதபொழுது அத்தகைய பலவீனமுடைய மனதின்மீது கோபத்தைத் திருப்பு. கடவுள் சிந்தனை வலுத்து வந்தால் ஆசை தூயதாக மாறுகிறது. உள்ளம் திட்பமுடையது ஆகிறது. அப்பொழுது கோபத்தை நீ வென்றவனாகின்றாய். இங்ஙனம் ஆசையையும் கோபத்தையும் வென்று பழகும்பொழுதுதான் நீ சிறந்த சாதகனாகின்றாய்.

மனத்தூய்மை வாழ்வின் முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியமானது. 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்' என்று வள்ளுவரும் பகர்ந்திருக்கிறார். அறம் எது என்பதை நமக்குக் காட்டித்தருவது மாசற்ற மனது ஆகிறது. மனம் உலக விஷயங்களில் விரும்பி ஓடிக் கொண்டிருக்கும்பொழுது அது மாசுடைய மனதாகிறது. அப்பொழுது மனம் மட்டமான நிலையில் இருக்கிறது. மனம் கீழ்நிலையில் உழன்று கொண்டிருக்கும்பொழுது அலைகளோடு கூடிய சேறு கலந்த குட்டைக்கு நிகராகிறது. அலையும் சேறும் நிறைந்த குளத்தின் தரைப்பகுதி சிறிதும் தெரியாது. அங்ஙனம் கீழான நிலையில் இருக்கும் மனதில் தெய்வீகக் காட்சி உண்டாவதில்லை. கீழான விஷயங்களில் மனம் சென்றுகொண்டிருக்கும்பொழுது அது கீழான மனது ஆகிறது. மனதை மேல் நிலைக்குக் கொண்டுவருவது கடமையாகும். மனம் மேலே வரவர மேலான சிந்தனை அதில் எழுகிறது. நெடுங்காலம் மனம் உலக விஷயங்களிலேயே உழன்று கிடந்தமையால் அது கீழ்நிலையில் தான் இருக்க விரும்புகிறது. அதை மேல் நிலைக்குக் கொண்டு வருவதற்குப் போராடியாகவேண்டும் மனம் கீழ்நிலையில் இருக்கிறது என்பது குறித்துக் கவலைப்படாதே. கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான காட்டு நிலத்தைப் பண்பட்ட நிலமாகச் சிறந்தகுடியானவன் செய்துவிடுகின்றான். அவனுக்குக் கிடைக்கும் நிலம் எத்தகையதாக இருந்தாலும் அதைத் திருத்தியமைத்துவிடுகின்றான். அங்ஙனம் உன் மனது எத்தகையதாக இருந்தாலும் அதைத் திருத்தி அமைத்துவிடலாம். பொட்டல் நிலத்தைப் பண்பட்ட நிலமாக்குவதற்குக் குடியானவனுடைய முயற்சியே காரணமாகும். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பது கோட்பாடு. நீயும் உன் மனதைத் திருத்தியமைப்பதற்கு முயன்றால் அதில் வெற்றி பெறுவாய்.

இறைவனுடைய தோற்றம் இயற்கையாக வடிவெடுத்திருக்கிறது. இறைவனுடைய சக்தியை அம்பிகை என்று அழைக்கின்றோம். அம்பிகைக்குக் காளி, துர்க்கை, நாராயணி, லட்சுமி, ராதை, சீதை, சாரதா என்ற பல நாமங்கள் இருக்கின்றன. அந்நாமங்களுக்கேற்ற வடிவங்களும் இருக்கின்றன. உனக்கு இஷ்டமான வடிவத்தை வழிபாட்டுக்கு அமைத்துக் கொள்ளலாம். காளி அல்லது துர்க்கை வடிவமாக இருந்தால், வில்வ இலைகளைக் கொண்டு அர்ச்சனை செய். அம்பிகையை, நாராயணி, லட்சுமி, ராதை, சீதை வடிவங்களில் வழிபடும் பொழுது துளசி இலைகளைக்கொண்டு அர்ச்சனை செய்யலாம். அம்பிகை உபாசனை மூலம் உன் ஆற்றலை வளர்த்துக்கொள். 'அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்' என்பது பாரதியின் வாக்கு. முறையான அம்பிகை உபாசனை உன்னை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுகிறது. சான்றோர்கள் அனைவரும் அம்பிகை உபாசனை செய்தே உயர்நிலை அடைந்திருக்கிறார்கள். சங்கரர் சக்தி உபாசனை செய்திருக்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் காளி உபாசனை செய்து காளியின் காட்சி பெற்றார். சக்தி உபாசனையின் உயர்வை ஸ்ரீ ராமகிருஷ்ணர் தெளிவாக விளக்கியுள்ளார்.

அம்பிகையின் மகிமை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் சக்திபூஜை அந்தர் யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[256ஆம் பக்கத் தொடர்ச்சி]

இறைவனுடைய நாமத்தை ஜபிப்பது எல்லார்க்கும் எளிது. மாணிக்கவாசகர் நமசிவாய என்று பஞ்சாட்சரம் கூறிச் சிவபுராணத்தைத் துவக்குகின்றார். சிவநாமத்தைப் போன்றே நாராயண மந்திரம், சக்திமந்திரம், ராமமந்திரம் ஆகிய மந்திரங்களை உச்சரிக்கலாம். குழந்தை தன் தாயைப் பார்த்து அம்மா என்று அழைக்கிறது. அது அம்மா என்று அழைப்பதற்குப் பள்ளிக்கூடம் போய்க் கற்றுக்கொள்ளவேண்டியதில்லை. கன்றுக்குட்டி அம்மா என்று கத்துகிறது. அதற்கு யாரும் அப்படிக் கத்துவதற்குச் சொல்லித்தரவில்லை. அங்ஙனம் யாரும் புகட்டாமலேயே நாம் இறைவன் நாமத்தை ஜபிக்கலாம். அப்படி ஜபிக்கின்றபொழுது அந்த ஜபம் நம் மன அமைப்பை மாற்றி அமைக்கின்றது. ஆத்மானுபூதி அடைந்தவர்களுக்கு ஜீவன் ஒருவன் என்ன ஓசை வடிவத்தில் இருக்கிறான் என்பது புலப்படுகிறது. அவர்கள் ஓசையின் மீது சம்யமம் செய்வார்கள். அப்பொழுது எந்த ஜீவன் எந்த ஓசை வடிவத்தில் இருக்கிறான் என்பது விளங்கிவிடும். அந்த ஜீவனைத் திருத்தியமைப்பதற்கு எந்த மந்திரம் பொருத்தமாயிருக்கிறது என்பதையும் அறிகிறார்கள். பொருத்தமான மந்திரத்தை அவனுக்குத் தீட்சையாகத்தருகிறார்கள். அம்மந்திரத்தை அந்த ஜீவன் உச்சரிக்கும்பொழுது அவன் சொரூபம் மாறி அமைகின்றது. அனுபூதிமானாகிய குரு பொருத்தமான மந்திரத்தைச்சிஷ்யனுக்குத் தீட்சைசெய்கிறார். சாதாரண குருமார்கள் ஐதிகமாக உள்ள மந்திரத்தைத் தீட்சைசெய்து விடுகிறார்கள். வால்மீகி வழிப்பறியாக இருந்தார். அவர் நாரதரைச் சந்தித்தார். நாரதர் அவருக்கு ராம நாமத்தைத் தீட்சை செய்தார். ராம நாமத்திற்குத் தாரக மந்திரம் என்று பெயர். சிவன் யாண்டும் அம்மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கிறார். ஹரா, உமா என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்தால் அது குறுகி ராமா என்று ஆகிறது. சிவசக்தி சொரூபமாக அந்த ஓசை இருக்கிறது. நாரதர் ராமா என்று சொல்லித்தந்தபொழுது வழிப்பறியாக இருந்த வால்மீகி அதை உச்சரிக்க முடியவில்லை. மரா என்று உச்சரிக்கும்படி நாரதர் தூண்டினார். அவரால் அதை உச்சரிக்க முடிந்தது. ராமா என்று உச்சரிக்க முடியாத கடைப்பட்ட நிலையில் இருந்தவருக்கு அவருக்கேற்ற மந்திரத்தைக் கொடுத்து நாரதர் அவரை மகரிஷி ஆக்கினார். ராம மந்திரத்தை அவர் சொல்லிக்கொண்டு போகப் போகத் தம்மை மறந்து அம்மந்திரத்தில் லயமாகிவிட்டார். அவர் உடலைச் சுற்றிலும் புற்று வளர்ந்துவிட்டது. புற்று வளர்ந்ததும் அவருக்குத் தெரியவில்லை. வால்மீகம் என்றால் புற்று என்பது பொருள். அவர்மீது புற்று வளர்ந்து மூடியிருந்தமையால் அவருக்கு வால்மீகி என்ற பெயர் வந்தது. அந்த நாமத்திற்குரிய மூர்த்தியின் சொரூபத்தை உணர்கின்ற பரிபாகம் அவருடைய உள்ளத்திற்கு வந்தது. அவருடைய உள்ளத்திலிருந்து ராமாயணம் என்னும் மகாகாவியம் வந்தது.

ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் அற்புதானந்த சுவாமி ஒருவராவார். அவர் கல்வி கல்லாதவர். பாமரராக இருந்த அவரை ஞான நிலைக்கு ராமகிருஷ்ணர் கொண்டுவந்தார். வெளியூரிலிருக்கும் அன்பர் ஒருவரிடம் நாம் தொடர்புவைக்க அவருடைய விலாசத்தை அறிகின்றோம். கடவுள் நமக்கு வெகுதூரத்தில் இருக்கின்றார். அவரை அறிவதற்கு நாமம் விலாசமாக இருக்கிறது. நாமமும், அவருடைய சொரூபமும் ஒன்றே. அவருடைய சொரூபத்தைத் தரிசிக்கின்ற பரிபாகம் நமக்கு இல்லை. அவருடைய நாமத்தை உச்சரிப்பது நமக்குச் சாத்தியம். நாமத்தை உறுதியாகப் பிடித்துக்கொண்டால் சொரூபத்தைப் பற்றிய அனுபூதி உண்டாகிறது. நாமத்தை எவ்வளவுக்கெவ்வளவு உச்சரிக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய மனம் நல்ல மனதாகத் திருந்தியமைகிறது. ஜீவனுக்குப் பொருத்தமான நாமத்தைத் தீட்சையாகத் தர

வேண்டும். அவன் அதை உச்சரித்து வர வரச் சலபத்தில் திருந்தி அமைகின்றான். அது ஒரு பெரிய தத்துவம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் யார் யாருக்கு எந்த நாமம் பொருத்தமானது என்பதை நன்கு அறிந்திருந்தார். நரேந்திரன் தம்மிடம் வந்தபொழுது, " நீ என்ன நாமத்தை ஜபித்து வருகிறாய்?" என்று கேட்டார். "சிவ நாமம் ஜபித்து வருகிறேன்" என்று நரேந்திரன் பதில் சொன்னான். "ராம நாமம் உனக்கு உரியது. நீ அதை உச்சரிக்க வேண்டும்" என்று கூறி அவன் ஜபித்து வந்த நாமத்தை மாற்றி அமைத்தார். நரேந்திரன் சிறு வயதாக இருந்தபொழுது ராமபக்தி மிகுந்தவனாக இருந்தான். சிறு வயதில் எந்தத் தெய்வத்திடம் நமக்குப் பக்தி வருகிறதோ அதே வளர்ந்து வர வேண்டும். பெரும்பகுதி அது ஒத்திருக்கும். நரேந்திரன் சிறுவனாக இருந்தபொழுது சீதா ராமன் விக்ரஹம் வைத்துக்கொண்டு அதன் முன் அமர்ந்துதியானம் பண்ணுவான். ஒருநாள் விட்டு வண்டிக்காரனோடு சம்பாஷணை நிகழ்த்தினான். அப்பொழுது வண்டிக்காரன் கல்யாணம் செய்து கொள்வதை மிகவும் கண்டித்துப் பேசினான். கல்யாணம் பண்ணிக் கொள்வதனால்தான் எல்லா உபத்திரவங்களும் வருகின்றன என்று அவன் சொன்னான். ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் மில்டனுடைய சரித்திரத்தை எழுதும்படி கூறினார்கள். மில்டன் பிறந்த வருஷத்தையும், அவர் எத்தனை ஆண்டுகளுக்குள் எத்தனை நல்ல கவிதைகள் எழுதினார் என்பதையும் ஒரு குழந்தை எழுதியது. மேலும் அவர் இன்ன வருஷத்தில் மணம்புரிந்து கொண்டார் என்றும், அடுத்து எந்த வருஷத்தில் Paradise Lost என்ற கவிதையை எழுதினார் என்றும், பிறகு மனைவி எந்த வருஷத்தில் இறந்து போனாள் என்பதையும், அதன் பிறகு Paradise Regained என்ற கவிதையை எழுதினார் என்றும் அக்குழந்தை எழுதியது. அக்குழந்தை தத்துவம் தெரியாது எழுதியது. அதிலுள்ள தத்துவமும், வண்டிக்காரன் சொன்னதும் ஒத்திருந்தன. நரேந்திரனுடைய உள்ளத்தில் மணம் புரிந்து கொள்வது பொல்லாதது என்ற கருத்து ஆழ்ந்து பதிந்தது. நரேந்திரன் ஆழ்ந்து சிந்தித்தான். ராமனுக்கு உபத்திரவம் வந்தது கல்யாணத்துக்குப் பிறகு தான் என்பது நரேந்திரனுக்கு விளங்கியது. உடனே மாடிக்குப் போய் அங்கிருந்த சீதாராமன் விக்ரஹத்தை எடுத்து எறிந்து விட்டு அழ ஆரம்பித்தான். அழுகைக்கு யாது காரணம் என்று தாயார் கேட்டபொழுது நிகழ்ந்ததைச் சொல்லி சீதாராமனை வணங்க இஷ்டமில்லை என்று நரேந்திரன் கூறினான். "நான் சிவனை வணங்கி, சிவனிடம் பிரார்த்தித்தேன். நீ சிவன் தந்த செல்வமாவாய். தியாக மூர்த்தியாகிய சிவன் நீ வணங்குவதற்குரிய தெய்வமாகிறார்" என்று தாயார் கூறினார். அதன் பிறகு நரேந்திரன் சிவநாமத்தை ஓதி வந்தான். ராமகிருஷ்ணர் அதை மாற்றி ராம நாமம் ஜபிக்கும்படி சொன்னார். ராமநாமம் ஜபித்ததும் நரேந்திரன் மிக விரைவில் மேல் நிலைக்கு வந்தான். அவரவர்க்கு விருப்பமான நாமத்தை ஜபித்து வந்தால் மிக் விரைவில் மேல் நிலைக்கு வந்து விடலாம்.

நன்றாகப் பேசிப் பழகுவது வாழ்க்கையில் பெறவேண்டிய பயிற்சியாகும். வானொலியில் பேசுதற்கு முன்பு ஒத்திகைபார்ப்பார்கள். பேசுபவருடைய பேச்சை ஒரு கருவியில் செலுத்தும் பொழுது உண்டாகின்ற அலை தெளிவாக இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால், அவருடைய பேச்சு மைக்கிற்கு ஒத்து வராது என்று சொல்லிவிடுவார்கள். தெளிவுறப் பேசிப் பழகுவது நல்ல பயிற்சியாகும். இறைவனுடைய திருநாமம் புனிதம் வாய்ந்தது. அப்புனித நாமத்தைச் சொல்லுவதற்கு ஆவல் உண்டாகி அதில் தீவிரமாக ஈடுபடும் பொழுது வாழ்வு புதுவாழ்வாக மாறி அமைகிறது. சிவ நாமத்தைச் சொல்லும் பொழுது சிவ சொருபமாய் மாறிவிடுகிறோம் என்பதை திருமூலர் பகர்ந்துள்ளார்.

" சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே."

நாமத்தைச் சரியாகப் பிடித்துக் கொண்டால் அது சொருபத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. சிவ சிவ என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்லித் தரலாம். அது திருப்பிச் சொல்லும். கிளிப்பிள்ளை போன்று பொருள் தெரியாது இறைவனுடைய நாமத்தை ஓதினாலும் அதில்

புண்ணியம் உண்டு என்று இராமகிருஷ்ணர் பகர்ந்தார். இதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று ஸ்ரீ விவேகானந்தர் கூறினர். "உனக்கு நம்பிக்கை இருக்கலாம் அல்லது இல்லாது போகலாம். ஆனல் அதுதான் உண்மை" என்ருர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். நாமத்தை ஓதுவதின் மகிமையை இராமகிருஷ்ணர் அனுபூதி வாயிலாக அறிந்திருந்தார். நாமம் ஓதுவதால் உண்டாகும் மகிமையை யுக்தி பூர்வமாக விவேகானந்தருக்கு ராமகிருஷ்ணர் விளக்கினர். பக்தியோடு சிலர் கங்காஸ்நானம் பண்ணுகிருர்கள். கங்கா ஸ்நானத்தில் நம்பிக்கை இல்லை என்று கரையில் நின்றுகொண்டு இருப்பவனை ஒருவன் கங்கைக்குள் தள்ளிவிடுகின்ருன். கங்கைக்குள் மூழ்கி எழுந்திருக்கும் பொழுது அவன் கங்காஸ்நானம் செய்தவன் ஆகின்ருன். மருந்து சாப்பிடுவதில் நம்பிக்கை இல்லாத ஒருவனுடைய வாயில் மருந்தை வைத்து டாக்டர் உள்ளே திணித்துவிடுகிருர். மாத்திரையைச் சாப்பிட்டவன் மருந்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் அதன் பலனை அடைவான். அங்ஙனம் இறைவன் நாமத்தைப் பரிகாசத்திற்குச் சொன்னுலும், விருப்புடன் சொன்னுலும், வெறுப்புடன் சொன்னுலும் சொல்லுமளவிற்குப் பலனுண்டு. தெய்வத்தோடு பகைமைகொள்வது ஓர் உபாசனை முறையாகும். கம்சனும், இராவணனும் பகைவர்களாக இருந்து தெய்வத்தை உபாசித்தார்கள். சென்னையில் இராமானுஜாச்சாரியர் என்பவர் அற்புதமாக நாடகம் நடிப்பார். ஒரு தடவை நாடகத்தில் இராவணனுக நடிக்க இருந்தவனுக்கு உடல்நிலைசரியாக இல்லை. இராமானுஜாச்சாரியரை இராவணனுக நடிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நாடகத்திலும் நான் ராமனுடைய எதிரியாக இருக்க முடியாது என்று அவர் கூறிவிட்டார். ராம பக்தி அவரிடம் அத்தகையதாக இருந்தது. கம்சன் கிருஷ்ணனுடைய எதிரியாவான். இராவணன் இராமனுடைய எதிரியாவான். இரண்யாக்ஷன், இரண்யகசிபு ஆகிய இருவர்களும் நாராயணனுடைய எதிரிகள் ஆவார்கள். வைகுண்டத்திலிருந்த துவார பாலகர்கள் நான்கு பக்தர்களை வைகுண்டத்தில் விடாமல் தடுத்துவிட்டார்கள். அக்குற்றத்துக்காக அவர்கள் பூமியில் ஏழு முறை பக்தர்களாகப் பிறக்க வேண்டும் அல்லது மூன்று முறை கடவுளுக்கு எதிரிகளாகப் பிறக்க வேண்டும் என்ற கட்டளை பிறந்தது. ஏழுதடவை பூமியில் பிறப்பது சிரமம் ஆகையால் மூன்று தடவை எதிரிகளாகப் பிறந்துவிடுகிருேம் என்ருர்கள். இரண்யாக்ஷன், இரண்யகசிபுவாக வந்தது முதல் முறையாகும். இராவணன், கும்பகர்ணனுக வந்தது இரண்டாவது முறையாகும். கம்சன், சிசுபாலனுக வந்தது மூன்ருவது முறையாகும். விரோதம் செய்துகொண்டாலும், கோபித்துக் கொண்டாலும் கடவுளோடு விரோதமோ கோபமோ கொள்ள வேண்டும். அதில் நமக்கு லாபம் இருக்கிறது. இறைவனுடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டு வந்தால் பலனுண்டு. யக்ஞங்களுள் ஜப யக்ஞமாக நான் இருக்கிறேன் என்று கிருஷ்ணன் பகவத்கீதையில் கூறி இருக்கின்ருர். நாவைப் பெற்றுள்ள நாம், பேசக் கற்றுக் கொண்டுள்ள நாம்,இறைவனுடைய நாமத்தைச் சதா சொல்லிப் பழகவேண்டும். அப்படி நாம ஜபம் பண்ணுவது எளிய சிறந்த சாதனமாகும். யக்ஞங்கள் செய்யுமிடத்து முறை தவறினல் கேடுகள் விளைந்துவிடும். நாம ஜபம் சொல்லுவதில் கேடு ஒன்றும் விளைந்து விடாது. குழந்தை ஒன்று அம்மா என்று அரைகுறையாக உச்சரிக்கின்றது. அதைத்தாய் பொருட்படுத்துவது இல்லை. குழந்தை 'அம்' என்று சொன்னுலும் அது தன்னைக் குறிக்கிறதுஎன்பதைத் தாய் அறிகின்ருள். தெய்வத்தின் பெயரைச் சரியாக உச்சரிக்கத் தெரியாது போனுலும், பக்தி பூர்வமாகச் சொன்னல் அது தெய்வத்துக்குச் சம்மதம். ஜபத்துக்கு நிகரான சாதனை இல்லை. காலையிலும் மாலையிலும் கைகளைத் தட்டிக் கொண்டு இறைவனுடைய நாமத்தை உச்சரித்தால் உள்ளத்தில் இருக்கக் கூடிய கீழான எண்ணங்கள் எல்லாம் பறந்தோடி விடுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார்.

"புண்ய சிரவண கீர்த்தன" என்பது அம்பிகைக்கு உள்ள பெயராகும். கீர்த்தனம் பண்ணத் தெரிந்தவர்கள் பக்தி பூர்வமாகப் பஜனை பண்ணவேண்டும். இடையருத வழிபாட்டின் மூலமாக ஒரு ஸ்தலத்துக்கு அருள்சக்தி வருகிறது. காசியில் அதிகாலை நான்கு மணிக்கு

ஆரம்பித்தால் இரவு பத்து மணிவரை இடைவிடாது வழிபாடு நடந்துகொண்டு இருக்கும். ஆகையால் அங்கு அருள் ஓங்கி இருக்கிறது. கீர்த்தனம் பாடுபவர்கள் பெரும்பாலர் ராகத்தை முன்னணியில் வைத்துப் பொருளைப் பின்னணிக்குத் தள்ளிவிடுவார்கள். பர்வத ராஜகுமாரி என்பதைத் தாளத்திற்கு வசதியாகப் பிரித்து ஒருவர் ஜக்குமாரி ஜக்குமாரி என்று பாடினர். அப்படிப் பாடுவது பொருந்தாது. கீர்த்தனத்தின் கருத்து முன்னணியிலும், தாளமும் ராகமும் பின்னணியிலும் இருக்கவேண்டும். ராகத்தோடு பாடத் தெரிந்தவர்கள் பாக்கியவான்கள். பொருத்தமான ராகத்தோடு பாடுகிறபொழுது அப்பாடல் உள்ளத்தைத் தொடும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ராகத்தோடும் தாளத்தோடும் பாடுவார். அவருக்கு அடிக்கடி சமாதி நிலை வந்துவிடும். சமாதி கலைந்து வருகிறபொழுது பாடலோடு ராகமும் தாளமும் தொடர்ந்து வரும். இராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பாடச் சொல்லுவார். அவர் பாடுவதைக் கேட்டு இராமகிருஷ்ணர் சமாதிநிலைக்குச் சென்றுவிடுவார். அனுபூதிமான்கள் இசை தெரிந்துபாடும்பொழுது அது பரமனுக்கே திருப்தியாக இருக்கும். பக்தர்கள் கசிந்துருகிப் பாடும்பொழுது அவர்களுடைய இஷ்ட மூர்த்தி அவர்கள் பாடுவதைக் கேட்டு அனுபவிக்கின்றார். நாம் தெரிந்த அளவு ராகத்தோடு பாடும் பொழுது அது தெய்வத்துக்குச் சம்மதம். சிலருக்கு ராகம் வராது. அவர்கள் தனியாகப் பாடவேண்டும். கூட்டத்தில் பாடினல் மற்றவர்களுக்கு அது சித்ரவதையாக இருக்கும். அவரவர்கள் முகத்தைக் கண்ணுடியில் பார்ப்பது அவரவர்களுக்குத் திருப்தியாக இருக்கும். அங்ஙனம் அவரவர்கள் இசை அவரவர்களுக்குத் திருப்தியாக இருக்கும். 1924ஆம் ஆண்டு பெங்களூர் ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் இது சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அப்பொழுது அங்கிருந்த தலைவர்சுவாமி இரவு தியானம் முடிந்தபிறகு சாப்பாட்டு நேரம் வரையில் பஜனை பாடலாம் என்று கூறினர். அடுத்தநாள் ஈசுவரானந்த சுவாமிகள் ஆர்மோனியத்தை வைத்துக்கொண்டு பாட ஆரம்பித்தார். பக்கத்து அறையில் விசுத்தானந்த சுவாமிகள் இருந்தார்கள். ஈசுவரானந்த சுவாமிகள் பாடுவதைக் கேட்டுக்கொண்டிருக்க விசுத்தானந்த சுவாமிகளுக்குச் சகிக்கமுடியவில்லை. உடனே அவர் அறையை விட்டு வெளியேவந்து "ஏன் எங்களைச் சித்ரவதை செய்கிறீர்கள்? நீங்கள் பாடுவது எங்களுக்கே இனிமையாக இல்லை. அது இறைவனுக்கு எப்படி இனிமையாக இருக்கப்போகிறது" என்று கேட்டார். "அவரவர்களுடைய உணர்ச்சி அவரவர்களுக்கு இசையாக இருக்கிறது?" என்ருர் ஈசுவரானந்த சுவாமிகள். இருவருடைய கூற்றுக்களும் உண்மை. பாடத்தெரியாதவர்கள் தனியாகப் பாடுவது அவர்களுக்கும் திருப்தி; அவர்களுடைய இஷ்ட மூர்த்திக்கும் திருப்தி. கூட்டத்தில் பாடும்பொழுது பொருத்தமானதாகப் பாடவேண்டும். கூட்டத்தில் பாடுகின்ற பாடல் இசை தாளம் பக்தி ஆகிய யாவும் அமைந்து உள்ளத்தைப் பண்படுத்துவதாக இருக்கவேண்டும். இராமகிருஷ்ணர் தட்சிணேசுவரத்தில் வசித்தபொழுது ஆங்கு ஒரு பெரியார் வந்திருந்தார். அவருடைய உள்ளம் அதீத நிலையில் இருந்தது. அவர் அம்பிகையின் சந்நிதியின் முன்னின்று பாடிய பாடல் எல்லாருடைய உள்ளங்களையும் அம்பிகையின் சந்நிதிக்குக் கொண்டுபோகக் கூடியதாக இருந்தது. பாடத்தெரிந்தவர்கள் பக்தியுடன் பாடுகின்ற பொழுது அது எல்லாருடைய உள்ளங்களையும் தொடுவதாக இருக்கிறது. பக்தி இல்லாதவர்களுடைய உள்ளத்திலும் அது பக்தியை ஊட்டுகிறது. பக்தியோடும் இசையோடும் சொல்லைக் கையாளுகிறபொழுது அது சிறந்த உபாசனை ஆகிறது.

அம்பிகைக்குக் காயத்ரீ என்பது ஒரு நாமம். வழிபாட்டுக்கு அமைந்தவைகளுள் காயத்ரீ மந்திரம் முக்கியமானது. காயத்ரீ மந்திரத்தில் மூன்று வரிகள் உள்ளன. அதில் இருபத்து நான்கு உயிர் அல்லது உயிர்மெய் எழுத்துக்கள் இருக்கின்றன. அப்படி அமைந்த காயத்ரீகளுள் பிரம்மகாயத்ரீ அல்லது சூரிய காயத்ரீ மிகவும் பிரசித்திவாய்ந்தது.

ஓம் பூர் புவ ஸ்வ:
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோயோ ந: ப்ரச்சோதயாத்.

இதுபிரம்மகாயத்ரீ.யார்நம்அறிவைத்தூண்டு

கிருரோ அந்தச் சுடர்க்கடவுளின் மேலாம் ஒளியைத் தியானிப்போமாக என்பது அதற்குப் பொருள். தியானத்தின் பொழுது அருள்ஜோதியைத் தியானம் பண்ணவேண்டும். கண்ணை மூடினல் இருளாக இருக்கும். ஒளி இருப்பதாக நாம் எண்ணவேண்டும். பிரகாசத்தைப் பற்றித் தியானம் பண்ணுகிற அளவு அறிவை வளர்க்கின்ருேம். காயத்ரீ மந்திரத்தை அர்த்தம் தெரிந்து சொன்னலும் தெரியாது சொன்னலும் அது அறிவை வளர்க்கிறது. ருத்ர காயத்ரீ, நரசிம்ம காயத்ரீ , நாராயண காயத்ரீ , தேவி காயத்ரீ, கணேச காயத்ரீ, சுப்ரமண்ய காயத்ரீ என்று பல காயத்ரீகள் இருக்கின்றன. பரமஹம்ச காயத்ரீ என்பது சங்யாசிகளுக்கு உரியது. நம் இஷ்டதெய்வத்திற்குரிய காயத்ரீயை உச்சரித்துக் கொண்டு வர வர நம் அறிவு வளர்கிறது. சிலர் தியானப்பயிற்சி செய்வது இல்லை. தியானம் செய்து பழக வேண்டும். சிறுவர்களுக்கும் விளையாட்டாகத் தியானப் பயிற்சி தரவேண்டும். நரேந்திரன் சிறுவனுக இருந்தபொழுது தியானத்தை விளையாட்டாகச் செய்து வந்தான். நரேந்திரன் தியானப்பயிற்சியில் வாழ்க்கையை ஆரம்பித்தான். இராமகிருஷ்ணர் கடவுள் வழிபாட்டில் தம் வாழ்க்கையை ஆரம்பித்தார். பழங்கால முறைகள் இரண்டையும் இவ்விரண்டு மூர்த்திகளும் தற்காலத்துக்கு ஏற்றவாறு புதுப்பித்து அமைத்தார்கள். இருவரும் பெரியவர்கள். சிரமப்பட்டுச் செய்யவேண்டியதை விளையாட்டாகச் செய்து காட்டினர்கள். மானுடராகப் பிறந்திருப்பது கடவுள் வழிபாட்டுக்கேயாம் என்று இராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். தியானப் பயிற்சியையும் காயத்ரீ ஜபம் பண்ணுவதையும் மாணுக்கர்களுக்குத் தருகின்றபொழுது அவர்கள் பெருவாழ்வுக்குத் தகுதி உடையவர்களாகிருர்கள்.

மகாமந்த்ரா என்று அம்பிகைக்கு ஒரு பெயர் உண்டு. சர்வமந்திர சொரூபிணி என்றும் அம்பிகை அழைக்கப்படுகின்ருள். மந்திரங்களின் தெள்ளி எடுத்த சாரமாக அம்பிகை இருக்கின்ருள். வேதத்தினுடைய கருத்து முழுவதும் காயத்ரீயில் அடங்கி இருக்கின்றது. காயத்ரீ ஓங்காரத்தில் அடங்கி இருக்கின்றது. மந்திரங்களைக் கையாளுகின்ற அளவு நாம் சாதனத்தில் மேலே போகின்ருேம். சிறு வயதிலேயே நாம பாராயணப் பயிற்சியும், தியானப் பயிற்சியும் வந்துவிடவேண்டும். அப்பொழுது அப்பயிற்சி குழந்தையின் உள்ளத்தில் ஆழப் பதிந்து விடுகிறது. கடவுள் வழிபாட்டுக்கு வேண்டிய சூழ்நிலையை அமைத்துத் தந்துவிட்டால் குழந்தை தாஞகக் கடவுள் வழிபாடு செய்கின்றது. பெரியவர்கள் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதைப் பார்த்துக் குழந்தைகள் தாங்களாக வழிபாடு செய்யத் துவங்கிவிடுகின்றன.

ஞானம் நமக்குள் இருந்தே வரவேண்டும். ஞானம் பிறர் புகட்டி வருவதன்று. சாது ஒருவர் இருந்தார். அவர் ஓர் இடத்தில் தங்காது இடம் மாறிப் போய்க்கொண்டே இருந்தார். அவரிடம் ஓர் இளைஞன் வந்து தனக்கு ஞானம் புகட்ட வேண்டும் என்று கேட்டான். "ஞானம் பிறர் புகட்டிவராது" என்று அந்தச் சாது கூறினர். ஆனல் அவ்விளைஞன் விடாது அவரைப் பின் தொடரலானுன். ஓர் ஊர்ச்சாவடியில் அந்தச் சாது இரவு தங்கினர். அவ்விளைஞனும் அவரோடு தங்கி இருந்தான். அவர்கள் தங்கி இருந்த சாவடிக்கு எதிரில் ஒரு திருடன் வீடு இருந்தது. இரவில் திருடனுக்கும் அவன் மகனுக்கும் சம்பாஷணை நிகழ்ந்தது.

மகன்: அப்பா எனக்கு நீங்கள் திருடுவதற்குச் சொல்லித்தர வேண்டும்.

தந்தை: மகனே, திருட்டு உனக்குச் சொல்லிக் கொடுத்து வருவதன்று.

மகன்: எப்படியாவது நீங்கள் எனக்குத் திருட்டுச் சொல்லித் தந்தாக வேண்டும்.

தந்தை: நீ என்னுடன் வா. நான் அதை உனக்குக் காட்டித் தருகிறேன்.

இந்தச் சம்பாஷணைக்குப் பிறகு திருடனும் அவன் மகனும் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டார்கள். அவர் சம்பாஷணையைக் கேட்ட சாது தம்முடன் இருந்த இளைஞனை அவர்கள் பின்னல் சென்று நடப்பதைத் தெரிந்து வரும்படி கூறினர். சாதுவின் கட்டளைப்படி அவ்விளைஞன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்ருன். திருடனும் அவன் மகனும் பெரிய வீட்டுப் பக்கம்போனர்கள். அவ்வீட்டில் கன்னமிடுவதற்குச் சுவரில் துவாரம் போட்டு அத்துவாரத்தின் வழியாகத் திருடன் தன் மகனைக் கூட்டிச் சென்ருன். அப்பொழுது கோடைகாலமாக

இருந்தமையால் வீட்டில் இருந்தவர்கள் எல்லாரும் காற்ரேட்டத்திற்காக வெட்ட வெளியில் படுத்திருந்தார்கள். வீட்டின் அறைக்குள் ஒரு சிறு விளக்கு மட்டும் எரிந்துகொண்டு இருந்தது. அவ்வறைக்குள் குழந்தை ஒன்று தொட்டிலில் தூங்கிக்கொண்டு இருந்தது. அவ்வறைக்குள் இருந்த பெரிய பெட்டியைக் கள்ளச் சாவி போட்டுத் திருடன் திறந்தான். தன் மகனை அப்பெட்டிக்குள் போகச் சொன்னான். அவன் பெட்டிக்குள் சென்றதும் முன்பு இருந்ததுபோன்றே இழுத்துப் பூட்டிவிட்டான். தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையைக்கிள்ளி அழச்செய்துவிட்டு ஓடிப் போய்விட்டான். குழந்தை அழும் சப்தத்தைக் கேட்டு விட்டார் அனைவரும் எழுந்து கொண்டனர். வீட்டின் சுவரில் துவாரம் போட்டு இருப்பதைப் பார்த்தார்கள். வீட்டில் எந்தப்பொருளும் களவு போகவில்லை என்பதை அறிந்தார்கள். வயதான கிழவரைப் பெட்டியின் மீது படுக்க வைத்துவிட்டு மற்றவர்கள் வெளியில்படுத்துக் கொண்டார்கள். பெட்டிக்குள் இருந்து பெட்டியைப் பிருண்டும் சப்தம்கேட்டது. பெட்டிக்குள் பெருச்சாளி இருப்பதாகவும் அதை விரட்டி ஓட்டவேண்டும் என்றும் பெட்டிமேல் படுத்திருந்த கிழவர் மற்றவர்களை எழுப்பி விட்டார். சாவியைக் கொண்டு பெட்டியைத் திறந்ததும் பெட்டிக்குள் இருந்து திருடனுடைய மகன் 'ஆ ஆ ஆ' என்று உரக்கக் கத்திக்கொண்டு எழுந்தான். பேய் என்று பயந்து எல்லாரும் கீழே விழுந்தார்கள். அதுதான் சமயமென்று அறையில் உள்ள துவாரத்தின் வழியாகத் திருடன் மகன் வெளியே கிளம்பினன். திருடன் ஓடுகிருன் என்று அவனைப் பின் தொடர்ந்தார்கள். தோட்டத்துக்குள் இருந்த கிணற்றில் தடாலென்று சப்தம் கேட்டது. திருடன் கிணற்றில் விழுந்து விட்டானென்று எல்லாரும் கிணற்றை வளைத்துக்கொண்டார்கள். திருடன் மகன் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஒரே ஓட்டமாக வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். இளைஞனும் அவன் பின்னுல் சென்று சாதுவை அடைந்தான். பெருமூச்சு விட்டுக் கொண்டுவந்த மகனைப் பார்த்து "என்ன செய்தாய்? வெறுங்கை யுடனு வந்துள்ளாய்?" என்று திருடன் கேட்டான். "அப்பா நான் வெறுங்கையுடன் வருவேனு! இதோ கையில் மூட்டையுடன் வந்திருக்கிறேன்" என்று கூறிக் கையில் இருந்த மூட்டையைத் தந்தையின் முன் வைத்தான். "மிகவும் மகிழ்ச்சி. நீ செய்ததைப் பாராட்டுகிறேன். நீ எப்படித் தப்பித்துவந்தாய்?" என்று திருடன் மகனைக் கேட்டான். "அப்பா, என்னை நீ அகப்பட வைத்துவிட்டு வந்துவிட்டாய். பெட்டிக்குள்ளே இருந்துகொண்டு கையால் பெட்டியைப் பிருண்டி சப்தம் உண்டாக்கினேன். பெட்டிக்குள் பெருச்சாளி இருப்பதாக நினைத்துக்கொண்டு பெட்டியைத் திறந்தார்கள். நான் அதற்குள் பெட்டிக்குள் இருந்ததை எல்லாம் சுருட்டி பைக்குள் போட்டுக் கையில் எடுத்துக்கொண்டேன். பெட்டியைத் திறந்ததும் 'ஆ ஆ ஆ' என்று சப்தம் போட்டு அவர்களைக் கீழே விழச்செய்துவிட்டு ஓடிவந்தேன். என்னைப் பின்னுல் துரத்தினர்கள். தோட்டத்துக்குள் இருந்த கிணற்றில் கல்லைப் போட்டு அவர்களை ஏமாற்றிவிட்டு வந்துவிட்டேன்" என்ருன் திருடன் மகன். "அடே சிறுவா, இவற்றை எல்லாம் நான் உனக்குச் சொல்லித் தந்தேனு?" என்று கேட்டான் திருடன். இந்தச் சம்பாஷணையைச் சாதுவும் இளைஞனும் கேட்டார்கள்.

திருடன் தக்க சூழ்நிலையை உண்டுபண்ணி வைத்தான். அத்துடன் அவனுடைய வேலை முடிந்தது. அந்தச் சூழ்நிலையில் அவன் மகன் உள்ளத்தில் மறைந்துகிடந்த அறிவு வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. ஞானத்துக்கு ஏதுவான சூழ்நிலையை அமைத்துவைத்துவிட்டால் அந்தச் சூழ்நிலையில் பயிற்சி பெறுகிறபொழுது மனம் தூய்மை ஆகிறது. பிறகு ஞானம் தானுக உதயமாகிறது. உபநிஷத் காலத்தில் இருந்த ரிஷிகள் ஞானத்துக்கு ஏதுவான சூழ்நிலையைச் சிஷ்யர்களுக்கு அமைத்து வைத்தார்கள். அத்தகைய சூழ்நிலையில் ஜீவர்கள் பரத்திடம் திரும்பிப் போவதற்கான வழிகளை உணர்ந்தார்கள். அம்பிகையின் மகிமையைப் பேசுவதும்,பாடுவதும், அம்பிகையின் நாமத்தை ஜபிப்பதும் சிறந்த சாதனைகளாகும். அவற்றை நாம் செய்தால் நாம் அம்பிகைக்கு உகந்த செல்வர்கள், செல்வியர்களாக ஆகின்ருேம். அம்பிகையின் பேரருளால் நல்ல சாதகர்களாக நாம் ஆவோமாக. (முற்றும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-132

758. **सर्वलोकेशी** சர்வலோகேசீ — உலகமனைத்துக்கும் அரசியாயிருப்பவள்.

ஈஸ்வரீ என்பது அம்பிகைக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர். வரம்பை மீறிப் போகின்றவர்களை அடக்கியாளுதல், தன் ஆட்சியிலுள்ள அனைவர்க்கும் ஆதரவளித்தல் ஆகிய இச் செயல்கள் ஈஸ்வரிக்கு உரியவைகள் ஆகும். உலக நடைமுறையில் ஒழுங்குப்பாடும், நீதியும் அமைந்துள்ளன. கோல் வளையாள் என்பது அம்பிகைக்கு அமைந்துள்ள மற்றொரு நாமமாகும். அவளுடைய ஆட்சி முறையில் செங்கோல் பிசகுவது கிடையாது. யாரெல்லாம் எப்பொழுதெல்லாம் நெறி பிறழ்கிறார்களோ அவர்களுக்கு அப்போதைக்கப்போது நெஞ்சகத்தில் நிலைத்திருந்துகொண்டு மனவேதனையை வரவழைக்கின்றாள். ஒருசிலர் மனவேதனைப்படாத கல்நெஞ்சக்காரர்கள் ஆகிறார்கள். அன்னவர்களுக்குத் தக்க தருணத்தில் தேகத்துக்குரிய தண்டனை வருகிறது. அந்தப் பாங்கில் அன்னையின் நீதி என்றைக்கும் பிசகாது உலகெங்கும் நிகழ்ந்து வருகிறது. அந்தந்த உயிர்வகைகள் வெவ்வேறு பாங்குகளில் காப்பாற்றி வைக்கப்படுகின்றன. ஆதலால் அன்னை பராசக்தி உலகங்களனைத்துக்கும் ஈஸ்வரியாக அமர்ந்துகொண்டு ஆட்சியையும், ஆதரவுகொடுப்பதையும் முறையாக நடாத்தி வருகிறாள்.

759. **विश्वधारिणी** விச்வதாரிணீ — பிரபஞ்சத்தைத் தாங்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மண்ணுலகில் வசித்துவரும் அனந்தங்கோடி உயிர்வகைகளுக்கு ஏற்ற பாதுகாப்பு முறைகள் வியப்புக்குரியனவாம். பெற்றோர்களாக இருந்துகொண்டு, பிறப்பெடுத்துள்ள சின்னஞ்சிறு உயிர்வகைகளைக் காப்பாற்றி வருவது அன்னை பராசக்தியின் ஆதரவேயாம். பூதங்கள் ஒன்றோடொன்று முரண்படாது பிரபஞ்ச வாழ்க்கையை நல்ல பாங்கில் வைத்திருப்பது அன்னையின் ஆதரவாம். கோளங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளாது இனிது இயங்கி வருவது அன்னையின் ஆதரவிலேயாம். இங்ஙனம் பிரபஞ்சத்தின் அமைப்பில் மிக நுண்ணியதிலிருந்து மிகப் பெரியது வரையில் எந்தப் பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அன்னையின் ஆதரவு புலனாகிறது. ஆகவே விசுவம் முழுவதும் அன்னை பராசக்தியினால் நல்ல பாங்கில் தாங்கி வைக்கப்படுகிறது என்பதற்கு அத்தாட்சி விசுவத்தின்கண்ணே உள்ளது.

760. **त्रिवर्गदात्री** த்ரிவர்க்கதாத்ரீ — உயிர் வாழ்க்கைக்குரிய உறுதிப்பொருள்கள் மூன்றை வழங்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள். உண்மையில் உறுதிப்பொருள்கள் நான்கு. அவை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்றும், அறம், பொருள், இன்பம், வீடு என்றும் இயம்பப்படுகின்றன. இந்த நான்கினுள் முதல் மூன்றுமே சிறப்பாக இந்த நாமத்தில் அடங்கியிருக்கின்றன. அதற்கேற்ற காரணமும் உண்டு. நான்காவது உறுதிப்பொருளாகிய வீடு அல்லது மோட்சத்தைப் பெறுவது முற்றிலும் பண்பாடடைந்துள்ள மக்களுள் ஒரு சிலர்க்கே உரியதாம். பின்பு திரிவர்க்கம் அல்லது முப்பால் உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானவை. தர்மம், அர்த்தம், காமம் அல்லது அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால் மக்களுக்கு மட்டும் உரியவைகள் ஆகமாட்டா. உயிர் வகைகளனைத்தும் அதனதன் பாங்குக்கேற்றபடி அறநெறியைப் பின்பற்றுகின்றன. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். ஓர் இனத்தைச் சேர்ந்த பறவைகள் சோலை ஒன்றில் ஏராளமாகக் கூடி வாழ்ந்திருக்கின்றன. அவைகளோடு வம்புச் சண்டைக்கு ஏனைய இனத்துப் பறவைகள் போகமாட்டா. அந்தந்தச் சூழ்நிலையில் அந்தந்த உயிர்வகைகள் நெறி பிறழாது வாழ்ந்து வருகின்றன. மண்ணுலக வாழ்வுக்கு உயிர்கள் அனைத்துக்கும் உணவு தேவை. தேவையான உணவே பொருள் எனப்படுகிறது. ஒரு புஷ்பத்தில் தேனீ ஒன்று அமர்ந்து தேன் சேகரிக்கிறபொழுது மற்றொரு ஈ அதனோடு சண்டைக்குப் போகாது. இத்தனை வகையான உயிர்களுக்கும் ஏற்ற உணவை அம்பிகை நல்கிக்கொண்டே இருக்கிறாள். ஆதலால் அவைகளுக்கு உணவுப் பஞ்சம் கிடையாது. தேவையான பொருளை அவைகள் பெற்றுக்கொண்டே இருக்கின்றன. அடுத்தபடி இன்புற்று இருப்பது

உயிர்களனைத்துக்கும் சொந்தமாயுள்ள பேறுஆகும். ஆங்காங்கு வாழ்ந்து வருகின்ற வெவ்வேறு விதமான உயிர் வகைகள் தம்தம் போக்கில் இன்புற்றேயிருக்கின்றன. ஆதலால் அம்பிகையை த்ரிவர்க்க தாத்ரீ அல்லது முப்பாலை வழங்கிக்கொண்டிருக்கின்ற பராசக்தி எனப் போற்றுவது முற்றிலும் பொருத்தமானதே.

761. सुभगा सுபகா—பக என்னும் சொல் ஆறு விதமான தெய்விக சம்பத்துக்களைக் குறிக்கின்றன. அவையாவன: ஞானம், வைராக்கியம், வீர்யம், ஐசுவரியம், ஸ்ரீ, கீர்த்தி. இவைகளை உடைத்திருக்கிற சிவபெருமான் பகவான் எனப்படுகிறார். இவைகளை உடைத்திருக்கிற அம்பிகை பகவதி எனப்படுகிறாள். அம்பிகையினிடத்து அந்த ஷட்குண சம்பத்து அமைந்திருப்பதில் தனி மகிமையுண்டு. இனிமையும், மேன்மையும், சீர்மையும் அந்தத் தெய்விக சம்பத்துக்களில் அமைந்திருப்பதால் அவள் சுபகா என இயம்பப்பெறுகிறாள்.

சூரியனிடத்துள்ள பிரகாசம் நலன்கள் யாவும் நிரம்பப்பெற்றிருக்கிறது. சூரியனுக்குப் பகன் என்னும் பெயர் அமைந்திருக்கிறது. அது பெண்பாலாக மாறியமைகிறபொழுது அவள் பகா என இயம்பப் பெறுகிறாள். அத்தகைய சூரியப் பிரகாசமாக இருந்து சங்கரனுக்கும், நாராயணனுக்கும் அன்னை பராசக்தி மகிமைகளை வழங்கிக்கொண்டிருக்கிறாள். ஆதலால் அவள் சுபகா என இயம்பப்பெறுகிறாள்.

பிரபஞ்சம் எங்குமுள்ள சரம் அசரம்; இயங்குவன, இயங்காதன ஆகிய யாவும் பெற்றுள்ள மகிமைகள் அன்னை பராசக்தியிடமிருந்து வந்துள்ளவைகளாம்.

ஐந்து வயதுள்ள சிறுமி ஒருத்திக்குப் பகா என்னும் பெயர் வந்துள்ளது. சின்னஞ்சிறு வயதில் அவளிடத்துத் தெய்விகப்பெற்றியே பொலிந்துகொண்டிருப்பதால் அச்சிறுமி சுபகா என இயம்பப்பெறுகிறாள். எல்லாவிதமான மகிமைகளோடுகூடிய ஐந்து வயது சிறுமியாக அம்பிகை அமைந்துள்ளாள்என்பதுகோட்பாடு.

762. त्र्यम्बका த்ரயம்பகா — மூன்று கண்களை உடையவள்.

சூரியன், சந்திரன், அக்னிஆகிய மூன்றையும் தன் கண்களாக அமையப்பெற்றிருப்பவள் அம்பிகை. இந்த மூன்றின் வெளிச்சம் இல்லாத விடத்து ஜீவாத்மாக்களுடைய கண்கள் செயலற்றுப் போகின்றன. கண்கள் செயல்புரிவதற்கு இந்த மூன்று தேவதைகளின் பிரகாசம் அவசியமாகிறது. ஆதலால் இவைகளைத் தன்னுடைய நேத்திரங்களாக அம்பிகை உடைத்திருப்பதில் பொருள் மிகப் புதைந்திருக்கிறது.

திரிமூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியவர்களுக்கு அன்னையின் ஸ்தானத்தை அம்பிகை பெற்றிருப்பதால் அவள் த்ரயம்பகா என்று அழைக்கப்படுகின்றாள்.

763. त्रिगुणात्मिका த்ரிகுணாத்மிகா — முக்குணவடிவினள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மண்ணினின்று மட்பாண்டங்கள் அனைத்தும் அமையப்பெறுவது போன்று பிரபஞ்சம் முழுதும் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களால் ஆக்கப் பெற்றது. இந்த மூன்று குணங்களுக்குப் புறம்பாகப் பிரபஞ்சத்தில்ஏதுமில்லை. அன்னை பராசக்தி தானே இந்த மூன்று குணங்கள் மயமாக அமைந்துள்ளாள் என்பது கோட்பாடு. ஆதலால் பிரபஞ்சம் வேறு அம்பிகை வேறு அன்று. பிரபஞ்சம் நமக்குப் பஞ்சேந்திரியங்கள் மூலமாகப் புலப்படுகிறது. ஆதலால் நாம் யாண்டும் அம்பிகையின் சன்னிதியிலிருந்துகொண்டு அம்பிகையையே தரிசித்துக்கொண்டும், அவளுடைய ஆதரவிலேயே வளர்ந்துகொண்டும் வருகிறோம். மனிதன் இருந்த இடத்தில் பூமாதேவியைத் தரிசித்துக்கொண்டும் அவளுடைய ஆதரவில் வசித்துக்கொண்டும் இருக்கிறான். அதே பாங்கில்தான் முக்குணமயமாயுள்ள அன்னை பராசக்தியின் சொரூபத்தில் ஜீவகோடிகளனைத்தும் அடங்கியிருக்கின்றன.

மனிதன் ஒருவன் காட்டு வழியே போய்க்கொண்டிருந்தான். அவ்வழியே வந்த மூன்று திருடர்கள் அவனை மடக்கி அவனுடைய பொருள்களைத் திருடிக்கொண்டனர். முதல் திருடன் அந்த மனிதனைக் கத்தியால் வெட்டப் போனான். இரண்டாம் திருடன் அவனை வெட்ட வேண்டாம் என்று தடுத்துக் கட்டிப் போட்டுவிடலாம் என்று கூறினான். இவ்வாறு செய்துவிட்டு மூவரும் சற்று தூரம் போனவுடன் மூன்றாம் திருடன் திரும்பி வந்து அம் மனிதனிடம் 'வருந்தாதே, உன்னை வீட்டிற்கு

அனுப்பி வைக்கிறேன் என்று கூறிக் கட்டுக்களை அவிழ்த்துச் சற்று தூரம்வரை கூடவே சென்றான். இவ்வுலகம்தான் அந்தக் காடு. சத்வம், ரஜஸ், தமஸ் ஆகியவைதான் அந்த மூன்று திருடர்கள். ஆத்ம ஞானம் என்ற அவனுடைய பொருளை மூவரும் திருடினர். ரஜஸ், தமஸ் ஆகிய குணங்கள் மனிதனை உலக பந்தத்தில் கட்டுப்படுத்துகின்றன. சத்துவகுணம் அதிலிருந்து அவனை விடுவிக்கிறது.

முக்குணங்களுள் தமோகுணம் இருள் சூழ்ந்தது, ஜடமயமானது, உணர்ச்சியற்றது. நாம் அயர்ந்து உறங்குகின்றபொழுது தமோகுணத்தில் மூழ்கியிருக்கின்றோம். தமோகுணத்தை முறையாகப் பயன்படுத்தி ரஜோகுணத்திற்கு நாம் வரவேண்டும். அன்னையின் மகிமைகளை விளக்குகிற நூல்கள் யாதேவி சர்வபூதேஷு நித்ரா ரூபேண சம்ஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ்தஸ்யை என்று வணங்குகின்றன. நித்திரையினிடத்துத் தெய்விகமான நல்லிணக்கம் பூண்டு நித்திரையைச் சிறிது சிறிதாகக் குறைப்பது அம்பிகையின் வழிபாடாகிறது. தமோகுணத்தின் ஆதிக்கத்தை வெல்லுவது நல்ல ஆத்மசாதனம். தமோகுணத்தின் நிறம் கறுப்பு. தமோகுணத்தை வென்று அதற்கு ஒரு படி மேலே இருக்கிற ரஜோ குணத்துக்கு ஆத்மசாதகன் வரவேண்டும். செயல்களும், நடமாட்டங்களும் யாவும் ஒன்றுசேர்ந்து ரஜோகுணத்திலடங்குகின்றன. தூக்கி வினைசெய் என்பது கோட்பாடு. திறமையுடன் மேலான செயல்களைப்புரிவது அம்பிகையின் வழிபாடு. முறையாக வினையாற்றுபவன் பண்பாட்டில் மேலே வருகிறான். தூக்கி வினையாற்றுதற்கு உற்ற உபாயமாயிருப்பது சிரத்தை அல்லது ஊக்கம். அன்னையின் ஆராதனையில் சிரத்தை நல்லதோர் இடம் பெறுகிறது. யாதேவி சர்வ பூதேஷு சிரத்தா ரூபேண சம்ஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை என்பது வழிபாட்டு முறை. சரியான சிரத்தையின் வாயிலாகவே மனிதன் மேன்மையுறுகிறான்.

பண்புடன் செய்கின்ற செயல்கள் யாவும் ஞானத் தெளிவை உண்டுபண்ணுகின்றன. வேறொரு பாங்கில் பகருமிடத்து முறையாக ரஜோகுணத்தைப் பயன்படுத்துபவன் சத்துவ குணத்தை எட்டுகிறான். சத்துவகுணத்தின் நிறம் வெண்மை. செயல் புரிவதற்கிடையில் நடுநிலை பிறழாதிருப்பது சத்துவகுணத்தின் பாங்கு. ஓர் உபமானத்தின் மூலம் இப்பொழுது மூன்று குணங்களின் பாங்குகளைப் பகரலாம். இயங்காது தரையில் கிடக்கிற பம்பரம் தமோ குணமயமானது. தட தட வென்று சுழல்கிற பம்பரம் ரஜோ குணமயமானது. சுழலுதற்கிடையில் அசைவற்று நடுநிலையில் இருப்பது போன்று காட்சி கொடுத்துக்கொண்டு சுழல்கிற பம்பரம் சத்துவகுணமயமானது. சத்துவ குண மனிதன் ஆத்மபரிபாகத்தில் மேல் நிலைக்கு வந்துள்ளவன் ஆகிறான். அவனுடைய வாழ்வு முழுதுமே இடையறுத வழிபாடாக வடிவெடுக்கிறது. அன்னை பராசக்தி முக்குண மயமாயிருக்கிற பிரபஞ்ச சொரூபமாயிருக்கிறாள். உலகத்தோடு நாம் வைக்கிற இணக்கமே உண்மையான கடவுள் வழிபாடு ஆகிறது. படம் ஒன்றில் அன்னையின் சாந்நித்தியத்தைக் கற்பனையாக ஆவாஹனம் பண்ணிக்கொண்டு மற்ற உயிர் வகைகளோடு நல்லிணக்கம் பண்ணிக்கொள்ளத் தெரியாதவன் அம்பிகையின் சொரூபத்தை உள்ளபடி அறிந்தவன் ஆகான். தோன்றியுள்ள அனைத்துமாய் அம்பிகையிருப்பதால் உயிர்களனைத்திடத்தும் முறையான நல்லிணக்கம் வைத்துப் பழகுதலே தலை சிறந்த ஆராதனையாகிறது. தெய்வ தரிசனத்திற்காக மனிதன் இங்குமங்கும் தேடியலைய வேண்டியதவசியமில்லை. தென்படுகிற அனைத்தையும் அம்பிகையின் சொரூபமாகக் கண்டு பழகுதல் நல்லவழிபாடு. கோயில் வழிபாட்டிலேயே இக்கோட்பாடு நல்லபாங்கில் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கோயிலில் மூர்த்தியாகப் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருப்பதைக் கல்லாகவோ, செம்பாகவோ, காகிதமாகவோ காணாது கடவுள் மயமாய்க் கண்டு பழகுகிறோம். பிறகு இருந்த இடத்திலிருந்து கொண்டு கை கூப்பி நாலாபக்கமும் வணங்குகின்றோம். காண்பதையெல்லாம் கடவுள் மயமாகக் காணுதல் வேண்டும் என்பது அதன் உட்கருத்து.

முக்குணமயமாயுள்ள அம்பிகை பிரபஞ்சமயமாகக் காட்சி கொடுத்து நம்மைப் பண்படுத்துகிறாள். அவளுடைய பண்பாட்டுக்கு உட்பட்டிருக்கிறவர்கள் எல்லாரும் நல்ல ஆத்மசாதகர்கள் ஆகிறார்கள்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (208) **தசரதராமன் தர்மநெறி பிறழாதவன் என்பது கோட்பாடு. தையல் சொல் கேளேல் என்பது ஓர் அறக்கோட்பாடாகும். ராமன் கைகேயி சொற்கேட்டு அயோத்தி வாசிகளுக்கு ஏமாற்றத்தையும், துன்பத்தையும் விளைவித்தான். மாரீச மானைப் பிடித்துத் தரும்படி சீதை கேட்டதற்கிணங்கி தனக்குத் துன்பத்தையும் சீதைக்குக் கேட்டையும் விளைவித்தான். மானாக வந்தது மாரீசனுடைய சூழ்ச்சி என்று அறிந்திருந்த லட்சுமணன் சீதையின் சொற்கேட்டு அவளுக்குப் பாதுகாப்பில்லாது விட்டுவிட்டுப் போனது சரியன்று. தசரத குமாரர்கள் நடத்தை தர்மத்தினின்று பிசகியவைகள் அல்லவா?**

தையல் சொல் கேளேல் என்னும் கோட்பாட்டை உலகுக்குக் கொடுத்தது ஔவை என்னும் ஒரு தையல். பெண்பாலை நம்ப வேண்டாம் என்று ஔவையாகிய பெண்பால் ஒருத்தி ஏன் பகர்ந்தாள் என்பதை ஆராய வேண்டும். இக்கோட்பாட்டைப் புகட்டிய பொழுது ஔவை அறிவில் தெளிந்திருந்த முதுமையை அடைந்திருந்தபொழுதாம். மங்கையருள் பலர் இளமையில் அறிவுத்துறையில் முன்னேற்றமடையாதிருக்கின்றனர். கிட்டத்தட்ட பாலர் நிலையில் அவர்களிருக்கிறார்கள். ஆதலால் அவர் சொற்கேட்பதற்கு முன்பு அவர்கள் விரும்புவது பொருத்தமானதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். ராமன் அப்படி ஆராய்ச்சி பண்ணவில்லை. மாற்றாந்தாயாகிய கைகேயியிடம் அவன் முற்றிலும் அடக்கம் பழகிய மகனாக நடந்துகொண்டான். "தாயே, தீயில் குதி என்றால் குதிப்பேன். சமுத்திரத்தில் மூழ்கு என்றால் அங்ஙனம் செய்வேன். விஷத்தைக் குடி என்றால் அந்த ஆணையையும் நிறைவேற்றுவேன்" என்று அவன் இயம்பினான். தையல் சொல் கேளேல் என்ற கோட்பாட்டுக்கு இங்கு இடமில்லை. புத்ரோத்தமன் பெற்றோர்களிடம் எப்படி நடந்துகொள்ளுகிறான் என்பதற்கு ராமன் எடுத்துக்காட்டு. தாய் வேறு, மாற்றாந்தாய் வேறு என்கின்ற வேற்றுமையும் அவனிடத்தில்லை. பின்பு வனவாசம் பண்ணியபொழுது மாரீச மானைப் பிடித்துத் தரும்படி சீதை வேண்டியபொழுது ராமன் அதற்கு இசைந்தான். மானைத் துரத்திக்கொண்டு ஓடினான். இங்குத் தையல் சொல் கேளேல் என்னும் கோட்பாட்டினின்று பிசகியவன் போன்று ராமன் தென்படுகிறான். சீதை அந்த மானின் மீது வாஞ்சை வைத்ததும் பிழை. கணவன், மனைவியாகிய இருவரும் பிழை போனதைக் குறித்து இலட்சுமணன் எச்சரிக்கை செய்தான். பின்பு ராமனைக் காப்பாற்றுவதற்காக இலட்சுமணனைச் சீதை விரட்டியோட்டினாள். ராமனுக்கு ஆபத்து ஏதும் நேராது என்று அறிந்திருந்த தம்பி தையல் சொல் கேட்டு அதன்படி ஓடியதும் பிழை. ஆக சீதை, ராமன், இலட்சுமணன் ஆகிய மூவரும் பஞ்சவடியில் வசித்திருந்தபொழுது மாரீச மானினால் ஏமாற்றப்பட்டுப் பிழைபோயினர். இப்படிப் பிழைபோனவர்கள் உலகுக்கு எங்ஙனம் அறநெறியில் முன்மாதிரியாவார்கள் என்பது கேள்வி.

உலக மக்களில் பலபேர்க்குத் துன்பத்தை விளைவித்தவன் இராவணன். இராவணன் என்னும் சொல்லே அழச் செய்பவன் எனப் பொருள்படுகிறது. பெண்பாலர் பலரை நெறி வழுவிப்போய் அழும்படி செய்தவன். நெறி வழுவாது வாழ்ந்துவந்த மற்றவர்கள் பலரை அழச் செய்தவன் அவன். அத்தகைய கொடியவனை அழிப்பதற்கென்றே தோன்றிவந்தவன் இராமன். வம்புச் சண்டைக்குப் போய் அவனை அழிப்பது முறையன்று. அதற்கேற்ற குற்றத்தை இராவணன் செய்தால்தான் அவன் மீது ஆக்ரமிப்பது ராமனுக்குப் பொருந்தும். அதற்கேற்ற சூழ்நிலையை இயற்கை தானே செய்து கொடுத்தது. தண்டகாரண்யத்தில் ரிஷிகளோடு வசித்துவந்த ராமனைப் பஞ்சவடிக்கு அனுப்பிவைத்தவர் அகஸ்தியர். ஆக அகஸ்தியரை முகாமையாகக்கொண்டு இராவணனுடைய ஜனஸ்தானத்தின் எல்லைப்புறமாகிய பஞ்சவடியில் இராமன் கொண்டுவந்து வைக்கப்படுகிறான். அங்கு சூர்ப்பநகை வந்து நடந்துகொண்ட போக்கும் சீதையைக் கொல்ல முயன்றதும் முறையன்று. அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கச் சகோதரர்கள் கடமைப்பட்டிருந்தனர்.

சூர்ப்பநகையின் மூக்கை அறுத்துவிட்டனர். அவள் ராவணனுடைய தங்கை. பழிக்குப் பழி வாங்குகிற போக்கில் இராவணன் சீதையைத் திருடிக்கொண்டு போகத் திட்டமிட்டான். அத் திட்டத்தை மாரீசன் மூலமாக நிறைவேற்றினன்.

பெரும் கொடுமை ஒன்றை உலகினின்று அகற்றுதற்கென உலகில் வந்துள்ள வீரன் ஒருவன் குற்றமற்ற ஒரு சிறிய பாங்கில் நெறி வழுவவேண்டும். அப்பிசகைப் பெரிய குற்றவாளி பயன்படுத்தித் தன்னுடைய பொல்லாங்கில் தீவிரமாக ஈடுபடுகிருன். அதன் விளைவாக அவனுக்குரிய தண்டனைவந்து வாய்க்கிறது. இது இயற்கையின் நியதி. இந்த நியதி நிறைவேறுதல் பொருட்டே சீதை என்னும் தையல் சொல் கேட்டு ராமன் மாரீச மானின்பின் ஓடினன். பிறகு சீதையினல் விரட்டியோட்டப்பட்டு இலட்சுமணன் காவலினின்று அப்பால் சென்ருன். சீதையை அபகரித்துக்கொண்டு போவதற்கு இராவணனுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அதைப் பயன்படுத்தினன். அதன்விளைவாகத் தன்னுடைய மரணத்துக்கு அவன் தானே வழி வகுத்து வைத்தான்.

ஆக ஒரு பெரிய தீங்கை அகற்றுதற்கு முகாமையாகக் குற்றமற்ற ஒரு சிறிய பிழை சான்ருேரிடத்து நிகழுமானல் அதைக் குற்றமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சீதையும், இராமனும் இலட்சுமணனும் ஏமாற்றமடைந்தது இராவணனுடைய அழிவுக்காகவேயாம்.

கேள்வி: (209) **இந்து கோயில்களில் பிறமதத்தினரை ஏன் அனுமதிப்பது இல்லை? அனுமதிக்கலாமா? கூடாதா?**

சரித்திர பூர்வமாக இக்கேள்வியை ஆராயுமிடத்துச் சில நூற்ருண்டுகளுக்கு முன்பு புறமதஸ்தர்கள் ஹிந்து கோயில்களைத் தாக்கவும், கொள்ளையடிக்கவும், அவற்றின் தூய்மைக்குப் பங்கம் பண்ணவும் முற்பட்டனர். அப்பொழுது தற்பாதுகாப்புக்காகக் கோயில்களில் பிரவேசிக்க சொந்த மதஸ்தர்களையே அனுமதித்தனர். பிறகு ஆங்கில அரசாட்சி வந்தபிறகு கொள்ளையடிக்கும் மனப்பான்மை மாறிப்போயிற்று. விக்ரஹ ஆராதனையைக் குறித்துக் குற்றம் காணுகிற மனப்பான்மையும், ஏளனம் பண்ணுகிற மனப்பான்மையும் புறமதஸ்தர்களிடத்து வடிவெடுத்தன. ஆதலால் தற்பாதுகாப்பின் பொருட்டுப் புறமதஸ்தர்கள் யாருமே ஹிந்துக் கோயில்களுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப் படவில்லை. கிரியா விசேஷங்களுடன் கோயில் வழிபாடு முழுதும் ஹிந்துக்களுக்காகவென்றே அனுஷ்டிக்கப்பட்டன. புறமதஸ்தர்களைக் கோயிலுக்குள் பிரவேசிக்கவொட்டாது காப்பாற்றி வைப்பது தங்களுடைய கடமை என ஹிந்துக்கள் உணர்ந்தனர். தெரிந்தோ, தெரியாமலோ புறமதஸ்தர்கள் கோயிலுக்குள் புகுந்துவிட்டால் தீட்டு ஏற்பட்டு விட்டது என்று கருதி அதற்கேற்ற புரோக்ஷணம் போன்ற தூய சடங்குகளைக் கையாண்டு வந்தனர். சூழ்நிலையினல் தூண்டப்பெற்று ஹிந்துக்கள் தங்களுடைய ஆலயங்களைப் புறமதஸ்தர்களிடமிருந்து இதுகாறும் காப்பாற்றி வைத்தது முறை.

இப்பொழுது சூழ்நிலை மாறியிருக்கிறது. ஹிந்து மதத் தத்துவங்களை உள்ளபடி அறிந்து கொள்ள விரும்புகிற புற மதஸ்தர்கள் பலர் இருக்கின்றனர். ஏளனம் பண்ணும் மனப்பான்மை அகன்று போயிற்று. சிறப்புக்களை அறிந்துகொள்ளும் மனப்பான்மை வளர்ந்து வருகிறது. அங்ஙனம் ஹிந்துமதத் தத்துவங்களை ஆலய வழிபாட்டின் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறவர்களை இனி நாம் ஆலயத்தினுள் வர அனுமதிக்க வேண்டும். அன்புடன் அவர்களை வரவேற்க வேண்டும். கோயில் அமைப்பிலும், கோயில் வழிபாட்டிலும் அடங்கியுள்ள மேலாம் கோட்பாடுகளை மற்றவர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். ஐம்பொறிகளையும்மேன்மைப்படுத்துவதற்குப் பூஜாகிரியைகள் பயன்படுகின்றன. பூஜாகிரியைகளிலுள்ள தத்துவங்களையும் மற்றவர்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். அப்படிச் செய்வது நல்ல மதப்பிரச்சாரம் ஆகிறது. நல்ல மனப்பான்மையுடன் வருகிறவர்கள் ஹிந்து மதத்தில் அமைந்திருக்கிறமேலாம் கோட்பாடுகளை உள்ளபடி அறிந்து கொள்வார்கள். அங்ஙனம் அவர்களுக்கு ஆலய வழிபாட்டின் வாயிலாக நல்லறிவு புகட்டுவது நல்ல ஞானயக்ஞமாகும். அதைச் செய்ய நாம் இப்பொழுது கடமைப்பட்டிருக்கின்ருேம்.

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

புராணமும் தமிழும்:

தமிழில் இப்போது இருக்கக்கூடிய மிகப் பழமையான நூல் தொல்காப்பியம் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

தொல்காப்பியத்தை எழுதிய தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வடமொழி நூல்களும், கருத்துக்களும், வடமொழிச் சொற்களும் தமிழில் வந்து கலக்கத் துவங்கிவிட்டன என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

"வடமொழியும் திராவிடமொழியும் நீண்ட காலம் ஒன்றோடு ஒன்று நெருங்கி இருந்தன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை" [Dravidie Studies] என்ற அறிஞர் ஒருவரின் கருத்து ஒப்பிடத்தக்கது.

புராணங்கள், கடவுள் பூமியில் வந்து அவதாரம் செய்த நிகழ்ச்சிகள் ஆகியவை சம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட நூல்களில் சொல்லப்பட்டுள்ளன.

வடமொழிக் கருத்துக்கள் தமிழ் மொழியில் வந்து கலந்த சமயத்தில் அம்மொழியில் அமைந்த புராணக் கருத்துக்களும் தமிழில் கலந்தன.

அகம்-புறம் அதாவது அகத்திணை-புறத்திணை என்ற பாகுபாடு சங்க கால இலக்கிய மரபு. இப்படிப்பட்டது என்று வார்த்தைகளால் பிறருக்கு விளக்கிக்கூற இயலாமல், தானே அனுபவித்து உணரக் கூடியது அகத்திணை; தன்னுடைய மனத்தில் உள்ள உணர்வுகளைத் தானே அனுபவிப்பது அகத்திணை.

தன்னுடைய மன உணர்வுகளைப் பிறருக்கு விளங்குமாறு எடுத்துக்கூற இயலுவது-புறத்தார்க்குப் புலப்படுமாறு விளக்குவது புறத்திணை.

இப்படிப்பட்ட அகம் புறம் என்ற சங்க கால இலக்கிய மரபு காலப்போக்கில் வேறு வடிவம் கொள்ளத் தொடங்கியது.

புராணக்கருத்துக்கள், சமயக் கருத்துக்கள் தமிழில் தோன்றத் துவங்கியதும் அறம், பொருள், இன்பம், வீடு [தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்] என்ற முறையில் இலக்கிய மரபு மாறத் துவங்கியது.

புராணங்களின் மூலம் புதிய சிந்தனை :

புராணங்கள் தமிழ்ச் சமூகத்தில் புதிய சிந்தனைகளை-அதுவரையிலும் இல்லாத ஒரு சிந்தனையைத் தோற்றுவித்தன.

பக்தி நெறியை வலியுறுத்தும் எண்ணமும், பக்தி நெறிபற்றி வலுவூட்டும் கருத்துக்களும் சங்க காலத்தில் இல்லை. எனவே, சங்க கால இலக்கியங்களில் பக்தி நெறிக்குப் பிரதான இடம் கொடுக்கப்படவில்லை. இது ஒரு குறையாகாது. அக்காலச் சூழ்நிலை அவ்வாறு. காலத்துக்கு ஏற்றவாறே இலக்கியங்கள் தோன்றும் என்பதும், இலக்கியம் காலத்தைக் காட்டுகின்ற கண்ணாடி என்பதும் இலக்கியத் திறனாய்வாளர்களின் கருத்து. அம்முறையில் சங்க கால இலக்கியங்கள் நிறைவு செய்வனவாய் அமைந்திருந்தன.

காலப் போக்கில் இறை நம்பிக்கை, சமய உணர்வு, தத்துவச் சிந்தனைகள் மக்கள் மனத்தில் வளரத் துவங்கின. இவ்வளர்ச்சிக்கு ஏற்றவாறு மக்களின் பண்புகள், செய்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகள் மாறத் தொடங்கின.

ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுபவர்களின் தன்மைகள், செய்கைகளுக்கு ஏற்றவாறு அந்த மொழி உருப்பெறுகிறது.

தமிழ் மக்களின் தன்மைகள், செய்கைகள் ஆகியவை காலத்திற்கு ஏற்றவாறு மாறத் துவங்கியதும், தமிழில் புராண நூல்களும் விரிந்த அளவில் தோன்ற ஆரம்பித்தன.

மக்களின் இயல்புகள், செயல்கள் ஆகியவற்றில் மாற்றம் ஏற்பட்டது. பக்தி மார்க்கம் தோன்றி வளரலாயிற்று. இறந்த பிறகு நமக்கு என்ன கதி கிடைக்கும்? மீண்டும் இந்த உயிருக்குப் பிறவி உண்டா, இல்லையா? இந்த உலகத்தில் இனிமேல் பிறக்கவே வேண்டாம். அப்படிப் பிறந்தாலும் அம்பலத்து அரசின் பாதங்களை மறவாமல் போற்றி வணங்கக்கூடிய பேறு கிடைக்க வேண்டும் என்றெல்லாம் மக்கள் சிந்திக்கத் துவங்கிவிட்டார்கள். மக்கள் தங்களைப் பற்றி உணர்ந்தார்கள்; கூடவே பய உணர்வும் அவர்கள் உள்ளத்தில்

உண்டாயிற்று. இறை உணர்வு பொங்கித் ததும்ப ஆரம்பித்தது. பக்திமார்க்கம் வளரலாயிற்று.

இந்தச் சிந்தனைகளுக்கு ஏற்றவாறு தமிழிலும் புதிய சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள், நூல்கள் உண்டாகத் துவங்கின.

தமிழில் புராணங்கள் உண்டான விதம் :

சங்ககால இலக்கியங்களில் புராணக் கருத்துக்கள் ஆங்காங்கே சிற்சில இடங்களில் காணப்படுகின்றன; அவையும் புராணத்தில் காணப்படும் சில சம்பவங்களைக் கூறும் பகுதிகளாக அமைந்துள்ளன.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் சிறு சிறு துணுக்குகளாகக் கூறப்பட்ட புராணக் கருத்துக்கள், காலப்போக்கில், மக்களின் மனநிலை மாறுபட்டதற்கு ஏற்றவாறு புராணங்களாகப் பெரும் வடிவம் கொள்ளத் துவங்கின.

அடியார்களும் பக்தி மார்க்கமும் :

தமிழ் நாட்டில் பக்தி மார்க்கம் 6, 7ஆம் நூற்றாண்டுகளில் பரவத் துவங்கியது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளப் பெருமக்கள் பக்தி மார்க்கத்தை வளர்த்தார்கள்.

இப்பெருமக்கள் தங்கள் கூற்றுக்களாக— "போற்றுதே ஆற்ற நாள் போக்கினேனே!"; "சிவனே எம் பெருமானே உன் அருள் பெறும் நாள் என்று என்றே வருந்துவனே!" என்றெல்லாம் தங்களை உணர்ந்த நிலையில் பாடினர்கள். "மனிதர்காள்! இங்கே வம் (வாருங்கள்) ஒன்றுசொல்லுகேன்!" என்று மக்களை அழைத்துப் பக்தி நெறியையும், கடவுள் உணர்வையும் ஊட்டி வளர்த்தார்கள். இறைவனுடைய திருநாமம், "மருந்து, மந்திரம், மறுமை நெறி" ஆகும் என்று கடவுள் நாம மகிமையைச் சொன்னார்கள். "சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்" என்று தேவாரப் பாடல்களின் பெருமையைக் கூறிப் பாடுமாறு செய்தார்கள்.

இவ்வாறு அடியார்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் சிந்தனைகளை எடுத்துக்கூறிய நிலை கால மாறுபாட்டில் மாறத் துவங்கியது.

கடவுள் உணர்வு, பக்தி ஆகியவற்றைக் கதைகளுடன் இணைத்து, எளிய முறையில், மக்களுக்கு விளங்கும்படியாகப் புராணங்களாக எழுதத் துவங்கினர். இம்முறையில் புராணங்கள், இதிகாசங்கள் தோன்ற ஆரம்பித்தன.

அதாவது, ஒருகாலத்தில், தனித்தனிப் பாடல்கள் மூலம் கடவுள் உணர்வை ஊட்டினர்கள். அந்நிலை மாறி, கடவுள் உணர்வையும், பக்தியையும் வளர்ப்பதற்கு மக்கள் மனத்தில் பதியக் கூடிய எளிய கதைகள் அமைந்த புராணங்களை எழுதத் துவங்கிவிட்டார்கள்.

புராணங்களின் இயல்புகள்:

புராணங்கள் கற்பனை வளம் மிக்கவை. கற்பனை கலந்து சுவைபட எழுதப்பட்டவை. வாழ்க்கையில் நடக்கக்கூடிய நடப்பியலைக் (Realism) கூறுகின்றன. மக்கள் அடைய வேண்டிய குறிக்கோளியலை (Idealism) இயம்புகின்றன.

உலகம் முழுவதும் ஒருகாலத்தில் இந்து மதம் பரவிச் செல்வாக்குப் பெற்றிருந்தது. அவ்வாறு செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதற்கான அடையாளங்களை இப்போது ஆராய்ச்சி அறிஞர்களும், தொல்பொருள் அகழ்வு ஆய்வுத் துறையினரும் கண்டறிந்து கூறி வருகின்றனர்.

இந்தியாவில் கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீரம் வரையிலும் இந்துமதம் பரவி இருக்கிறது. உலக ஒருமைப்பாட்டையும், இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவது இந்து மதத்தின் குறிக்கோள் ஆகும்.

அம்முறையிலே இந்தியாவில் தோன்றிய புராணங்கள் வடநாடு தென்னாடு என்ற பேதம் இல்லாமல் பாரதத்தின் பெருமைகளைக் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் உள்ள இராமேஸ்வரத்து அம்பிகை பர்வதவர்த்தினி வடக்கே இமயமலையை ஆண்ட மன்னன் இமவானின் புதல்வியாகக் கூறப்படுகிறாள். இமயமலையில் வாழ்ந்த அகத்திய முனிவர் தமிழ்நாட்டில் உள்ள பொதிகை மலைக்குவந்து தங்கித் தமிழைவளர்த்திருக்கிறார். வடக்கே பிறந்தவர்கள் தெற்கே இராமேஸ்வரத்திற்கும் கன்னியாகுமரிக்கும் வந்து தீர்த்தமாடி வழிபாடு செய்ததாகவும், தெற்கே பிறந்தவர்கள் காசிக்குச் சென்று வழிபட்டதாகவும் புராணங்கள் பாரத ஒருமைப்பாட்டைக் கூறுகின்றன.

வடஇந்தியாவில் பிறந்த அர்ச்சுனன், தமிழ் நாட்டில் பாண்டிய மன்னன் மகளைத் திருமணம் செய்து கொண்டதாக இதிகாசமாகிய

பாரதம் கூறுகிறது.

ஒரு பிறவியில் வடநாட்டில் பிறந்தவர்கள் மறுபிறவியில் தென்னுட்டில் வந்து பிறந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.

புராணங்கள் :

பெரிய புராணம் என்ற திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம், காஞ்சிப் புராணம், கோயில் புராணம், ஆதி புராணம், மேரு மந்தர புராணம், திருத்தணிகைப் புராணம் முதலான பல புராண நூல்கள் தமிழில் உள்ளன.

வடமொழி என்ற சம்ஸ்கிருத மொழியில் பதினெட்டுப் புராணங்கள் உள்ளன.

புராணங்களின் இலக்கணம் என்ன ?

புராணங்களின் இலக்கணத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர்களின் கருத்தை இங்கே பார்ப்போம். புராணங்களின் இலக்கணத்தைத் தமிழ் நிகண்டுகளோ, வேறு தமிழ் இலக்கண நூல்களோ சொல்லவில்லை. சம்ஸ்கிருத மொழியிலேயே புராணங்களின் இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது.

“அண்டத்தின் தோற்றம் [சருக்கம்], அதன் அழிவும் புதுப்பித்தலும் [பிரதி சருக்கம்], தெய்வ மரபும், முனிவர் குலமும் [வமிசம்], மனுக்களின் ஆட்சி [மன்வந்த்ரம்], சூரிய சந்திர அரச குலங்களின் தோற்றம் [வமிசானு சரிதம்] என்னும் ஐந்தையும் புராணங்கள் விளக்கிக் கூறவேண்டும்.”

புராணங்களுக்கு மூலகாரணம் எங்கு உள்ளது ?

புராணங்களுக்கு இலக்கணம் தமிழில் இல்லை; சம்ஸ்கிருத மொழியிலேதான் உள்ளது என்றல், புராணங்கள் முதன் முதலில் தமிழில் உண்டாகி இருக்க முடியாதே என்ற சந்தேகம் எழலாம். சம்ஸ்கிருத மொழியில் தான் புராணங்கள் முதன் முதலில் எழுதப் பட்டனவா? என்ற கேள்வியும் வரலாம். இந்தக் கேள்விக்குப் பதிலாக வடமொழி இலக்கிய விற்பன்னர்கள், “வேத மொழியில் [Vedic Language] புராணங்கள் இல்லை ” என்று ஒருமித்த கருத்துடன் கூறுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

புராணங்கள் எவ்வாறு தோன்றின ?

“ சிந்து நதி முதல் கங்கையாறு வரையில் ஆரியர்களின் பண்பாடு பரவியது. பிறகு அப்பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்களின் பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவை ஆரிய நாகரிகத்துடன் கலக்கத் தொடங்கின. இப்பழங்குடி மக்களின் பண்பாடுகள், திராவிடர்களின் பண்பாடுகள், ஆரியர்களின் கலாச்சாரங்கள், சமணமதம், பௌத்தமதம் ஆகிய மதங்களின்கொள்கைகள் ஆகிய எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு விதப் புது மதமாக உருவெடுத்தது. இந்த மதம்தான் வைதிக மதம். குப்தர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இந்த வைதிக சமயம் உருவெடுத்தது. இந்தக் காலத்தில்தான் வடமொழி என்ற சம்ஸ்கிருத மொழியில் புராணங்கள் தோன்றின ” என்பது அறிஞர் ஒருவரின் கூற்று.

“ சாதவாகன மன்னர்களின் காலத்தில், பிராகிருத மொழியில் புராணங்களைப் பற்றிய செய்திகள் வழங்கப்பட்டு வந்தன என்ற விவரம் கல்வெட்டுச் சான்றுகளால் தெரிய வருகிறது; அக்கல்வெட்டுக்களில் சொல்லப் பட்ட பிராகிருத மொழி புராணச் செய்திகளைத் திரட்டி, அவற்றேடு தங்கள் கற்பனைகளையும் இணைத்து வடமொழிப் புலவர்கள் புராணங்கள் இயற்றினர்கள்; இக்கருத்தை மேல் நாட்டு ஆராய்ச்சி அறிஞர்களும், நம் நாட்டு ஆராய்ச்சி அறிஞர்களும் கூறியுள்ளனர் ” எனவும் அவ் அறிஞர் இயம்பினர்.

சம்ஸ்கிருதமொழிப் புராணங்கள் வட இந்தியாவில் மட்டும் தோன்றினவா ?

சம்ஸ்கிருத மொழிப் புராணங்கள் வட இந்தியாவில் மட்டும் தோன்றியவையா ? தென்னுட்டில் புராணங்கள் தோன்றவில்லையா ? தமிழில் உள்ள புராணங்களுக்கு மூலாதாரம் சம்ஸ்கிருத மொழிப் புராணமா? என்ற ஐயம் எழக்கூடும்.

இந்த ஐயத்தைத் தீர்த்து வைக்கும் விதத்தில் பிரெஞ்சு அறிஞர் டாக்டர் பிலியோசா [Jean Filliozaf] கூறுகின்ற கருத்தைப் பார்ப்போம். “ ஹாலாஸ்ய மகாத்மியம் எனப்படும் வடமொழித் திருவிளையாடல் புராணமும், சங்கர சம்ஹிதையில் சொல்லப்பட்டுள்ள சிவ ரகஸ்ய காண்டம் என்னும் வடமொழி கந்த புராணமும் தென்னுட்டு மக்களால், இத்தென்னுட்டிலேயே, சம்ஸ்கிருத மொழியில் இயற்றப் பட்டிருக்க வேண்டும்.”

“வடமொழி பாகவத புராணமும், காவிரிக் கரையில் தோன்றி, கங்கைக்கரையில் வளர்ந்து சிறந்தது” [An Outline of the Religious Literature of India] என்னும் அறிஞர் கருத்தும் இவ்விடத்து நினைக்கத் தக்கது.

புராணம் என்பதற்கு விளக்கம்:

“மனிதர்கள் முதன் முதல் தோற்றம் பெற்றது குமரிக்கண்டப் பகுதியில். இவர்களின் பரம்பரையினர் தங்களுடைய பழம் சிறப்பை மறக்காமல் நினைவில் வைத்து வருகின்றனர். இந்தப் பழங்காலச் சிறப்புக்குச் சான்ருக விளங்குவன “தொன்மை” [Myths] என்று சொல்லப்படும் பழங்கதையின் அம்சங்கள். இப்பழங் கதையின் அம்சங்கள் பலவற்றை விவரித்துக் கூறுவது “தொன்மையம்” [Mythology] எனப்படும். இத்தகைய பழங்கதை அம்சங்களுக்குச் சிறந்த கலைவடிவம் கொடுத்து அமைக்கப்பட்டது புராணம் [Legend] ஆகும்.

புராணம் என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்குப் “பழமை”, “பழங்கதை” என்று அறிஞர்கள் விளக்கம் சொல்லுகிருர்கள். ‘பழைய மரபினை, பழைய வரலாற்றைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்திக் கதைகள் வாயிலாகத் தெரிவிப்பது புராணம்’ என்ற விளக்கமும் தற்பொழுது சொல்லப்படுகிறது.

— இவ்வாறு புராணம் என்பதற்கு விளக்கம் சொல்லுகிருர்கள்.

புராணங்களின் இயல்பு:

புராணங்களின் இயல்பு மூன்று வகையாகச் சொல்லப்படுகிறது.

1. மிகப் பழைய கால நிகழ்ச்சிகளைச் செவி வழியாகக் கேட்டு நம்புவோர் எழுதக்கூடிய புராணம்.

2. பழைய மூலத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பிற்காலத்தில் தோன்றுகிற புலவர் எழுதுகின்ற புராணம்.

3. மூலக்கதையை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு, உண்மையா பொய்யா, நடந்திருக்குமா நடந்திருக்காதா என்றெல்லாம் ஆராயாமல் புதுமையான முறையில் கற்பனை அழகுஉண்டாகும்படி எழுதப்படுகிற புராணம்.

தமிழில் புராணங்கள்:

தமிழில் புராண நூல்கள் தோன்றி வளர்ந்த விதத்தைப் பற்றி அறிஞர்கள் கூறும் விதம்:

“மணிவாசகருடைய திருவாசகத்தில், முதலில் உள்ள சிவபுராணம் முதலில் எழுதப்பட்டது. ‘சிவனது அநாதி முறைமையான பழமை—சிவனது அருவ நிலைமை கூறுதல்’ என்று சிவபுராணத்துக்கு விளக்கம் சொல்லப்படுகிறது.

இதற்குப் பிறகு முன்பு சொல்லப்பட்ட திருத்தொண்டர் புராணம் முதலிய பல புராணங்கள் தமிழில் இயற்றப்பட்டன.”

இதிகாசங்கள்:

நமது பாரத நாட்டின் இரண்டு பெரிய இதிகாசங்களாக இராமாயணம், மகாபாரதம் ஆகியவை திகழ்கின்றன. இவை இரண்டும் இந்திய மக்களின் பொதுச் சொத்துக்கள் என்பது ஆன்ருேர் கருத்து.

மக்களின் நாகரிகப்பண்புகள், குணநலன்கள் ஆகியவை நிறைந்த உயிருள்ள மாந்தர்களைப் போல இவ் இதிகாசங்களில் வருகின்ற மாந்தர்கள் மக்களுக்குநல்வழிகாட்டிவருகிருர்கள். என்றைக்கும் அழியாத பேருண்மைகளையும், நல்லறங்களையும் இவை எடுத்து இயம்புகின்றன.

இராமாயணம்:

வடமொழியாகிய சம்ஸ்கிருத மொழியில் வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டது வால்மீகி இராமாயணம். இதற்கு ஆதிகாவியம் என்ற பெயரும் உண்டு.

வியாசமுனிவரால் சம்ஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டதுவியாசபாரதம். நான்கு வேதங்களோடு, வியாசபாரதத்தையும் சேர்த்து ஐந்து வேதங்கள் என்றுசொல்லப்படும்மரபும் உண்டு.

இராமாயணக் கதையும், மகாபாரதக் கதையும் இந்தியா முழுவதும், இன்னும் சொல்லப் போனல், உலகின் பிற இடங்களிலும் பரவி இருந்தன.

தமிழ் மொழியில் புராணங்கள் அமைந்துள்ள விதம்:

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில், இயல் தமிழுக்கு இலக்கண அமைதி சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய இலக்கண அமைதியைக் கொண்டும், சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களில் அமைந்துள்ள சொற்கள், சொற்ருெடர்கள் இவற்றைக்கொண்டும், வடசொற்களாகிய சம்ஸ்கிருதச் சொற்களை மிகுதியாகக்கொண்டும், வேதம், ஆகமம் இவற்றின் பொருளை விளக்குவனவாகத் தமிழில் புராணங்கள் அமைந்துள்ளன.

சுவாமி துரியானந்தர் ஜீவிதம்

(270 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதகர்களுக்கு அளித்த பயிற்சி

சுவாமி துரியானந்தர் காசியில் சிறிது நாட்கள் தங்கி இருந்தார். மாலைவேளையில் பாகவதம் போன்ற சமய நூல்களை அவர் முன்னிலையில் யாராவது வாசிப்பார்கள். சுவாமிகள் அதற்கு வியாக்கியானம் சொல்லுவார். இரவு எட்டு மணிக்கு உணவு எடுத்துக்கொள்வார். சில சமயம் உணவு சரியாகத் தயாரிக்கப்படாவிட்டால் உணவு தயாரித்தவர்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார். ''மனதை எங்கு வைத்துக்கொண்டு உணவு தயாரித்தாய்? முழு மனதையும் சமையலில் ஈடுபடுத்தி இருப்பாயானால் உன் சமையல் இவ்வளவு தரக்குறைவாக இருக்காது. முழுமனதையும் நீ எடுத்துக்கொண்ட செயலில் ஈடுபடுத்தினால் அச்செயல் பரிபூரணமாக முடியும். செயலைத் திறம்படச் செய்வதன் மூலம் நீயும் பண்பாடு அடைகின்றாய்''. இங்ஙனம் கூறி உணவு தயாரித்தவருடைய மனப்போக்கைத் திருத்தி அமைப்பார்.

ஆர்வம் உள்ள இளைஞர்களுடைய மனதில் துறவைப்பற்றிய கருத்துக்களை ஆழ்ந்து இடம்பெறச் செய்வார். ''துறவு வாழ்க்கை நடாத்துவதற்குத் தைரியமும், தன்னம்பிக்கையும்அவசியமானவை" என்று வலியுறுத்துவார். ''உன்னை நீயே உயர்த்திக்கொள். உன்னை நீயே தாழ்த்திக்கொள்ளாதே. உனக்கு நீயே சுற்றமும், பகைவனும் ஆவாய்" என்ற கீதா வாக்கியத்தை எடுத்துக் கூறி அதற்கு வியாக்கியானம் செய்வார். அவர் வியாக்கியானம் செய்ததைக் கேட்டவர்கள் ஆத்மா அனுபூதி பெறுவதுதான் வாழ்வின் லட்சியம் என்பதைத் தெளிவாக உணர்ந்தார்கள். சுதீர் என்னும் இளைஞர் ஒருவர் சுவாமி துரியானந்தரை மிகவும் நேசித்தார். பிற்காலத்தில் அவர் சுவாமி ஞானனந்தர் என்ற பெயருடன் துறவியானர். அவர் இளைஞராக இருந்தபொழுது சுவாமி துரியானந்தரிடம் அடிக்கடி சென்று தம் ஐயப்பாடுகளை அவருடன் விவாதித்துத் தெளிவு பெறுவார்.

சந்திரகிரகணத்தின்பொழுது கங்கையில் ஸ்நானம் செய்வதற்குப் பல பகுதிகளில் இருந்தும் பெருந்திரளான மக்கள் காசியம்பதிக்கு வந்தனர். ''அன்றைய தினம் கங்காஸ்நானம் செய்வது என்பது ஒரு மூடநம்பிக்கை" என்று சுதீர் சுவாமி துரியானந்தரிடம் பகர்ந்தார். "கணக்கற்ற ஆண்டுகள் ஏராளமான மக்கள் தங்களைப் புனிதப்படுத்துகிறேம் என்ற உணர்ச்சியுடன் கிரகணவேளையில் கங்காஸ்நானம் செய்கின்ருர்கள். அவர்களுடைய மேலான எண்ணத்தை நீ மூடநம்பிக்கை என்று ஒதுக்குகின்ருய். இயற்கையில் நிகழும் இத்தகைய சில நிகழ்ச்சிகளுக்குச் சாஸ்திரங்கள் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றன. மக்கள் மனதைக் கடவுள்பால் திருப்புவதற்குச் சாஸ்திரங்கள் இந்த நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துகின்றன. மாணுக்கர்களுள் முதல்தர மாணவர்கள், இரண்டாம்தர மாணவர்கள், மூன்ரும்தர மாணவர்கள் என்ற மூன்று வகை மாணவர்கள் இருக்கின்றனர். அறிவுடையவர்களாகவும், பணிவுடையவர்களாகவும் முதல்தர மாணவர்கள் இருப்பார்கள். ஆசிரியர் தூண்டுதல் இல்லாமலேயே அவர்கள் படிப்பில் கவனமாக இருப்பார்கள். இரண்டாம்தர மாணவர்கள் தூண்டுதல் போட்டால்தான் படிப்பார்கள். அவர்களை உற்சாகப்படுத்தி இனிப்பு முதலியன வழங்கி ஆசை காட்டினல்தான் படிப்பார்கள். மூன்ரும்தர மாணவர்கள் எத்தகைய ஆசை ஊட்டினலும் படிக்கமாட்டார்கள். 'கோல் எடுத்தால் குரங்கு ஆடும்' என்பதற்கு ஏற்ப அடித்துப் பயமுறுத்தினல்தான் அவர்கள் படிப்பார்கள். அங்ஙனம் ஆத்மீகத்துறையிலும் மூன்று வகையான மக்கள் இருக்கிருர்கள். உலகம் அநித்தியமானது, கடவுள் ஒருவர்தாம் நித்தியப் பொருள் என்று சாஸ்திரம் புகட்டுவதைக் கேட்ட மாத்திரத்தில் நித்தியப் பொருளாகிய கடவுளைத் தேடுவதில் தீவிரமாக இருப்பவர்கள் முதல் தரமான சாதகர்கள் ஆகிருர்கள். அத்தகையவர்களைக் காண்பது அரிது. ஏகாதசி, சிவராத்திரி, கிரகணம் முதலிய காலங்களில் வழிபாடு செய்கிறவர்கள் சொர்க்கம் போவார்கள் என்று

கூறுவது சில மக்களுக்கு அவசியமாகிறது. அதைக் கேட்ட பிறகு அந்தக் காலங்களில் வழிபாட்டில் ஈடுபடுகிறவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் இரண்டாம் தரமான சாதகர்கள் ஆகிருர்கள். மூன்ரும் தரமான சாதகர்கள் வழிபாட்டைப்பற்றி அக்கறை கொள்ளாதவர் களாக இருக்கிருர்கள். உலக சுகம் நிலேயற்றது என்று சொன்ஞலும் அதை விடுவதற்கு அவர் கள் ஆயத்தமாக இல்லே. அவர்களுக்கு நரகம் ஒன்று இருப்பதாகக் கூறி அங்குச் சித்திர வதை பண்ணப்படுவார்கள் என்று கூறிஞல் தான் அதற்குப் பயந்து வழிபாடு செய்வார்கள். எல்லாத் தரமான மக்களுடைய மனதையும் கடவுள் வழிபாட்டுக்குத் திருப்பவேண்டும் என்பதுதான் சாஸ்திரங்களின் நோக்கமாகும். கடவுளிடம் திருப்பப்படுகின்ற மனது பேரா னந்தத்தை அனுபவிக்கிறது. சதா தெய்வச் சிந்தனேயில் ஈடுபட்டு இருக்கின்ற மனதுக்கு எத்தகைய தூண்டுதலும் தேவையில்லே. ஆனல் அத்தகைய மனம் படைத்தவர்கள் உலகில் எத்தனேபேர் இருக்கிருர்கள்? கங்கைக்குப் பிரம்மவாரி என்று பெயர். கங்கையை மற்ற நதிகளேப் போன்று சாதாரண நீரோடை என்று கருதாதே. கங்கையைப்பற்றிப் புகழ்ந்து பாடி இருக்கிருர்கள். அப்பாடல்களேப் பாடும் பொழுது சுவாமி விவேகானந்தர் பரவச நிலேயை அடைந்துவிடுவார். பல ரிஷிகள் கங்கையைப் புகழ்ந்து பாடி இருக்கின்ருர் கள்.'' இங்ஙனம் சுவாமி துரியானந்தர் சுதீருக்குக் கூறி அவருடைய ஐயப்பாட்டை அகற்றி அவர் மனதில் மேலான உணர்வை வளர்த்தார்.

சுவாமி துரியானந்தர் கங்கைக் கரையில் அமர்ந்து மணிக்கணக்காகக் கங்கையின் பெரு வெள்ளத்தைப் பார்த்துக்கொண்டே இருப் பார். யாராவது அப்பக்கம் வந்தால் தம் மேனி மீது தெளித்துக் கொள்வதற்குக் கங்கா ஜலம் எடுத்துவரும்படி கூறுவார். காசியில் உள்ள விசுவநாதர் ஆலயத்திற்குச் சுவாமி துரியா னந்தர் அடிக்கடி தரிசனத்திற்குச் செல்வார். காசியின் புனிதத் தன்மையை முற்றும் உணர்ந் திருந்தார். காசியைப் போன்று பூமியில் வேறு எந்த இடமும் இல்லே என்று அவர் பகர்வார். சரீர உணர்வைக் கடந்து சென்ற எத் தனேயோ மகாத்மாக்கள் புனிதமான இக்காசி நகரத்தில் வாழ்ந்திருக்கிருர்கள். அவர்களு டைய வாழ்க்கையினுல் காசியில் அருள் சக்தி ஓங்குவதாயிற்று என்று கூறுவார்.

“இளேஞர்கள் ஊக்கமும், உற்சாகமும் உடையவர்களாக இருக்கவேண்டும்” என்று இளேஞர்களுக்குச் சுவாமி துரியானந்தர் பகர் வார். “இளேஞர்கள் ஆத்ம சாதனேயில் தீவிர மாக ஈடுபடவேண்டும். வாலேத் தொட்டால் துள்ளிக் குதிக்கும் காளே போன்று இளேஞர் களுடைய உள்ளம் ஆத்மீகத்துறையில் சுறு சுறுப்பே வடிவெடுத்ததாக இருக்க வேண்டும்” என்று சுவாமி துரியானந்தர் பகர்வார்.

அரசாங்கத்தை எதிர்த்து ஈடுபட்டதற்காகச் சில ஆண்டுகள் சிறையில் இருந்த இளேஞன் ஒருவன் சுவாமி துரியானந்தரைச் சந்திக்க வந்தான். சுவாமி அவனேச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைந்தார். “இந்த இளேஞனேப் பாருங்கள், இவன் தைரியமாக என்னிடம் பேசுகின்ருன். வாழ்க்கையில் உள்ள துன்ப துயரங்களே எதிர்த்துப் போரிடத் தெரியாத வர்கள் துறவிகள் என்று சொல்லுகின்ருன். இவன் நன்கு படித்தவன். சுவாமி விவே கானந்தருடைய நூல்களேப் படித்துள்ளான். சுவாமி விவேகானந்தரைப் பாராட்டிப் பேசு கின்ருன். இவ்விளேஞனிடம் ‘சுவாமி விவே கானந்தரைப் பாராட்டிப் போற்றுகின்ற நீ துறவிகளேக் கோழை என்கின்ருய். நீ கூறுகிற படி பார்த்தால் சுவாமி விவேகானந்தர் கோழை ஆகின்ருர்’ என்று கூறினேன். அவ்விளேஞன் மறுமொழிகூருது இருந்துவிட்டான்.” இளேஞர் களேக் கட்டுப்பாடாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்துவார். அவர்களேத்திருத்தி அமைக் கும் பொருட்டுச் சில வேளேகளில் அவர்களிடம் கடுமையாக நடந்துகொள்வார். அவர் கடுமை யாக நடந்துகொள்வதற்கு இடையில் அன்பும் அனுதாபமும் உடையவராக இருப்பார்.

1914 ஆம் ஆண்டு பிரபவானந்த சுவாமிகள் இமயமலேக்கு யாத்திரை புறப்பட்டுப்போஞர். போகும் வழியில் காசியில் தங்கிஞர். அப் பொழுது அவருக்கு அம்மை நோய் வந்துவிட் டது. துரியானந்த சுவாமிகள் அவரை அங் கேயே தங்கும்படி செய்துவிட்டார். அவருக்குக் கடுமையான காய்ச்சல் வந்து விட்டது.

துரியானந்த சுவாமிகள் ஒவ்வொரு நாளும் அவருடைய படுக்கைக்குப் பக்கத்தில் போய் அமர்ந்துகொண்டு அவருடைய நெற்றிமீது கைவைத்துப் பார்ப்பார். பிரபவானந்த சுவாமி கள் "அம்மை தொத்து நோயாகும். ஆகையால் என்னைப் பார்க்க வராதீர்கள். இந்த நோய் உங்களையும் பற்றிக் கொள்ளும்" என்று கூறினர். ஆனல் துரியானந்த சுவாமிகள் போய்ப்பார்ப்பதை நிறுத்தவில்லை. ஒரு நாள் துரியானந்த சுவாமிகள் பிரபவானந்த சுவாமி களைப் பார்த்து உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். நீங்கள் என்னுடைய படுக் கைக்குப் பக்கத்தில் வந்து அமராது இருப் பதே எனக்கு நீங்கள் செய்யும் உதவியாகும் என்று பிரபவானந்த சுவாமிகள் கூறினர். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற் காக அன்று முதல் துரியானந்த சுவாமிகள் பிரபவானந்த சுவாமிகள் படுத்திருந்த அறை யின் கதவுப் பக்கம் நின்று அவரைப் பார்த்து விட்டுப் போய்விடுவார்.

பிரபவானந்த சுவாமிகள் சற்றுத் குணம் அடைந்ததும் துரியானந்த சுவாமிகளைப் போய் வணங்கினர். துரியானந்த சுவாமிகளும் அவரை மகிழ்ச்சியோடு அணைத்துக்கொண் டார். மடத்தில் உள்ள இளைஞர்கள் யார் நோய்வாய்ப்பட்டாலும் அவரைப் பற்றித் துரி யானந்த சுவாமிகள் தினமும் விசாரிப்பார். ஆனல் உடலைப்பற்றி அதிகம் நினைக்கக் கூடாது என்று அந்த நோயாளிக்குப் பகர்வார். 'உன் உடலைப் பற்றி அதிகம் நினைத்தால் சாதனையில் முன்னேறுவது தடைபடும்' என்று அறிவுறுத்துவார். ஒருநாள் அவர் பிரம்மச்சாரி ஒருவரிடம் பகர்ந்ததாவது: "நீ உலக வாழ்க் கையில் ஈடுபட்டுள்ளவர்களைப் பற்றியே அடிக் கடி பேசுகின்றய். அவர்கள் உலகப்பற்று மிக உடையவர்களாக இருக்கிறர்கள் என்றும் கூறுகின்றய். சரீரமும் உலகத்தின் ஒருபகுதி அல்லவா? சரீரப்பற்று வைத்திருப்பதும் உல கப்பற்றுக்கு நிகராகும் அல்லவா? ஆகையால் நீ முதலில் உன்சரீரப்பற்றை ஒழித்துப்பழகு."

பொது இயக்கம் ஒன்றில் பலவித மனப்பாங்கு உடையவர்கள் சேர்ந்து வேலை செய்ய வேண்டி வரும். அப்பொழுது சில சமயங்களில் அவர் களுக்கு இடையில் சச்சரவு உண்டாகும். சில இளைஞர்களுக்கு இடையில் சச்சரவு ஏற்பட்ட பொழுது அவர்களிடம் சுவாமி துரியானந்தர் பகர்ந்ததாவது: "நீங்கள் எத்தகைய சாதனை செய்து வருகிறீர்கள்? தியானம் நன்கு செய்து வருகிறீர்களா? கோயிலில் சென்று கடவுள் சிந்தனை செய்கிறீர்களா? அல்லது வேறு ஏதாவது செய்கிறீர்களா? உங்கள் உள்ளத்தில் இருக்கும் ஆத்மாவை மகிழ்வடையச் செய்யுங் கள். உங்கள் உள்ளம் திருப்தி அடைந்தால் மற்றவர்கள் யாவரும் திருப்தி அடைவார்கள். நீங்கள் இங்கு வந்த நோக்கம் என்ன? உங்களை நீங்கள் வென்று பழகுவதற்குத்தானே பணி செய்து வருகின்றீர்கள். அதை மறந்துவிட்டு நீங்கள் சண்டைபோட்டுக் கொள்வதினல் என்ன நலன் அடையப் போகிறீர்கள்?" ஒரு முறை இளைஞன் ஒருவனுக்குத் தியானத்தினு டைய மகிமையைப் பற்றி எடுத்துக் கூறித் தியானம் செய்யும்படி அவனைத் தூண்டினர். "கஸ்தூரிமான் தன்னிடத்தில் இருந்து வரும் கஸ்தூரி வாசனையை அறிந்து கொள்வது இல்லை. கஸ்தூரி வாசனை புறத்தில் எங் கிருந்தோ வருகிறது என்று அது எண்ணிக் கொண்டு காடு முழுவதும் அலைகின்றது. கடைசியில் ஏமாற்றம் அடைகின்றது. அங்ஙனமே உன்னிடத்தில் உள்ள தெய்வத்தன் மையை உணராது மனத்தை அலக்கழித்துக் கொள்வதனல் என்ன பயன்?" என்று அவ் விளைஞனுக்குக் கூறினர்.

சுவாமி துரியானந்தர் குருகுல முறையில் கல்வி ஸ்தாபனம் ஒன்று உருவாக்கிச் சுவாமி விவேகானந்தருடைய விருப்பத்தை நிறை வேற்ற வேண்டும் என்று விரும்பினர். அதற்காக இளைஞர்களை உருவாக்கினர். "சுவாமி விவேகானந்தரைச் சிவனகப் போற்று தல் வேண்டும். அவருடைய திட்டத்தை நிறை வேற்றுவது சிவப்பணிக்கு நிகராகும். அவரு டைய பணியில் இளைஞர்களாகிய நீங்கள் ஈடு பட்டால் உங்கள் முன்வினைகள் எல்லாம் ஒழிக்கப்படும். கர்மத்தை வழிபாடாகச் செய் வது இந்த யுகத்துக்கேற்ற ஆத்ம சாதனை யாகும். வழிபாட்டு உணர்ச்சியுடன் நீங்கள் பணி செய்வீர்களானல் நீங்கள் கடவுள் காட்சி பெறுவது திண்ணம்" என்று இளைஞர் களுக்கு அறிவுரை கூறுவார். சிறு தவறு

பண்ணினுலும் அதற்காக மிகவும் கண்டிப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்வார். சுவாமி யோடு நெருங்கிப் பழகினவர்கள் அவருடைய கண்டிப்புக்கு அடிக்கடி ஆளாகி இருக்கின்றனர். உண்மையான பணிவிடை பிரார்த்தனைக்கும், தியானத்திற்கும் நிகராகிறது. பெரியோர்களுக்குப் பணிவிடை பண்ணுவதன் வாயிலாக ஒருவன் சாதனையில் வெகுவிரைவாக மேல்நிலைக்குப் போகின்ருன். சுவாமி துரியானந்தருக்கு நண்பகல் ஒரு மணிக்கு எண்ணெய் போட்டு ஓர் இளைஞன் கால்களை வருடிக் கொடுப்பது வழக்கம். ஒருநாள் அவன் குறித்த காலத்துக்கு வரத்தவறிவிட்டான். சுவாமி துரியானந்தர் மற்ருெரு இளைஞனைத் தமக்கு அந்தச் சிகிச்சை அளிக்கும்படி நியமித்தார். சில நிமிடங்கள் தாமதமாகச் சுவாமிகளுக்குச் சிகிச்சை செய்யக்கூடிய இளைஞனே வந்தான். "உன்னுடைய உதவி எனக்கு இனிமேல் தேவை இல்லை. உன் காரியத்தைப் பார்க்க நீ போகலாம். வேறு ஒருவரைக் கொண்டு நான் இந்தக் காரியத்தைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறினர். அவ்விளைஞன் சுவாமிகளுக்குப் பணிவிடை செய்வதைப் பெரும் பாக்கியமாகக் கருதி இருந்தான். சுவாமிகள் இப்படிக் கூறியதைக் கேட்டதும் அறையின் மூலையில் நின்றுகொண்டு அழுதான். உடனே சுவாமிகள் அவனைத் தம் பக்கம் அழைத்து அவன் தலையில் கை வைத்து ஆசீர்வாதம் பண்ணினர். சுவாமிகளுடைய கை அவன் தலைமீது பட்டதும் அவன் உள்ளத்தில் உள்ள துயரமெல்லாம் நீங்கியது. இன்ப உணர்ச்சி அவன் சரீரத்திற்குள் பாய்வதை அவன் உணர்ந்தான். இங்ஙனம் ஒவ்வொருவரும் தாங்கள்செய்தகுற்றத்திற்காகச் சுவாமிஜியிடம் திட்டுதல் பெற்று இருக்கிருர்கள். ஆனல் சுவாமிஜியுடன் இருப்பதை ஒவ்வொருவரும் பெரிய பாக்கியம் என்றே கருதினர்கள்.

நாள்தோறும் சாஸ்திர ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று மடத்துச் சன்னியாசிகளுக்குக் கூறியிருந்தார். ஒருநாள் மடத்துச் சாது ஒருவர் பாகவதம் வாசித்தார். கிருஷ்ணனுடைய மறைவைக் குறித்து உத்தவர் அழுகின்ற பகுதியை வாசித்தார். ஒருமணிநேரம் அப்பகுதி வாசிக்கப்பட்டது. சுவாமி துரியானந்தர் அதை ஆழ்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் வகுப்பு முடிந்ததும் அவர் சில கருத்துக்களை அன்று வாசித்ததை அடிப்படையாக வைத்துக்கொண்டு சொல்லுவார். அக்கருத்துக்கள் மிகவும் பயனுடையனவாக இருக்கும். அன்று அவர் ஒரு வார்த்தையும் சொல்லாது மௌனமாக இருந்தார். வகுப்பு முடிந்ததும் எல்லாரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். நீண்ட நேரம் சுவாமி துரியானந்தர் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்தார். நீண்ட நேரத்திற்குப் பின் அவர் பகர்ந்ததாவது: "யாதவர்கள் கிருஷ்ணனைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாக இருந்துவிட்டார்கள். அவதார புருஷராகிய கிருஷ்ணரோடு இருந்தும் யாதவர்கள் அவரை அறிந்துகொள்ளவில்லை. இப்படி உத்தவர் அழுதுகொண்டே சொன்னது மிகவும் பொருத்தமானது. இதைக் கேட்டதும் நான் என்ன நினைத்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா? சுவாமி விவேகானந்தரோடு நாம் நெருங்கிப் பழகி இருக்கின்ருேம். உண்டு உரையாடி வேடிக்கை விநோதங்கள் செய்து பழகி இருக்கின்ருேம். அவரோடு அப்படிப் பழகியும் அவருடைய உண்மை இயல்பை அறியாதவர்களாக இருந்துவிட்டோம். அவர் பெரிய மகான் ஆவார். அவரைப் பற்றி நாம் ஒன்றும் அறிந்துகொள்ளவில்லை. நம்முடைய குருதேவர் எவ்வளவு பெரிய மகானைத் தம்மோடு அழைத்து வந்தார் என்பது நம் புத்திக்கு எட்டவில்லை. உத்தவருடைய வார்த்தையைக் கேட்டதும் அந்தக் கருத்து என் உள்ளத்தில் தெளிவாக எழுந்தது. அவரோடு இருந்தபொழுது அவர் ஒரு சிறந்த சொற்பொழிவாளர் என்பதையும், இசை வல்லுனர் என்பதையும் அறிந்திருந்தோம். அதற்கு மேல் அவரைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாக இருந்தோம். அவரைப் போன்ற ஒரு பூர்ண மனிதன் இதுவரையிலும் தோன்றவில்லை என்றே கூறலாம். மக்களிடத்தில் உள்ள ஆத்ம சக்தியை எழுப்பி அவர்களுடைய வாழ்வை உயர்த்தினர். அவருடைய உள்ளம் தான் எவ்வளவு விரிந்ததாக இருந்தது. மற்றவர்களுக்காக அவருடைய உள்ளம் கசிந்துருகியது. எல்லாரிடமும் எல்லையற்ற அன்புகொண்டிருந்தார். அவருடைய கருணை உள்ளம் போன்று இதுவரையிலும் நான் பார்த்தது

இல்லை. இனியும் பார்க்க முடியாது. அவருடைய வார்த்தைகள் இறந்த மனிதனுக்கும் உயிரூட்டும். நம்முடைய பேச்சுக்கள் உணர்ச்சி அற்றவைகள். பிறருடைய உள்ளத்தில் எவ்வித உணர்ச்சியையும் ஊட்டுவது இல்லை. ஆனால் சுவாமி விவேகானந்தருடைய பேச்சுக்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவைகளாக இருந்தன. அவருடைய பேச்சைக் கேட்டால் கல்லறையில் உள்ள மனிதனும் எழுந்து இன்னும் சிறிது நேரம் பேசுங்கள் என்று சொல்லுவான். சுவாமியினுடைய ஒவ்வொரு சொல்லும் மக்களுடைய உள்ளத்தை ஊடுருவிச் செல்லும். அவருடைய பேச்சைக் கேட்க ஆரம்பித்ததும் மற்ற எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள். எல்லாருடைய உள்ளத்தையும் ஓர் உயர்ந்த நிலைக்குச் சுவாமிகள் எடுத்துச் சென்றுவிடுவார்." இப்படிப் பேசிமுடிக்கும்பொழுது சுவாமி துரியானந்தர் உணர்ச்சி வசப்பட்டவராக இருந்தார்.

துயரப்பட்ட மக்கள் சுவாமி துரியானந்தரிடம் வந்து ஆறுதல் பெற்றார்கள். துயரப்பட்ட மக்களை அன்போடு அழைத்து அவர்களுடைய உணர்ச்சிகளில் இவரும் பங்கு கொண்டு அவர்களுக்கு ஏற்பட்ட துயரங்களைப் போக்குவார். சுவாமி துரியானந்தர் காசியில் வாழ்ந்திருந்தபொழுது அவருடைய வாழ்க்கை சம்பந்தமான செலவிற்கு வேண்டிய பணம் நன்கொடையாக வந்தது. அப்படி நன்கொடையாக வந்த தொகை செலவுக்கு மேல் அதிகமாக இருந்தது. இந்த விஷயத்தைச் சுவாமிகளிடம் கணக்கு வைத்திருந்த சாது கூறினார். அதிகப்படியாக இருக்கும் தொகையை அல்மோராவில் சுவாமி துரியானந்தர் ஆரம்பித்துள்ள ஸ்தாபனத்திற்கு அனுப்பி வைக்கலாம். அங்குச் செலவிற்குப் போதுமான வருவாய் இல்லாததால் இந்தத் தொகை பயன்படுமென்று யோசனை கூறினார். அதற்குச் சுவாமிகள் அளித்த பதிலாவது: "அதைப் பற்றி நான் முடிவு செய்வதற்கு ஒன்றுமில்லை. ஸ்தாபனத்தின் தலைவராக இருப்பவர்தாம் அதை என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்யவேண்டும். அவருடைய சொல்லை நிறைவேற்றியாக வேண்டும். இது என்னுடைய சொந்தப் பணம் அன்று. இந்தத் தொகை ஸ்தாபனத்தைச் சேர்ந்ததாகும். நன்கொடையாக வந்த பணத்தை என் விருப்பம்போல் நான் செலவழிக்கமுடியாது. இந்தப் பணமெல்லாம் தலைவராக இருக்கும் சுவாமி பிரமானந்தர் பெயரில்தான் இருக்க வேண்டும். மடத்தில் உள்ள அனைவரும் தங்களுக்கென்று பொருள் எதையும் தேடி வைத்துக் கொள்ளக் கூடாது. மடத்தில் உள்ள சொத்து பொது உடைமையாகும். யாரும் அது தங்களுக்கு உரியது என்று நினைக்கக்கூடாது. அந்தச் சொத்தை எப்படிச் செலவு செய்ய வேண்டுமென்பதை மடத்தின் தலைவர் முடிவு செய்ய வேண்டும். நன்கொடையாக வருகின்ற பணம் யாவும் பொதுக் கணக்குக்குப் போய்ச் சேரவேண்டும். மடத்தில் உள்ளவர்கள் தங்களுடைய சொந்தச் செலவிற்காக மடத்துப் பணத்தைக் கையாளக்கூடாது. சிறு செலவுக்கும் கணக்கு வைக்க வேண்டும். பொது மக்கள் நல்ல காரியத்துக்கென்று எண்ணிக் கொடுக்கின்ற பணம் வீணாகப் போய்விடக் கூடாது. கஷ்டப்பட்டுச் சம்பாதித்து நன்கொடை தருகின்றார்கள். அதைத் துஷ்பிரயோகம் பண்ணினால் குருதேவருக்குப் பதில் சொல்லியாக வேண்டும். மடத்தில் உள்ள இளைஞர்கள் எளிய வாழ்க்கை வாழவேண்டும். ஆடம்பரச் செலவு எதையும் செய்யக்கூடாது. ஆச்ரமத்துக்குத் தேவையான பொருள்களை ஆச்ரமத்துக்குச் சொந்தமான நிலங்களில் இருந்தே விளைவித்துக்கொள்ள முயல வேண்டும். இங்ஙனம் ஆச்ரமவாசிகள் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடியவர்களாகவும் எளிய தூய வாழ்க்கை வாழ்பவர்களாகவும் இருக்க வேண்டும்."

சுவாமி துரியானந்தர் துறவு உள்ளம் படைத்தவர். தமக்குத் தேவையென்று எதையும் யாரிடமும் கேட்கமாட்டார். தமக்குப் பணி செய்து வந்தவர் சுவாமி துரியானந்தர் அணிந்து கொள்வதற்குப் புதுஆடைகள் வேண்டுமென்று பக்தர்களை கேட்டு வாங்குகிறார் என்பதை அறிந்தார். உடனே தாம் புதிய ஆடைகள் அணிவதை நிறுத்திவிட்டார். அப்படிச் செய்த தன்மூலம் மற்றவர்களிடமிருந்து பொருள்களை வாங்கக் கூடாது என்பதை அப்பணியாளுக்குப் புகட்டினார்.

(தொடரும்)

அனுமன் - 11

(சுவாமி ஆத்மானந்தர்)

இலங்காதகனம்

அசோக வனத்தையும் அரக்கவீரர்களையும் அழித்ததோடு அரசவையிலும் அடக்கமின்றி நடந்துகொண்டது கண்டு வெகுண்ட இராவணன் 'குரங்கின் வாலை மூலமறச் சுட்டு ஓட்டி விடுங்கள்' என்று உத்தரவிட்டான். உடனே அந்த ஆணையை நிறைவேற்ற அரக்கவீரர் ஆர்ப்பரித்து எழுந்தனர். அப்போது இந்திரஜித்து, 'பிரம்மாஸ்திரத்தினால் கட்டுண்டு இருக்கும் போது இவனைச் சுடலாகாது. அதனை நான் விடுவித்துவிடுகிறேன். பின்னர் இவனைக் கயிறுகொண்டு கட்டி அரசன் ஆணையை நிறைவேற்றுங்கள்' என்று கூறிப் பிரம்மாஸ்திரத்தை விடுவித்தான். இராக்கதர்கள் கயிறுகள் பலப்பலகொண்டு அனுமனைக் கட்டலாயினர். யானைக்கயிறு, தேர்க்கயிறு, குதிரைக் கயிறு முதலாகக் கண்டகண்ட கயிறுகளை யெல்லாம் கொண்டு கட்டினர். தங்கள் மனைவியருடைய தாலிக்கயிறு நீங்கலாக ஏனைய கயிறுகளையெல்லாம்கொண்டு கட்டினராம். இதை அமைதியோடு பார்த்துக் கொண்டிருந்தான் அனுமன். 'என்னைப் பிணித்திருந்த பிரம்மாஸ்திரத்தை எய்தவனே விடுவித்துவிட்டான். என் வாலில் வைக்கும் தீ இலங்கையில் வைக்கும் தீயாகும்' என்றெண்ணிப் பேசாதிருந்தான். பந்தபாசங்கள் அனைத்தினின்று விடுபட்டும் விடுபடாதவன்போல் நடிக்கும் யோகியைப்போல, நினைத்தமாத்திரத்தில் விடுவித்துக்கொள்ளக்கூடிய கயிற்றுக் கட்டுக்கு உட்பட்டு வலிமையற்றவன்போல் அடங்கியிருந்தானும்.

அனுமனை அரண்மனைக்கு வெளியே இழுத்து வந்தனர். அவன் வாலில் துணிகளை ஏராளமாகச் சுற்றினர். எண்ணெயிலும் நெய்யிலும் தோய்த்து நெருப்புப் பற்றவைத்தனர். அண்டம் முழுவதும் அதிரும்படி ஆரவாரம் செய்தனர். "அசோகவனத்தை அழித்து, அட்சகுமாரன் போன்ற அரக்கர்களையும் கொன்ற குரங்குக்கு வந்த கதியைக் காண வாருங்கள்" என்று இலங்கைத் தெருவெல்லாம் பறைசாற்றினர். அச்செய்தி சீதையின் செவிக்கும் எட்டியது. செய்திகேட்ட சீதை உயிர் பதைபதைத்தாள், வேர்த்தாள், விம்மினாள், அழுதாள், வெந்துயிர்த்தாள். அக்கினியை நோக்கி, "அக்கினி பகவானே! என்னுடைய கற்பு எத்தகையது என்பது உனக்கே தெரியும். யான் கற்பினால் பரிசுத்தமே வடிவெடுத்தவளாயின் நீ அனுமனைச் சுடாதிருப்பாயாக' என்று பிரார்த்தித்தாள்.

"தாயே அனைய கருணையான் துணையை,
ஏதும் தகைவு இல்லா
நாயே அனைய வல் அரக்கர் நலியக் கண்டால்,
நல்காயோ ?
நீயே உலகுக்கு ஒரு சான்று; நிற்கே தெரியும் கற்பு;-
அதனில்
தூயேன் என்னின், தொழுகின்றேன்,— எரியே! —
அவனைச் சுடல்! என்றாள்."

அக்கினி பகவான் அனுமனைச் சுடாது அடங்கினான். தீப்பற்றிய அனுமன் வால் மயிர் சிலிர்க்க சீதளத்தினால் எலும்புவரை குளிர்ச்சியடைந்தது.

அரக்கரால் வாலில் வைத்த தீ கொழுந்து விட்டெறிந்து உடம்பு முழுதையும் மூடியும் சுடாதிருந்ததை உணர்ந்த அனுமன், 'இந்த அற்புதம் சீதாபிராட்டியின் கற்பின் சிறப்பால் ஏற்பட்டது' என்பதை உணர்ந்து களிப்புற்றான்.

நலம் கேடு நிறைந்ததுதான் உலகம். குற்றமற்ற சான்றோரைத் துன்புறுத்துகின்ற கூட்டத்தினர் சமுதாயத்தில் எப்பொழுதுமே இருந்து கொண்டுதான் இருப்பார்கள். இரக்கமற்ற வன்நெஞ்சம் படைத்த அவர்கள் கையில் அரசாட்சியும் படைபலமும் இருந்துவிட்டால் அதர்மம் ஆட்சிபுரிய, தர்மம் அங்கு ஒற்றைக்காலில் ஒதுங்கி நிற்க வேண்டியிருக்கும். ஆயினும் தர்மத்தை அவர்களால் அழித்துவிட முடியாது. தெய்வத்தின் துணை தர்மத்தின் பக்கம்தான் எப்பொழுதும் இருக்கும். அறநெறியைப் பின்பற்றும் சான்றோர்க்குத் தெய்வத்தின் துணை என்றென்றும் நிலைத்து நிற்கும். அறத்தின் நாயகனாகிய அனுமன் வாலில் இலங்கை அரக்கரால் நெருப்பிடப்பட்டது. அது சீதாபிராட்டியாகிய தெய்வத்தினால் தணிக்கப்பெற்றது. இதை ராமாயணத்தில் காணுகின்றோம்.

உலகில் எந்த நிகழ்ச்சியும் ஒரு முறை நடந்து முடிந்துவிடுவதில்லை. யுகந்தோறும் ராமாயண மகாபாரத நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப நடைபெறும். ராமாயண காலத்தில் நடந்த நிகழ்ச்சி யுகங்கள் பல கடந்தபின்னர் கலியுகத்திலும் நடக்கக் காண்கிறோம். அனுமன் வாலில் அன்று தீ வைத்தான் அரக்க வேந்தன். அப்பர் பெருமானை நீற்றறையில் இட்டு வேக வைத்தான் சமண மன்னன். அப்பர் பெருமான் நீற்றறையில் வெந்து நீறுனரா? இல்லை பின் என்ன ஆனர்? அந்த நீற்றறை அவருக்கு எப்படி இருந்தது? இதோ அப்பர் பெருமானே பகருகின்றார்:

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

பகவான் திருவடியில் மனத்தை ஒன்றிக்கச் செய்த புண்ணிய ஆத்மாக்களுக்கு உலகத்தில் யாரும் ஊனம் செய்துவிடமுடியாது. தனக்கெனக் கடமை ஏதுமின்றித் தெய்வத் திருத்தொண்டிலேயே திளைத்திருக்கும் தொண்டர் பெருமக்களை யாராலும் துடைத்தழிக்க முடியாது. அனுமன் ராமனுக்குத் தொண்டன்; அப்பர் பெருமானே ராமனே வழிபடும் சிவனுக்குத் தொண்டர். அனுமன் அப்பர் ஆகிய இருவருமே தொண்டர் குழாத்தைச் சார்ந்தவர்கள். இருவருமே நைஷ்டிக பிரம்மச்சாரிகள். இருவருமே சொல்லின் செல்வர்கள்; இருவருமே அன்பின் மிகுதியினல் உருகுகின்ற பக்தர்கள்; இருவருமே அச்சத்தை அடியோடு வென்றவர்கள்; இருவருமே தாங்கள் வழிபடும் தெய்வத்தைத் தவிர வேறு யாருக்குமே அடிமைப்படாதவர்கள். அவர்களை அச்சுறுத்தி அல்லல்படுத்த யாரால் முடியும்? எமனும் அவர்களின் எதிரே நிற்க அஞ்சுவான். இதில் ஐயம் சிறிதுமில்லை.

அனுமன் வாலில் தீ வைத்த அரக்கர் அவனைத் தெருத் தெருவாக இழுத்துப் போயினர். இலங்கை நகரின் அமைப்பினை அறியாத அனுமன் தெருத் தெருவாகச் சென்று அதன் அமைப்பு முழுதையும் நன்கறியலானுன். இது எது போன்றிருந்ததென்றால், உலகக் காட்சிகளை அறிவில்லாத ஐம்பொறிகள் காட்ட, அதனை அறிவு அறிந்து கொள்ளுதலைப் போல, இலங்கா நகரக் காட்சிகளை அறிவற்ற அரக்கர் கூட்டம் காட்ட, அனுமன் அறிந்து கொள்ளுதல் இருந்ததாம்.

அனுமன் இலங்கையின் முடிவெல்லைக்கு அழைத்து வரப்பட்டான். இதுதான் அரக்கர் கையினின்றும் விடுபடுவதற்குத் தக்க தருணம் என்று கருதினன். திடீரென்று வேகமாய்த் திமிறிக்கொண்டு விண்ணின்மேல் எழுந்தான். அவனைப் பற்றியிழுத்துச் சென்ற அரக்கர் தம் கரங்கள் அறுபட்டுக் கீழே விழுந்து இறந்தனர். தன்னை அவமானப்படுத்திய அரக்கர் இலங்கையை எரிக்கு இரையாக்குவதே தக்கதெனக் கருதினன். நெருப்புப் பற்றி எரியும் வாலை இலங்கைமீது செலுத்தினன். அந்நிலையிலும் அவன் நெஞ்சு தன் தலைவன் ராமனைத் தியானிக்கத் தவறவில்லை. இலங்கையை எரியூட்டப் புகுந்த அனுமன் ராமத்தியானத்தோடு தான் அச்செயலில் ஈடுபடுகின்றான். அவன் செயல் முப்புரம் எரித்த சிவன் செயலைப் போன்றிருந்ததாம்.

துன்னலர் புரத்தை முற்றும் சுடுதொழில்
தொல்லை யோனும்,
பன்வின பொருளும், நாண,
'பாதகர் இருக்கை பற்ற
மன்னனை வாழ்த்தி, பின்னை
வயங்கு எரி மடுப்பென்' என்று,
பொன்நகர் மீதே தன் போர்
வாலினைப் போக விட்டான்.

தீப்பற்றி எரியும் வாலினேடு இலங்கை நகர மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் மீதெல்லாம் குதித்துக் குதித்து அனுமன் நெருப்பை வைத்தான். எரியும் வாலோடு அனுமன் மாட மாளிகையின்மீது குதித்தது மலைகளின்மீது நெருப்பு இடி விழுவதைப் போன்றிருந்ததாம்.

அனுமன் இட்ட தீ இலங்கை முழுதும் விரைவில் பரவி எரியத் தொடங்கியது. கண்கவர் மணிகள் இழைத்த மாளிகையெல்லாம் நெருப்புமயமாய் ஜொலித்தன. பொன்வேய்ந்த கோபுரங்களெல்லாம் எரியிலே உருகிப் புகையால் மூடுண்டு பொலிவழிந்து கிடந்தன. அரக்க மாதரர் ஒதுங்கும் இடமறியாது ஓலமிட்டலறினர். சில அரக்கியர் பிள்ளைகளோடும் புலம்பிக் கொண்டு கடலிலே போய் விழுந்தனர்.

வீட்டிலே எரிகின்ற தீயைப் பலவகைப்

படுத்தலாம். உணவு சமைக்க உதவுவது அடுப்புத் தீ ; ஒளியைத் தருவது விளக்குத் தீ; வேள்வியில் எரிவது வேள்வித்தீ. ஆனல் இவைகளுக்கிடையில் வேற்றுமையறியாதபடி அனுமன் இட்ட தீயில் இவையனைத்தும் ஐக்கியமடைந்து விட்டனவாம். அச்செயலானது, பலப்பலவாக இருக்கும் ஜீவான்மாக்கள் முக்தி நிலையில் பரமான்மாவோடு ஐக்கியப்படுவதைப் போன்றிருந்ததாம்.

தீயினல் எரிக்கப்பட்ட யானைகள், கழுத்தில் கட்டிய கயிறுகளையும், காலில் பூட்டிய சங்கிலிகளையும் அறுத்துக்கொண்டு, தம்மைப் பிணித்திருந்த தூண்களையும் பறித்துக்கொண்டு துதிக்கையைத் தூக்கிய வண்ணம் பிளிறிட்டுக் கொண்டு ஓடினவாம். தீப்பற்றி எரிந்து தோலுரிந்த யானைகள் இந்திரன் வெள்ளை யானையைப்போன்றிருந்தனவாம். கருநிறங் கொண்ட எருமைகள் பல கடலில் சென்று விழுவது மேகக்கூட்டம் போன்று தென்பட்டனவாம். வண்டுகள் செந்தாமரைக் காடென்று மயங்கித் தீச்சுவாலையில் வீழ்ந்து மடிந்தனவாம்.

இலங்கை முழுதையும் பற்றிய தீ தங்கமயமான இராவணன் அரண்மனையிலும் பற்றி எரியத் தொடங்கியது. அரண்மனை முழுதும் பற்றி எரிவதை அறிந்த இராவணன் தன் உரிமை மனைவியருடன் புஷ்பக விமானம் ஏறி உயிர் தப்பினன். அரக்கர் சிலரும் இராவணனுடன் விண்மீது சென்று உயிர்தப்பினர். தன்னேடு உயிர் தப்பிய அரக்கரை நோக்கி, இது ஊழிக்காலமா? இலங்கை எரிந்தழியக் காரணம் யாது? என்று கேட்கலானன். அதற்குப் பதிலாக அந்த அரக்கர்கள், 'குரங்கின் வாலில் வைத்த தீ தான் இலங்கையை இப்படிச் சுட்டெரிக்கிறது' என்றனர். அது கேட்ட இராவணன் அடங்காக் கோபம் கொண்டான். 'புன்தொழில் குரங்கின் வலிமையினல் இலங்கை எரிந்து சாம்பலாகின்றது. அக்கினி தேவன் இலங்கையை ஆசைதீரத் தின்று தீர்க்கின்ருன். என்னைக் கண்டு தேவர்கள் சிரிப்பார்கள். என் போர்வலி இருந்தவாறு நன்று, நன்று' எனச் சிரிக்கின்ருன்.

"இன்று புன்தொழில் குரங்குதன்
வலியினல், இலங்கை
நின்று வெந்து, மா நீறு
எழுகின்றது; நெருப்புத்
தின்று தேக்கிடுகின்றது;
தேவர்கள் சிரிப்பார்;
நன்று ! நன்று ! போர்வலி"
என இராவணன் நக்கான்.

இராவணனுக்கு வெட்கம் மேலிடுகின்றது. பழிக்குப்பழி வாங்க அவன் நெஞ்சு துடிக்கிறது. குரங்கு தப்பியோடிப் போகுமுன் அதை எப்படியாவது பிடித்துவாருங்கள் என்று ஆத்திரத்துடன் ஆணையிடுகின்ருன். அத்துடன் அக்கினி தேவனையும் பற்றி வாருங்கள் என்று அலறுகிருன். அயலே இருந்த அரக்க வீரர்கள் பலர் அனுமனைப்பிடிக்க வீரவாதம் செய்து போயினர். பலப்பல ஆயுதங்களோடும் சென்று அனுமனைச் சூழ்ந்து நின்றனர். ஆனல், அசகாயசூரனன அனுமனே, அவர்கள் அனைவரையும் தனது நீண்டதோர் வாலினல் தப்ப இயலாது சுற்றி வளைத்துக் கொண்டான். ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி அவர்கள் அனைவரையும் தாக்கி நொறுக்கியெறிந்தான். இரத்த ஆறு ஓடிற்று. தன்னை எதிர்த்த அனைவரையும் எமனுலகு அனுப்பி வைத்த அனுமன் 'எண்ணிய கருமம் இனிது முடிந்தது' என்று தன் வாலைக் கடலில் தோய்த்து நெருப்பை அணைத்தான்.

அச்சமயம் ஆகாயத்தில் சென்ற வித்தியாதரர் சிலர், 'இலங்கை முழுதையும் எரித்த தீ சீதையிருக்கும் சோலையை மட்டும் விட்டு வைத்தது' என்று சொல்லக் கேட்ட அனுமன் அளவிலா மகிழ்ச்சியடைகிருன். நேரே சீதையிருக்குமிடம் சென்று அவள் பாதங்களில் பணிகின்ருன். அனுமன் வாலில் நெருப்பு வைக்கப்பட்ட சேதி கேட்டுத் துடிதுடித்த சீதை, அவன் க்ஷேமமாய் இருப்பதுகண்டு மனம் மிக மகிழ்ந்து வாழ்த்தினள். அனுமன் வார்த்தை ஏதும் பேசவில்லை. சீதாபிராட்டியின் பாதங்களில் மீண்டும் வணங்கி விடை பெற்றுச் செல்லுகிருன்.

பார்த்தனள், ஜானகி, பாரா
'வேர்த்து எரி மேனி குளிர்ந்தாள்,'
'வார்த்தை என் ?' 'வந்தனை' என்னு,
போர்த் தொழில் மாருதி போனன்.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

நான் பிராம்மணன், நான் க்ஷத்திரியன், நான் சன்யாசி, நான் கிரஹஸ்தன் என்று சொல்லும் போதெல்லாம் பொய்யான இந்த உடலைத்தான் எல்லாரும் அறிகிறார்கள். இந்தச் சரீரத்தைக் காட்டிலும் வேறான ஆத்மாவை யாரும் உணர்வதில்லை. ஆகையால் எல்லாரும் உண்மையை அறியாத பைத்தியக்காரர்களே என்று வேதாந்தம் நம்மைக் குறித்துச் சொல்கிறது. சாஸ்திரம் படித்த சிலரும், புராண கதாகால க்ஷேபம் செய்கிறவர்களும் தேகம் ஆத்மா அல்ல, தேகம் ஆத்மாவின் சட்டை போன்றது என்று அழகாக வியாக்கியானம் செய்கிறார்கள். ஆனால் ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது. அவர்களும் உண்மையில் ஆத்மாவை அறிந்தவர்கள் அல்லர். ஓயாது கர்மத்தைச் செய்து கொண்டிருப்பதும், கர்மபலனை அனுபவிப்பதும், வரையறைகளுக்கு உட்பட்டதும், புண்ணிய லோகங்களுக்குச் செல்லக்கூடாததும், சித் ஆபாசனும் (சித் = அறிவு. ஆபாசம் = பிரதி பிம்பம், என்று பொருள். சூரியன் தண்ணீரில், கண்ணாடியில் பிரதி பிம்பிக்கிறது. அந்தப் பிரதி பிம்பம் சூரியனைப் போன்றே இருக்கிறது. ஆயினும் அது நிஜ சூரியன் அன்று. அதேபோன்று ஆத்மா சைதன்யத்தின் பேரில் பிரதிபிம்பிக்கிறது. அது எண்ணிறந்த ஜீவ சொருபங்களாகத் தோற்றமளித்துக் கொண்டிருக்கிறது. ஜீவனுக்குச் சிதாபாஸன் என்பது வேதாந்த பரிபாஷைச் சொல் ஆகும்.) ஆகிய வியவஹாரிக ஜீவாத்மாவையே ஆத்மா என்று உணர்கிறார்கள் அதாவது அவர்களுடைய அக்ஞானம் இன்னும் போகவில்லை, ஞானம் தெளிவடையவில்லை. ஆத்மா கர்மமற்றது, (அகர்த்தாரம்) எந்தக் கட்டுப்பாடும், எல்லையும், வரையறையும் இல்லாதது (அபரிச்சின்னம்). அசைவற்றது (அசலம்). சுத்தஞான சொரூபமானது. (சித்ரூபம்) மேலானது, உண்மையானது, உயிர்க்குயிரானது, (பாரமார்த்திகம்) ஆகிய ஆத்ம சொருபத்தை அவர்கள் அனுபூதியில் அறிந்து கொள்ளவில்லை.

கேள்வி : இந்த அக்ஞானம் எதனால் ஏற்பட்டது?

பதில் : இதற்கு உற்பத்தி இல்லை, அனாதி என்று வேதத்திலும் நம் சாஸ்திரங்களிலும் பிரசித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் சொல்ல முடியாது.

கேள்வி : அப்படியானால் இந்த அக்ஞானத்திற்கு ஆரம்பம் இல்லை எனில் அதற்கு முடிவும் இல்லை எனலாம். ஆதியில்லாத வஸ்துவுக்கு அந்தமும் இல்லையல்லவா? ஆகவே அக்ஞானம் என்றும் நசிக்காததால் ஜீவனுக்கு முக்தியும் ஏற்படாது அல்லவா?

பதில் : இந்த அக்ஞானத்திற்கு ஆரம்பம் கிடையாது எனினும் முடிவு உண்டு. உலகில் சில வஸ்துக்களுக்கு உற்பத்தி இல்லாவிட்டாலும் முடிவு ஏற்படுகிறது. சிலவற்றிற்கு முடிவு இல்லாவிட்டாலும் உற்பத்தி இருக்கிறது. இந்த நிருபணக் கோட்பாட்டிற்கு வேதாந்தத்தில் ப்ராகபாவம், ப்ரத்வம்ஸ அபாவம் என்று பெயர். ப்ராக பாவத்திற்கு உற்பத்தி இல்லை, ஆனால் முடிவு உண்டு. ப்ரத்வம்ஸ அபாவத்திற்கு முடிவு இல்லை, ஆனால் உற்பத்தி உண்டு. ஒரு குடம் உண்டாவதற்கு முன் அக்குடம் இல்லை. குடம் இல்லாத நிலை ப்ராக பாவம் எனப்படுகிறது. குடம் உண்டாகும் வரை இந்த ப்ராக பாவம் அனாதி காலமாக இருந்துவந்தது. இக்குடம் இதற்கு முன் ஒருபொழுதும் இல்லாதபடியால் இந்த ப்ராக பாவம் ஒரு காலத்தில் ஏற்பட்டதன்று. ப்ராக பாவம ஒரு காலத்தில் ஏற்பட்டிருக்குமானால் அதற்கு முன் இதே குடம் இருந்திருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது உண்டாயிருக்கும் குடம் இதற்கு முன்னால் ஒருபொழுதும் இருந்ததில்லை. ஆகையால் ப்ராக பாவம் அதாவது இக்குடம் இல்லாத நிலை அநாதி. இது அநாதி ஆனாலும் குடம் உண்டானவுடன் இந்த ப்ராக பாவம மறைந்துவிடுகிறது. ஆகவே அநாதிக்கும் நாசம் உண்டு என்று தெரிகிறது, ஏற்படுகிறது. இக்குடம் அழிந்தவுடன் அது இல்லாமல் போய்விடுகிறது. இவ்வாறு தோன்றி மறைந்த நிலைக்கு ப்ரத்வம்ஸ அபாவம் என்று பெயர். குடம் இருக்கும்போது ப்ரத்வம்ஸ அபாவம் இல்லை. குடம் அழிந்த பிறகே ப்ரத்

வம்ஸ அபாவம் ஏற்படுகிறது. ஆகையால் ப்ரத்வம்ஸ அபாவத்திற்கு ஆதி உண்டு. ஆனாலும் இதே குடம் மறுபடியும் எப்பொழுதும் உண்டாகாதபடியால் ப்ரத்வம்ஸ அபாவத்திற்கு முடிவு இல்லை.

இதை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு வேறு பலகோட்பாடுகளையும் நாம் இத்துடன் சேர்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும், சீர்தூக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட வாதம் ஒரு வக்கீலின் குயுக்தியான, குதர்க்கமான வாதம் போன்று தோன்றுகிறது. ஆனால் அதில் நல்ல நியாயங்கள் அடங்கியுள்ளன. **न असतः विद्यते भावः** இல்லாததற்கு இருப்பு இல்லை. பாவம் என்றால் இருப்பு என்று பொருள். வாத்ஸல்ய பாவம், சகா பாவம், தாஸ்ய பாவம் என்று சொல்லுகிறோம். பாவம் என்றால் இணக்கம், மனப்பான்மை, எண்ணுதல் என்று பொருள். இவ்வுலகம் அவரவர் மனதின் புறத்தோற்றம். மனதிற்கு அன்னியமாகப் பிரபஞ்சம் இல்லை என்பது ஞானியின் கோட்பாடு. உலகில் உள்ள நலம் கேடு நம் மனோ பாவத்தைப் பொறுத்ததாகிறது.

அக்ஞானம், அவித்தை, மாயை, மலம், பாசம் என்கிற பல பதங்களால் விளக்கப்படும் பொருள் ஒன்றே. இவைகள் கீழானவைகள் என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் அகண்டமான பொருளில் இவைகள் இறைவனின் பெருமை, விபூதி, மகிமை ஆகின்றன. இவைகள் பிரபஞ்ச நடைமுறைக்கு வேண்டியவைகள் ஆகின்றன. இறைவனை விட்டு இவைகளைப் பிரிக்க முடியாது. பதி, பசு, பாசம் என்று சைவத்தில் சொல்லப்படும் முப்பொருள்களும் உண்மை. அநாதி என்று சொல்லுவார்கள். இது துவைதநிலை. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம் (மறைத்தல்), அனுக்கிரஹம் (அருளல்) என்று இறைவனுக்குப் பஞ்சகிருத்தியங்கள் பகர்வார்கள். மறைப்பவனும் அவனே, அருளுபவனும் அவனே. மறைப்பது அக்ஞானம் எனப்படுகிறது. அருளுக்குப் பாத்திரமாகிறபொழுது அக்ஞானம் நசித்து விடுகிறது.

முக்தோபிமானி முக்தோஹி
பத்தோ பத்தோபிமானி
கிம்வதந்தி இஹ சத்யேயம்
யா மதி ஸா கதிர் பவேத்

முக்தன் என்று எண்ணினால் முக்தன், பந்தப்பட்டவன் என்று எண்ணினால் அது பந்தமே. இதற்கு மேல் என்ன சொல்லவேண்டும். மனம் எப்படியோ அப்படியே மார்க்கம் என்பது சத்தியம்.

மனம் ஏவ மனுஷ்யாணும் காரணம்
பந்த மோக்ஷயோ:

மனிதனின் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணம் மனமே.

நெருப்பு சுடுகிறது. அந்தச் சூட்டை நாம் புத்திசாலித்தனமாக, நம் வாழ்க்கைக்குப் பயன்படும்படியாக உபயோகித்துக் கொள்கிறோம். நெருப்பு ஏன் சுடுகிறது என்பதற்கு விடை இல்லை. கம்பிச்சுருளுக்குள் காந்தத்தைச் சுழற்றினால் மின்சாரம் உண்டாகிறது. அதைப் புத்திசாலித்தனமான உபாயங்களால் நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். ஏன் மின்சார சக்தி உண்டாகிறது என்பதற்கு விடை இல்லை. அது அதன் சுபாவம், இயல்பு எனப்படுகிறது. சுபாவத்தையும் அதை உடைய பொருளையும் பிரிக்க முடியாது.

ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என்று சரீரம் மூன்று வகையாகப் பிரித்து விளக்கப்படுகிறது. இந்த ஸ்தூல சரீரத்தை நாம் நன்கு அறிகிறோம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற அந்தக் கரணம் சூக்ஷ்ம தேகம் எனப்படுகிறது. எல்லா உணர்வுகளும், எல்லா ஆராய்ச்சியும் விசாரமும், எல்லாச் சிந்தனைகளையும் செய்வது மனது. இது நம் சொரூபத்தின் ஒரு பகுதி என்பதும் நமக்கு விளங்குகிறது. ஜீவனின் ஸ்தூல சரீரம் இந்த ஜன்மத்துடன் அழிந்துவிடும். சூக்ஷ்ம சரீரம் முன்பு பல ஜன்மாந்தரங்களில் செய்த வினைகளின் சம்ஸ்காரங்களின், அனுபவங்களின் தொகுப்பாக உருவானது. இனியும் அது மாறி அமைந்து கொண்டேபோய்த் தெய்வ நிலையை, அத்வைத நிலையை அடையக் கூடியது. அக்ஞானமே காரண சரீரம் எனப்படுகிறது. கடலுக்குள் மேலே எழுந்த ஒரு நீர்ப்பகுதி தன்னை அலையாகப் பாவித்துக் கொண்டது, நினைத்துக் கொண்டது. பரமாத்மாவிடமிருந்து இப்பிரபஞ்சம் முழுவதும் தோன்றி வந்துள்

ளது. இப்பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் அனைத்தும் தங்களை ஜீவர்களாக, பரமனுக்கு வேறானவர்களாகக் கருதிக்கொண்டன. இந்த நிலை அக்ஞானம் எனப்படுகிறது. அக்ஞானம் என்றால் ஞானம் இல்லை என்று பொருள். அன்பை வேறாகமாற்றி, தவறுதலாக அறிகிறது என்று பொருள். அறிதல் ஞானத்தின் செயல் ஆகும். திரிவுபட்டு அறிகிறது எனப்பொருள் கொள்ளலாம். சூரியனிடமிருந்து கிரணங்கள் கிளம்பி வந்து உலகுக்கு ஒளி ஊட்டுகின்றன. சூரியன் தன்மகிமையை அங்ஙனம் விளக்குகிறது, மேகம் அனேககோடி தாரைகளாக, மழைத்துளிகளாக உலகை அடைந்து அதை ஊட்டி வளர்க்கிறது. அங்ஙனம் அது தன் அருளை விளக்குகிறது. அங்ஙனம் பரமாத்மா இத்தனை கோடி உயிர் வகைகளாகத் தோன்றி அலகிலா விளையாட்டு விளையாடிக்கொண்டிருக்கிறது. இறைவன் பேரறிவும், பேராற்றலும், அன்பும் பெருங் கருணையும் இங்ஙனம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது கடவுள் சம்பந்தப்பட்ட உண்மை. ஆனால் ஜீவனே தன் மூலநிலையை, பெருமையை மறந்து வாழ்கிறான். இப்படி ஜீவனாக வந்த நிலைமை, பாவம், நினைப்பு அக்ஞானம் எனப்படுகிறது. பிரபஞ்ச தத்துவத்தோடு சீர்தூக்கினால் அது அனாதி. ஜீவன் சம்பந்தப்பட்டவரை அது ஒரு காலத்தில் தோன்றியது. அவன் மீண்டும் ஞான விழிப் படையும் போது அது மறைந்துவிடுகிறது. ‘அடடே நான் இதுநாள் வரை தப்பாக அல்லவா நினைத்துக் கொண்டிருந்து விட்டேன். நீதானா அது, அப்படியா அது’ என்று உண்மையான விஷயம் தெரிய வரும் போது லௌகிக வாழ்வில் நாம் சொல்லுகிறோம். பாரமார்த்திக வாழ்விலும் இப்படியே நடக்கிறது. என்று துவங்கியது என்று குறிப்பிட்டுச் சொல்லமுடியாவிட்டாலும் என்றோ ஒரு நாளைக்கு இந்த ஜீவன் கடவுளை விட்டுப் பிரிந்து தன்னைச் சிற்றுயிராகப் பாவித்து, கருதி வாழ்வைத் துவங்கியிருக்க வேண்டும். பிரிந்து என்கிறபதம் பொருந்தாது. ஆயினும் விஷயங்களை விளங்கிக்கொள்வதற்காக இங்ஙனம் எல்லாம் சொல்லவேண்டியதாகிறது. அனுபவத்தில் உணரவேண்டிய ஒன்றைவாக்கால் விளக்கிக்கொண்டேபோவது குழப்பத்தையே வளர்க்கிறது. பிறகு பரிணமத்தில் படிப்படியாக மேலே வந்து முடிவில் அது அக்ஞானம் நீங்கி முக்தி அடைகிறது. அந்த ஜீவன் சம்பந்தப்பட்ட வரை அக்ஞானம் தோன்றி மறைந்தது.

‘சத்திய மேவ ஜயதே ந அன்ருதம்’ பொய் வெல்லாது, உண்மையேமுடிவில் வெல்லும், நிலைபெறும். ராமஜெயம். ராவணன் ஒருநாளும் ஜெயிக்க முடியாது. ராமனே முடிவில் வெற்றி பெறுவான். வாய்மையே வெல்லும். இது நமது தேசிய இலட்சியம். உண்மையே பேசிக் கெட்டுப் போனதாகவோ, பொய் பேசிச் செல்வாக்குடன் வாழ்ந்ததாகவோ இதுவரை சான்று கிடையாது. சத்தியம், தர்மம், நீதி, நேர்மை முதலிய தெய்விகக் குணங்கள் யாரிடம் நிலைபெற்றிருக்கின்றனவோ அவர் சமுதாயத்தில் ஒரு நல்ல அந்தஸ்தில் இருப்பார்; சந்தேகமே இல்லை. பெயர், புகழ், கீர்த்தி, பதவிக்காக உண்மையைக் கடைப்பிடிப்போரும், நீதியாக, நேர்மையாக நடப்போரும் இடுக்கண் வரும் பொழுது அவர்கள் உண்மை நிலை நிச்சயம் வெளிப்பட்டுவிடும். இராமன் சத்தியமூர்த்தி. ஆகவே அசுர தபோபலன் பெற்ற இராவணன் கூட சத்தியத்தின் முன் தலைகவிந்து அழிந்து போகநேரிட்டது. பாண்டவர்கள் ஐவர். ஆனால் அவர்கள் தர்மத்தின் பிரதிநிதிகள். ஆகவே தீயசக்திகள்கொண்டகௌரவர்களால் பாண்டவர்களை அணுகக்கூட முடியவில்லை. அதாவது தீமை வெல்லாது நல்லதே, தர்மமே முடிவில் வெற்றிபெறும், நிலைநிற்கும். சூரசம்ஹாரம் நிச்சயம், அறியாமை என்ற சூரசம்ஹாரம் நிகழ்ந்தே தீரும். வேதாந்தபூர்வமாகவும் பக்திபூர்வமாகவும் எப்படிச் சொன்னாலும் உண்மை ஒன்றே. வாதம், பித்தம், சிலேத்துமம் முதலியவைகளினால் உடலுக்கு ஏற்படுகிற வியாதி எப்படி ஏற்படுகிறது என்று தெரியாவிட்டாலும் வைத்திய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள மருந்துகளைச் சாப்பிட்டு வியாதி நீங்கப் பெறுகிறோம். அஃதேபோன்று அக்ஞானத்திற்கு, மனதின் தோற்றத்திற்கு, மாயைக்கு மூலகாரணம் தெரியாவிட்டாலும் வேதாந்த சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட மஹாவாக்கியங்களினால் ஞானம், விழிப்பு ஏற்பட்டு அக்ஞானம் நாசமடைகிறது என்பது தீர்மானம், நிச்சயம்.

விநாயகர் அருளை வேண்டிடுவோம்

(சுவாமி துருவானந்தர்)

பிள்ளையார் :

குழந்தை என்றால் கொழு கொழுவென்று இருக்கவேண்டும். எலும்பும் தோலுமாய் உள்ள குழந்தை பார்க்க அழகாய் இராது. அங்ஙனம் வடிவத்தில் யானை முகத்தைக் கொண்டு தொந்தியும், தொப்பையுமாக விநாயகர் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறார். பார்க்கப் பார்க்கச் சலிப்புத் தோன்றாத வஸ்துக்கள் சில உள்ளன. யானை, சந்திரன், சமுத்திரம்— இவற்றை எவ்வளவு நேரம், யார் பார்த்தாலும் அலுப்புச் சலிப்பில்லாது பார்த்துக்கொண்டே இருக்கலாம். அதனால்தான் குழந்தை சாமியாகிய விநாயகர் யானைமுகத்துடன் நமக்குக் காட்சி தருகிறார். அவருடைய ஸ்தூல தோற்றம் பெரிய தத்துவங்களுக்கு விளக்கமாக இருக்கிறது. அவருடைய முகம் யானை முகமாய் இருந்தாலும் அதை நன்கு கூர்ந்து கவனித்தால் ஓங்காரவடிவம் போன்று இருப்பதை அறியலாம். அவருடைய வடிவத்தில் காதுகள் இரண்டும் பெரியவைகளாகத் தென்படுகின்றன. வாய் இருப்பதேதெரியவில்லை "மானுடா, நீ ஏராளமாகக் கேட்டுப் பழகு. எப்போதும் கேட்டுப் பழகு. ஆனால் வாய் இருப்பதே தெரியாத அளவு குறைவாகப் பேசிப்பழகு" என்ற தத்துவத்தை அவர் தம்மூலம் விளக்குகிறார். இமயம் முதல் குமரிவரையிலும் கணபதி வழிபாடு எங்கும் உள்ளது. புறச் சமயம் என்று கூறக்கூடிய பௌத்த மதத்திலும் விநாயகர் வழிபாடு உள்ளது. ஆற்றங்கரைகளில் அரசமரத்தடியில் அவர் ஆனந்தமாய் வீற்றிருப்பதைக் காணலாம். எப்படி அவர் எளிதில் தோன்றுகிறாரோ அதே மாதிரி அவரை வழிபடுவதும் எளிது. அவரை வழிபட ஷோடசோபசார பூஜை முறையோ, வேறு எதுவுமே தேவை இல்லை. சிறிது சாணத்தைப் பிடித்து அதில் அறுகம்புல்லை வைத்து வழிபட்டாலும் போதுமானது.

ஆனைமுகக் கடவுளுக்கு அறிவு அதிகம். அதனால் அவரை உபாசனை பண்ணிய ஔவையார் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்தார். அன்று அவர் பாடி வைத்த அகவல்களை, வெண்பாக்களை இன்று படிக்கிறவர்கள் அறிஞர்களாகின்றனர். விநாயகர் பூஜை பண்ணுகிறவர்களுக்குப் புத்திக் கூர்மை வளரும் என்று சொல்லுவதற்குக் காரணம் இது தான். "புத்திமான் பலவான் ஆவான்" என்றுசொல்லுகிறோம். ஒரு நெருக்கடியில் தீர்க்க முடியாத பிரச்னை வரும்பொழுது யாரொருவர் இலகுவாக அதனைத் தீர்த்து விடுகிறாரோ அவரைப் புத்திசாலி என்கிறோம். இந்த விபூதி விநாயகர் மூலம் வருகிறது. இதை விளக்கப் புராணக்கதை ஒன்று உண்டு. அகிலாண்டங்களைச் சுற்றி வருபவருக்குக் கனி ஒன்று வழங்குவதாகத் தந்தை சிவனார் மைந்தர்களிருவரிடம் கூறினார். மயில் வாகனன் கணநேரத்தில் சுற்றிவரப் போய்விட்டான். ஆனால் வேழமுகத்தோன் என்ன செய்வான் பாவம். அவன் அறிவு வேலை செய்யத் தொடங்கியது. பார்வதி பரமேசுவரரை வலம் வந்தான். தங்களுக்கு அந்நியமாக உலகம் எங்கே உள்ளது என்று சொல்லிக் கொண்டே அம்மை அப்பனை வலம் வந்து அரிய கனியை வாங்கி அருந்தினான். புத்தி சாதுர்யம் உள்ளவர்கள் எந்த இடத்திலும் சமயோசிதம் போல் நடந்து தங்கள் காரியத்தைத் சாதித்துக்கொள்வார்கள்.

விநாயகருக்குச் சூட்டப்பெற்ற நாமங்களுள் वरप्रदाय नमः வரப்ரதாய நம: என்பது ஒன்று. 'விரும்பியதைக் கொடுப்பவன்' என்பது இதற்குப் பொருள். நாம் விரும்புவதை நமக்கு வகுத்தளிப்பதில் அவனுக்கு நிகர் அவனே. மன்னன் சேரமானும், சுந்தரமூர்த்தி நாயனாரும் கயிலைக்குப் போய்க்கொண்டிருந்தனர். அப்போது தமிழ் மூதாட்டி ஔவையார் விநாயகருக்குப் பூஜைசெய்துகொண்டிருந்தார். சேரமானும், சுந்தரரும் ஔவையாரைத் தம்மோடு கயிலைக்கு அழைத்துச் செல்லலாமென விரும்பினர். ஆகவே அம் மூதாட்டியை விரைந்து பூஜை செய்யுமாறு வேண்டினர். ஆனால்ஔவையோ "கைலாசம் போகவேண்டும் என்பதற்காக எந்திரம் போன்று வேகமாகப் பூஜை பண்ண வேண்டுமா? நீங்கள் வேண்டுமானால் முதலில் போங்கள். நான் வழக்கம்

போன்று முறையோடு பூஜை செய்த பின்னர் வருவேன்" என்று அவர்களை அனுப்பி வைத்துவிட்டாள். மனநிறைவோடும், பக்தியோடும் பண்ணிய பூஜையை மெச்சிய பிள்ளையார் ஔவையைத் தம் துதிக்கையால் ஒரே தூக்கில் தூக்கிக் கைலாசத்தில் வைத்துவிட்டார். சேரமானும், சுந்தரரும் கைலாசம் போகும் முன்னரே ஆங்கு அவ் அம்மை இருப்பது கண்டு அதிசயித்து நின்றனர். பக்தியோடு பூஜை பண்ணுபவர்களை ஒரே தூக்காகத் தூக்கி முக்தியாம் பெருநிலைக்குக் கொண்டு சேர்ப்பது விநாயகருக்கு விளையாட்டுப் போன்றது. இதைக் கண்டுதான் அருணகிரிநாதர் :

ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முன்னாளில்
ஆடல்வெம்பரி மீதேறி மாகயிலையிலேகி
ஆதிஅந்த உலா ஆசுபாடிய சேரர்...... என்று பாடுகிறார்.

கேட்டதையெல்லாம் கொடுக்கும் கல்பதருவாக கணபதி இருந்தாலும் பெற்றதை முறைதவறிப் பயன்படுத்துபவர்களுக்கு அவன் உக்ர கணபதியாக இருந்து துன்பம் கொடுத்துத்திருத்தித் தம்மை அடையும்படி செய்வார். நம்மில் பலர்க்கு இறைவனிடம் எதைக் கேட்க வேண்டும் என்பது தெரியாது. மனதில் தோன்றியதையெல்லாம் கேட்டு வைத்துவிடுகிறோம். பிறகு அந்த இன்பத்தைத் தொடர்ந்து துன்பம் வருகிறபொழுது ஏன் இதைக் கேட்டோம் என்று நமக்கு நாமே சபித்துக்கொள்வதில்லையா! இப்படிப்பட்ட நிலை இராவணனுக்கும் ஒரு தடவை ஏற்பட்டது. சிவனைக் குறித்துச் சாமகானம் பாடினான் இராவணன். அதைக் கேட்டு மகிழ்ந்த சிவனார் 'வேண்டும் வரத்தைக் கேள்' என்றார். கயிலாயத்தில் சிவன் பூஜை செய்யும் சிவலிங்கத்தை இலங்கைக்குக் கொண்டு போக வேண்டுமென்றான். சிவலிங்கத்தை இலங்கை செல்லும் வரை எங்குமே கீழேவைக்காது எடுத்துச் செல்லலாம் என்றார். இராவணன் அதை எடுத்து வந்தபொழுது சந்தியாவந்தனம் பண்ணவேண்டிய நேரம் வந்ததை அறியலானான். இவனுடைய நோக்கத்தை அறிந்த ஆனைமுகக் கடவுள் ஆட்டிடையன் போன்று ஆங்குத் தோன்றினார். அவரிடம் இராவணன் அச் சிவலிங்கத்தைக் கொடுத்துச் சில நிமிடங்கள் வரை கீழே வைக்காமல் கையில் வைத்திருக்கும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போனான். சந்தியாவந்தனம் முடிந்து வந்து பார்த்தான். ஆட்டு இடையன் உருவில் வந்த கணபதி அவ் லிங்கத்தைத் தரையில் வைத்துவிட்டு ஓடிவிட்டார். கீழே வைக்கப்பட்ட சிவலிங்கம் தரையோடு ஒன்றி விட்டது. இராவணன் எண்ணம் நிறைவேறாது போய்விட்டது.

ஓம் பாலக ப்ரியாய நம: என்று பக்தர் உலகம் அவனைப் போற்றுகிறது. ஏன்? அவன் சிறுவர்களுக்குப் பிரியமானவன். மற்றெல்லாக் கோயில்களைவிடப் பிள்ளையார் கோயிலில் மட்டும் பிள்ளைகளுக்குத் தனி உரிமை இருக்கிறது. சிதறு தேங்காய் போடுகிறவர்கள் அத்தேங்காயில் பங்கு கேட்கமுடியாது. அவையனைத்தும் சுற்றியிருக்கும் குழந்தைகளுக்கே சொந்தம். கோயிலில் தருகிற பிரசாதங்களும் அப்படியே. ஆனால் இன்று நாம் காண்பதென்ன? விநாயகர் பெயரைச் சொல்லி தேங்காயை அடித்துச் சிதறினால் குழந்தைகள் எடுத்துவிடாதபடி பெரிய தொட்டிகள் கோயில் முன்னே வைக்கப்பட்டிருக்கின்றன. விழுகிற துண்டுகளனைத்தும் கோயிலுக்கே சொந்தம். பாவம் அப்பாவிக் குழந்தைகள் நின்று பார்த்துக்கொண்டே இருக்கவேண்டியதுதான். கோயிலில் தருகிற பிரசாதமாகிய சுண்டல், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல் முதலிய நைவேத்யப் பொருள்களும் கோயிலுக்கு வருகிற குழந்தைகளனைவருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. சில குழந்தைகளுக்கு நெல்லிக்காயளவு பிரசாதம் கிடைத்தவுடனே பட்டர் மாமாவின் மனம் மாறிவிடும். பிரசாதம் அனைத்தும் பணம் கொடுத்தவர்கள் வீட்டிற்குப் பார்சல் போட்டுப் பழங்களோடு போய்ச் சேர்ந்துவிடும். பாழும் பணம் படைத்தவர்கள் கடவுளைக்கூட விலை போட்டு வாங்கி தங்களுக்கே அவர் சொந்தம் என்றுகூடச் சொல்லிவிடுவார்கள் போலிருக்கிறது. கணேசனுக்குப் பக்தர்களாக இருப்பவர்களனைவரும் விளையாட்டுச் சிறுவர்களே. தனியுடைமை பொது உடைமையாக்கப்பட வேண்டும் என்ற கருத்து முக்கியமானது. வசதி படைத்தவர்கள் பொருளை ஆலயத்திற்கு அளிக்கவேண்டும். அப்பொருள்மூலம் ஆண்டவனுக்கு நிவேதனம் முறையாக நடைபெற

வேண்டும். நைவேத்தியம் செய்யப்பட்ட பிரசாதம் குழந்தைகளுக்கும் ஏனையோருக்கும் சமமாக விநியோகிக்க வேண்டும். இதில் இரண்டு வித நன்மைகள் இருக்கின்றன. பொருளை வழங்கியவன் 'நான் கொடுத்தேன்' என்ற அகங்காரத்தையும், சுயநலத்தையும் இழக்கிறான். வாங்கியவர்களும் ஒரு தனி மனிதனிடம் வாங்கினோம் என்ற எண்ணமில்லாது இறைவனுடைய பிரசாதத்தைப் பெற்றோம் என்று மனம் உருகிப் பெறுகின்றனர். ஆலய வழிபாட்டில் அமைந்த சிறப்பு இதுவாம்.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்பது ஒரு பழமொழி. தெய்வத்திற்கு நிகர் குழந்தைகள். காரணம் அகங்காரம் அற்ற இடம் ஆண்டவன் சந்நிதானம் தானே! குழந்தைக்கு இயல்பாய் அமைவது சரளசுபாவம். வயது ஏற ஏற வக்ரபுத்தி தோன்றி உண்மை சொரூபத்தை மறைக்கிறது. குழந்தையின் பாங்கு படைத்தவர்களுக்குப் பரம்பொருள் தரிசனம் கிடைக்கும் என்பதற்குச் சோழ நாட்டில் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. திருநாறையூர் என்ற ஊரில் ஒரு பூஜாரி இருந்தார். அவர் விநாயகர் கோயிலில் பூஜை செய்து வந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பள்ளி சென்று கல்வி கற்று வந்தான். அந்தப் பூஜாரி ஒருதடவை அவசரமான காரியத்தை முன்னிட்டு வெளியூர் செல்ல வேண்டி நேரிட்டது. தம் குமாரனைக் கூப்பிட்டு 'அடே, நான் வெளியூருக்கு அவசரமாகப் போகவேண்டியுள்ளது. வருவதற்கு மாலைப் பொழுது ஆகும். ஆகவே இன்று காலை செய்ய வேண்டிய விநாயகர் பூஜையைச் செய்து விடு. நான் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனார். தந்தையிட்ட பணியைச் செவ்வனே முடிக்க எண்ணிய சிறுவன் விநாயகர் கோயிலுக்குச் சென்றான். ஏற்கனவே சாத்தியிருந்த வாடிப்போன மலர்களையெல்லாம் அப்புறப் படுத்திவிட்டு நீர் கொண்டுவந்து விநாயகர் விக்ரஹத்திற்கு நீராட்டினான். உலர்ந்த துணியை விநாயகருக்கு அணிவித்து அன்றலர்ந்த மலரை எடுத்து அவருக்குச் சூட்டி அலங்கரித்தான். தன் அன்னை சமைத்துத் தந்த அன்னத்தை நைவேத்யமாகப்படைத்து விநாயகப்பெருமானை அருந்துமாறு வேண்டினான். தந்தை பண்ணிய பூஜையை அவன் இதுவரை பார்த்தது கிடையாது. ஆகவே தினமும் ஆனைமுகத்தோன் ஆகாரம் ஏற்கிறார் என்றுதான் அவன் எண்ணி வந்தான். ஆனால் அவன் எண்ணியது போன்று பாத்திரத்திலிருந்த அன்னம்குறைந்தபாடில்லை விநாயகரிடம் அழுதான், தொழுதான், கெஞ்சினான், காலில் விழுந்து மன்றாடினான். "இது நாள்வரை தந்தை ஊட்டியதை ஏற்ற நீங்கள் நான் இன்று கொடுப்பதை உண்ணுங்கள். இல்லையெனில் என் அன்னைக்கு என்ன பதில் கூறுவேன்?" எனப் பலவாறு புலம்பினான். காலம் கடந்துகொண்டேயிருந்தது. பிள்ளையார் இவன் எண்ணியதுபோன்று ஆகாரத்தை ஏற்கவில்லை. உணவு வைத்தது வைத்தபடியே இருந்தது. ஒரு கணம் சிந்தித்தான். பிறகு கூறினான். "விநாயகப் பெருமானே! நீங்கள் ஏன் உணவு ஏற்கவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் காலதாமதமாகப் போய் ஆசிரியரிடம அடிவாங்கித் துன்பப் படவேண்டும் என்றுதானே நினைக்கிறீர்கள். இதோ அதே துன்பத்தை இங்கேயே பெற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே விநாயகருடைய திருவடியில் தலையை வைத்து முட்டினான், மோதினான். ஆ! என்ன ஆச்சரியம்? எவ்வளவு நேரம்தான் பிள்ளையாரப்பன் பார்த்துக்கொண்டிருப்பார். உடனே தம் துதிக்கையைக்கொண்டு அச்சிறுவனைப் பிடித்து அங்ஙனம் முட்டாதவாறு தடுத்தார். "குழந்தாய்! வருந்தாதே! இதோ அருந்துகிறேன் பார்," என்று சொல்லிப் பாத்திரத்திலுள்ள அன்னத்தையெல்லாம் துதிக்கையால் சுழற்றி எடுத்து உண்டு காலி பண்ணிவிட்டார். சிறுவன் மகிழ்ந்தான். ஆனால் தயக்கம் ஒருபக்கம். "சுவாமி முதலிலே இந்த உணவைச் சாப்பிட்டிருந்தால் இவ்வளவு நேரம ஆகியிருக்குமா? இனி நான் தாமதமாகப் போனால் ஆசிரியர் அடிப்பாரே!" என்றான் குழந்தாய் இனி நானே உனக்கு அனைத்தையும் புகட்டுகிறேன். வேத வேதாந்தங்களிலுள்ள சூட்சும உண்மைகளையெல்லாம் தெள்ளத் தெளிவாக உனக்குப் புகட்டுகிறேன். என்னை நம்பியே இருந்த உனக்கு இன்று முதல் நம்பியாண்டார் நம்பி என்றே பெயர் வழங்கட்டும் என்று ஆசீர்வதித்தார்.

பிள்ளையாரை வழிபட்டு அருள் பெற்ற சிறுவன் நம்பியாண்டார் நம்பிக்குக் கணேசனின் அருள் எங்ஙனம் வந்தது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆண்டுதோறும் விநாயக சதுர்த்தி வருகிறது. விநாயகருக்கு முன்பு, அவல், பொரி, பட்சணவகைகள் முதலிய தின்பண்டங்களை அவருக்குப் படைக்கிறோம். பிறகு அவரை மறந்து விடுகிறோம். ஆண்டுக்கு ஒரு தடவை அவரை நினைப்பதை விட்டு நாள்தோறும் க்ஷணந்தோறும் அவரை நினைக்கவேண்டும். விநாயகரைப் பற்றிய பாடல்களைக் குழந்தைகளுக்கு இசையோடு பாடச் சொல்லித்தர வேண்டும். மனதைப் பாழ்படுத்தும் சினிமாப் பாடல்களைப் பெற்றோர்கள் பாடவும் கூடாது, குழந்தைகளை பாடும்படி தூண்டவும் கூடாது. நங்கூரம் போட்டுக்கொண்டு எவ்வளவுதான் துடுப்புப் போட்டாலும் படகு ஓர் அடிகூட நகராது. அங்ஙனம் பொய், பித்தலாட்டம், நம்பிக்கைதுரோகம், சோம்பேறித்தனம் நல்லவனைப்போல் உலகுக்குக் காட்டி வெளிவேஷம் போடுதல் முதலிய இழிகுணங்களை நம்மிடம் வளர்த்துக்கொண்டு விநாயகரை எவ்வளவு வேண்டினாலும் அவர் அருள் கிட்டாது. இன்று நம் அரசாங்கத்தில் இதைத்தான் காண்கிறோம். கடவுள் நம்பிக்கைகொண்டு இப்படிப்பட்ட மோசக்காரர்களாக இருப்பதைவிடப் பகிரங்கமாகக் கடவுள் நம்பிக்கையில்லாவிட்டாலும் நல்ல பண்பே உருவான நாஸ்திகனாகயிருப்பது மேல். பக்தியோடு பகவானைப் பற்றி நினைக்கும்போது அவன் அருள் நம் மீது சுரப்பது திண்ணம்.

செய்திகள்

நிகழ்பவை:

18—8—79 சனிக்கிழமை யன்று இராமநாதபுரம் ஜில்லா, சிவகாசியில் வெள்ளையாபுரம் ரோடிலுள்ள ஸ்ரீ சாரதா ஆச்ரமத்திலும், *19—8—79*ஞாயிற்றுக்கிழமையன்று ராஜபாளையத்தில் K. S. R. கல்யாணமண்டபத்திலும் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒரு நாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

21—8—79 செவ்வாய்க்கிழமையன்று ஆடி விடுமுறைக்குப் பின் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

ஆகஸ்டு மாதம் 26ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று ஸ்ரீ விநாயக சதுர்த்தி ஆகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணி நேரம் அகண்ட நாமபஜனையும், நண்பகல் 11 மணியிலிருந்து 12 மணிவரை ஐக்கிய வணக்கமும், மாலை 7 மணிக்குமேல் மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து விநாயகர் பூஜையையும் செய்து, விநாயகசதுர்த்தியைக் கொண்டாடுவார்கள்.

9—9—79 ஞாயிற்றுக்கிழமையன்று வட ஆற்காடு ஜில்லா வேலூர் அருள் நெறிச் சங்கத்தின் முதல் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கி, ஸ்ரீ வேங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி திறந்தவெளி அரங்கில் மாலை 6-30 மணிக்கு **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** சொற்பொழிவாற்றுவார்கள்.

10—9—79 திங்கட்கிழமை காலை 10-30 மணி முதல் 11-30 மணிவரை வடஆற்காடு ஜில்லா கீழ் அரசம்பட்டு அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு அறவுரை நிகழ்த்துவார்கள்; அன்று மாலை 3-30 மணிமுதல் 4-30 மணிவரை வடஆற்காடு ஜில்லா வேலூர் ஸ்ரீ வேங்கடேஸ்வரா மேல் நிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கு **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** அறவுரை நிகழ்த்துவார்கள்.

செப்டம்பர் மாதம் 12ஆம் தேதி புதன் கிழமையன்று ஸ்ரீ ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணி நேரம் அகண்ட நாமபஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணிவரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம் - பிரசார விலை		ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை - பிரசார விலை		... 12-00
ஞானயோக விளக்கம்		... 8-00
ராஜயோக விளக்கம்		... 8-00
பக்தியோக விளக்கம்		... 6-00
பரமஹம்சரின் பெருமை		... 6-00
விவேகானந்த விவரணம்		... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		... 4-00
விவேகானந்த உபநிஷதம்		... 4-00
கடவுளின் வடிவங்கள்		... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II		... 3-50
தினசரி தியானம் - பிரசார விலை		... 3-50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை		... 3-00
அனுஷ்டான வேதாந்தம்		... 3-00
எதிர்கால இந்தியா		... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்		... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம்		... 2-00
கண்ணன் என்னும் கடவுள்		... 2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம்	ஷை	... 3-00
சின்மயானந்த குரு	ஷை	... 3-00
ஆனந்தமானபரம்	ஷை	... 3-00
சுகவாரி	ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	... 3.00
எங்குநிறைகின்றபொருள்	ஷை	... 2-50
பரசிவ வணக்கம்	ஷை	... 1-00
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	... 1-50
பஜனைப் பாடல்கள்		... 1-50
சந்நியாசி		... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்		... 1-00
இராவண தத்துவம்		... 1-00
சகோதரி நிவேதிதை		... 1-00
காயத்ரீ		... 1-00
வாலிமோக்ஷம்	(நாடகம்)	... 1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்		... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		... 1-00
நோய்க்கு இடம் கொடேல்		... 0-80
நன்மக்களைப் பெறுதல்		... 0-80
பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்)		... 0-80

*ஆத்ம சக்தி		ரூ. 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?		... 0-75
*மனிதனது நிஜசொரூபம்		... 0-70
*சக்தி தத்துவம்		... 0-70
*சிவ தத்துவம்		... 0-70
பிரஹ்லாதன்	(நாடகம்)	... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்		... 0-60
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்		... 0-60
*ஆலய வழிபாடு		... 0-60
*சூரிய நாராயணன்		... 0-50
*முருகக் கடவுள்		... 0-50
*விஷ்ணு தத்துவம்		... 0-50
தெய்வீக மகிமைகள்		... 0-50
சைவன் யார்?		... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது		... 0-50
மார்க்கண்டேயன்	(நாடகம்)	... 0-40
தபோபலன்	(நாடகம்)	... 0-40
*கணபதி		... 0-40
வர்ணாச்ரம தர்மம்		... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		... 0-30
The Bhagavad Gita (9th Imp.)		... 15-00
The Indian National Education		... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram		... 8-00
Ramakrishna Lives Vedanta		... 8-00
Facets of Brahman or The Hindu Gods		... 5-00
Daily Divine Digest (DELUXE)		... 4-50
Daliy Divine Digest (Ordinary)		... 2-50
Mahabharata (with plastic cover		... 4-50
Ramayana	(do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)		... 4-00
Sri Vishnu Sahasranama Stotram		... 4-00
Siva Sahasranama Stotram		... 3-50
The Bhagavad Gita (Small Size)		... 3-00
Hinduism Hosts Christianity		... 3-00
Holy Bible—In the Light of Vedanta		... 1-50
*Introducing the Gita		... 1-50
TAT TVAM ASI (*That Thou Art*) IN Tayumana Swami		... 1-00
*Key to Higher Life		... 0-75
*The Teacher		... 0-60
*The Student		... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-25ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

அந்தர்யோக விவரங்கள்

[பொருளடக்கத்தின் பின்பக்கத் தொடர்ச்சி]

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 2—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த ஆச்ரமம்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி : நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சி ஜில்லா—கைலாசபுரத்தில் 2—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : பாய்லர் பிளாண்ட் ஆரம்பப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் நண்பகல் 1-00 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 2—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சாத்தூர் எட்வர்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி (பஸ் ஸ்டேண்டுக்கு எதிரில்)
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

திருச்சி ஜில்லா—துறையூரில் 2—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 9—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல் நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—ஓமலூரில் 16—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : குப்புசாமி செட்டியார் ஆரம்பப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—உசிலம்பட்டியில் 16—9—79 ஞாயிற்றுக்கிழமை

இடம் : நாடார் சரஸ்வதி உயர்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி : பகல் உணவுக்கு ரூ. 1-25 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.